ஜனவரி 2012, ஸபர் 1433
மலர்: 38 இதழ்: 01

# அல்ஹஸனாத்

الحسنات إسلامية شهرية تصدرها الجماعة الإسلامية السريلانكية

நூலகம் 17 JAN 2012 நகரசபை யாழ்ப்பாணம்
PUBLIC LIBRARY JAFFNA

## அறிந்தோரும் அறியாதோரும் சமமாவார்களா?



## அமெரிக்கப் படையின் வெளியேற்றமும் பக்தாத் குண்டு வெடிப்பும்

40/-
ISLAMIC MONTHLY இஸ்லாமிய இலட்சியக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# After O/L, What's Next ?

## Foundation in Business & IT

- Diploma in Information Technology
- Diploma in Web Design
- Diploma in Graphic Design
- Diploma in Business Management
- Diploma in Accounting & Book Keeping
- Diploma in Hardware Engineering
- Diploma in English
- IELTS - Preparatory Course
- Final Project

தற்போது எனக்கு Degree Foundation தகைமை உள்ளது

4 மாதங்களில் 8 டிப்ளோமா சான்றிதழ்களை பெற்றுள்ளேன்!

க.பொ.த உ/த தகைமை இல்லாமலேயே என்னால் மேற்படிப்பை மேற்கொள்ள முடியும்!!

நான் ஆங்கில அறிவு, கணினி அறிவு, முகாமைத்துவம் மற்றும் கணக்கியல் அறிவில் முன்னேற்றமடைந்துள்ளேன்.

ஒரு முதர் தரமான நிறுவனமொன்றில் வேலை செய்வதற்கு தேவையான அனைத்து தகுதிகளையும் பெற்றுள்ளேன்!!

நான் எனது நண்பர்களையும் விட முன்னிலையில் நிற்கிறேன்.

**IBS Campus** ற்கு நன்றி!!! நான் கல்வித் தகைமை பெற்றுள்ளதோடு, எதிர்காலத்தை நம்பிக்கையுடன் எதிர் கொள்ளவும் தயாராக இருக்கிறேன்!



COLOMBO 0774 271 384

KANDY 0772 139 599

மேலும்

## இலங்கையில் முதன் முறையாக

### சர்வதேச அங்கீகாரம் பெற்ற ஆசிரியராவதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம்



4 தகைமைகளை 06 மாதத்தில் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பம் IBSCampus ல் மட்டுமே!

- Diploma in Child Psychology
- Tertiary and Vocational Education Commission — National Certificate in Pre-School Teaching
- AMI — The Association Montessori International
- City & Guilds — Diploma in Training Skills

*#67, Kawdana Rd, Dehiwala TP : 011 5522188/488*

*#524, Peradeniya Road, Kandy TP: 0815636377*

*E mail : info@ibslanka.com Web : www.ibslanka.com*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

بسم الله الرحمن الرحيم

"உங்களிடையே பண்பு நலன்களும் வசதிகளும் உடையவர்கள் உறவினர்களுக்கும் வறியவர்களுக்கும் அல்லாஹ்வின் பாதையில் ஹிஜ்ரத் செய்தவர்களுக்கும் (எதுவும்) கொடுத்து உதவ மாட்டோம் என்று சத்தியம் செய்ய வேண்டாம். (அவர்கள் தவறு செய்திருப்பின்) அதை மன்னித்துவிட வேண்டும். (அதைப்) பொருட்படுத்தாமல் பொறுத்துக் கொள்ளவும் வேண்டும். அல்லாஹ் உங்களை மன்னிக்க வேண்டும் என்று நீங்கள் விரும்ப மாட்டீர்களா? மேலும் அல்லாஹ் மிக மன்னிப்பவன்; அன்புமிக்கவன்." (24: 22)


மலர்: 38 இதழ்: 01

ஜனவரி 2012 ஸபர் 1433

ISSN : 1391 - 460X


**சந்தா விபரம்**

உள்நாடு

தனிப் பிரதி: ரூபா 40.00

வருட சந்தா: ரூபா 600.00

ஆறு மாதம்: ரூபா 300.00

வெளிநாடு

இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு, சிங்கப்பூர்: 1100.00

மத்திய கிழக்கு நாடுகள்: 1400.00

இங்கிலாந்து, நியூசிலாந்து, அவுஸ்திரேலியா, மலேஷியா, ஜப்பான், கொரியா: 1500.00

ஐக்கிய அமெரிக்க நாடுகள்: 1800.00

• • •


வெளியீடு:
இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி



தொடர்புகளுக்கு:
அல்ஹஸனாத்
77, தெமட்டகொட வீதி, கொழும்பு-09, இலங்கை
தொலைபேசி: (011) 2689324 தொலைநகல்: (011) 2686030
மின்னஞ்சல்: alhasanath@gmail.com
இணையதளம்: www.alhasanath.net



அல்குர்ஆன் விளக்கம்
4-6 **அறிந்தோரும் அறியாதோரும் சமமானவர்களா?**
அஷ்ஷெய்க் தாஹிர் எம் நிஹால் (அஸ்ஹரி)

அல்ஹதீஸ் விளக்கம்
7-9 **இன்றைய இளைஞர்களும் மரியாதையும்**
அஷ்ஷெய்க் எச்.எம். மின்ஹாஜ் (இஸ்லாஹி)

தலையங்கம்
10-12 **சமூக ஒருமைப்பாட்டின் மையப்புள்ளி**
உஸ்தாத் ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர்

13-15 அமெரிக்கப் படையின் வெளியேற்றம்...
16-18 ஆட்சி பற்றிய இஸ்லாமிய சிந்தனை
19-20 அநாதைகளைப் பராமரித்தல்

குர்ஆன் வெளிச்சங்கள் 34-35
பலஸ்தீன்: 36-37
வேதங்களும் கீதையும்... 38-39
இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் 44-48
கரு உருப்பெறுவது 42ம் நாளில் 48-51
அய்மனின் தாய் 53-55

அந்நிஸா

வெரோனிகா 21-22
அநீதிக்கெதிரான குரல் 23-24
பேனாக்கள் பேசட்டும் 25
ஒரு ஞாபகத்துளி 27


அல்ஹஸனாத் இதழுக்கு சந்தாக்கள் அனுப்ப விரும்புவோர் குறிப்பிட்டு ALHASANATH என்ற பெயருக்கு Money Order எடுத்து தபாலகம் DEMATAGODA என குறிப்பிட்டு அனுப்பவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களது பரீட்சைகளுக்குப் பின்...

சிறந்த எதிர்காலத்தை நோக்கிய உங்கள் பயணத்தின் வெற்றிக்கு

கண்டியில்

**02 Months FULL TIME**

ஆங்கில பாடநெறி

## ENGLISH + IT & SKILLS TRAINING

**360 HOURS TRAINING**

- English - Basic to Advance (Reading/Writing/Listening/Speaking)
- IT - MS Office or Hardware Engineering

Admission Fee: 2,000/=

Course Fee: 19,500/=

Course Fee: 12,500/=

Can be paid in Installments

Duration: 03 Months

Monday - Thursday

8:30am - 12:30pm

1:00pm - 5:00pm

Diploma in

# Spoken English

**WITH GRAMMAR**

200 Hours Training

மேலதிக விபரங்களுக்கும் அனுமதிக்கும் | 0777 44 62 52

# GOLDEN COLLEGE

No.548, Peradeniya Road, (Near ARPICO Super Market) Kandy.

0812 20 55 44 / 0777 912 597 / 0718 03 29 67



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது பணி பற்றித் தெளிவு பெறுவோம்!

எமது இளைஞர்கள் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை எழுதிவிட்டு சிறிய ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கும் இவ் வேளையில், அதிலும் அந்த மாணவர்கள் கல்விக்கே ஓய்வு கொடுத்து விட்டு வேறு காரியங்களில் கவனம் செலுத்தத் தொடங்கும் இவ்வேளையில் பலஸ்தீன இளைஞர்களின் 'பணி' பற்றி அவர்கள் தெரிந்து வைத்திருப்பது பயனளிக்கும் எனக் கருதுகிறேன்.

யூத ஸியோனிஸ்டுகள் பலஸ்தீன முஸ்லிம்களை நாடற்ற சிறுபான்மை சமூகமாகவும் அகதிகளாகவும் ஆக்கிக் கொண்டிருக்கும் வேளையில், அவர்களது இராணுவத்திற்கு எதிராக 'கல் எறியும்' உத்தியொன்றை இஸ்லாமிய இயக்கம் அறிமுகப் படுத்தியது. இதனால் இராணுவத்தையே அழித்து ஒழித்து விடலாம் என்பதல்ல. மாறாக, போராட்ட உணர்வை ஒவ்வொரு பலஸ்தீன பிரஜையின் உள்ளத்திலும் பசுமையாக வைத்துக் கொள்வதற்கு அந்த உத்தி பயன்படுத்தப்பட்டது. அது இன்றளவிலும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படு கின்றது.

இஸ்லாமிய இயக்கம் முன்மொழிந்த இப் பணி, புதிய வரலாற்று நிகழ்வல்ல. அவர்கள் அல்குர்ஆனிலிருந்து கற்றுக் கொண்ட பாடம் அது. தாவூத் (அலைஹிஸ்ஸலாம்) அவர் கள் கோலியாத் என்ற மன்னனைக் கல்லெறிந்துதான் கொலை செய்தார்கள். அப்போது நபியவர்கள் ஓர் இளைஞ ராக இருந்தார்கள். தாவூத் நபியின் வாரிசுகள் எனத் தம்மைப் பறைசாற்றும் யூதர்கள், உண்மையில் இன்று கோலியாத்தின் ஸ்தானத்தில் இருந்து கொண்டு முஸ்லிம் உம்மத்தையே அழித்தொழிக்க முனைந்து செயல்படுகிறார்கள்.

எனவே, தாவூத் நபியவர்களின் உண்மையான தீனின் வாரிசுகளாகிய முஸ்லிம் இளைஞர்களுக்கு 'கல் எறியும்' தந்திரத்தைக் கற்றுத் தந்தது இஸ்லாமிய இயக்கமே. இக்கல்லெறியும் ஒவ்வொரு முஸ்லிம் ஆணும் பெண்ணும், தான் அல்லாஹ்வின் கட்சியில் இருப்பதையும் யூதர்கள் அல்லாஹ்வின் எதிரிகள் என்பதையும் மிக உறுதியாக நம்புகிறார்கள். எனவேதான் கல்லெறிகிறார்கள்.

இதில் எமது இளைஞர்களும் இஸ்லாமிய இயக்கங்களும் கற்றுக் கொள்ள வேண்டிய பாடம் ஒன்று இருக்கின்றது. இங்கு இஸ்லாமிய இயக்கம்தான் கல்லெறிகிறது என்பதல்ல. மாறாக, அது முழு முஸ்லிம் சமூகத்திற்கும் எதிரிகளை இனங் காட்டிக் கொடுத்து கல்லெறிய வைத்துள்ளது. இதன் மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ள 'ஹுர்ரிய்யத்', அதனை அடைந்து கொள் வதற்கான 'சாத்தியமான செயற்பாடு', அதில் நிலைத்திருக்கும் 'ஆன்மீகப் பலம்', அதில் அவர்கள் கொள்ளும் 'பெருமை', அதற்காகத் தம்மையும் தம் குழந்தை குட்டிகளையும் அர்ப் பணிக்கும் 'மனோ வலிமை' இவ்வனைத்தையுமே 'கல் எறியும்' பணி குறித்து நிற்கிறது.

புனித ஹஜ்ஜின்போது ஷைத்தானுக்குக் கல் லெறியும் கிரியையை அல்லாஹுத் தஆலா ஓர் அம்சமாக ஏற்படுத்தி வைத்துள்ளான். அங்கு மாத் திரம்தான் ஷைத்தான் இருக்கிறான் என்பதல்ல அதன் அர்த்தம். இப்றாஹீம் (அலைஹிஸ்ஸலாம்), இஸ்மாயீல் (அலைஹிஸ்ஸலாம்) ஆகியோர் இறை கட்டளையை நிறைவேற்றுவதில் காட்டிய ஆர்வத்தைக் குறிக்கும் நிகழ்வாக அது இருப்ப தனால், அதனை மீட்டும் இலட்சக்கணக்கான ஹாஜிகள் அந்த உணர்வைப் பெற்றுத் தம் வாழ்வில் ஷைத்தானை எதிரியாகக் கருதி, ஒவ்வொரு நகர் விலும் அவன் மீது கல்லெறிந்து, தம்மைப் பாது காத்துக் கொள்ள வேண்டும் என்பதே இங்கு அல்லாஹ் தஆலா நாடுவதாகும்.

குற்றம் நிரூபிக்கப்பட்ட விபசாரிகளைக் 'கல்லெறிந்து' கொல்வது இஸ்லாமிய சட்டமாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஈஸா நபியவர்களின் வரலாற்றிலும் அதற்கு முன்னுதாரணம் உண்டு. இது அருளி லிருந்த சட்டமே. இங்கு விபசாரம் என்பது படுபய ங்கரமான செயல் என்பதை இத்தண்டனை பகிரங்க மாக நிறைவேற்றப்படும்போது அனைத்து மக்கள் மனதிலும் பதித்துச் செல்வதோடு, விபசாரத்தை நெருங்கக் கூடாது எனும் அச்சத்தை உள்ளங்களில் ஏற்றி விடுகின்றது.

கல்லைக் கொண்டே லூத் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களது சமூகத்தையும் ஆப்ரஹாவின் யானைப் படையையும் அல்லாஹ் தஆலா அழித்தான். எனவே, இஸ்லாமிய சமூகம் தனது உண்மையான எதிரியை இனங்காண வேண்டும். அவர்களை எதிர்த்துக் 'கல் எறிதல்' எனும் பணியை நிறைவேற்ற வேண்டும். இதற்கு இஸ் லாமிய இயக்கம் வழிகாட்ட வேண்டும்.

அல்லாஹுத் தஆலா தனது திருமறையில் கூறுகின்றான்.

“சத்தியத்தை அசத்தியத்தின் மீது எறிகின் றோம்; அது அதனை அடக்கி விடுகின்றது. உடனே அது அழிந்து விடுகிறது.” (ஸூரா அல்-அன்பியா: 18)

இதுதான் அல்லாஹ் எறியச் சொல்லும் கல். இதனை எமது சமூகத்தின் ஒவ்வோர் இளைஞனும் எறிவதற்கு ஆயத்தமாக வேண்டும். அதற்கான தயார்படுத்தலை, ஒழுங்குமுறைகளை, இஸ்லாமிய இயக்கம் திட்டமிட்டு வழங்க வேண்டும். தூய நோக்கத்தைக் காண, மக்களிடம் இறைவன் உவந்த ளித்துள்ள வழிமுறைதான் பணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அறிந்தோரும் அறியாதோரும் சமமாவார்களா?

அஷ்ஷெய்க் தாஹிர் எம் நிஹால் (அஸ்ஹரி)
அதிபர், கதீஜதுல் குப்ரா மகளிர் கல்லூரி, வட்டதெனிய

"வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்பதற்கு அல்லாஹ்வே சான்று பகர்கின்றான். மேலும், அந்த வல்லமைமிக்க நுண்ணறிவாளனைத் தவிர வேறு இறைவன் இல்லை என்பதற்கு வானவர்களும் அறிவுடையோரும் நேர்மையிலும் நீதியிலும் நிலைத்த வண்ணம் சான்று பகர்கின்றனர்." (3: 18)

இமாம் இப்னுல் கையிம் (றஹிமஹுல்லாஹ்) அவர்கள் 'மிப்தாஹு தாருஸ் ஸஆதா' எனும் நூலில் 'கல்வியின் சிறப்பும் அதன் மகத்துவமும்' எனும் தலைப்பில் மிகவும் ஆழமாக ஆராய்ந்து அரிய கருத்துக்களை முன்வைத்துள்ளார். இதில் கல்வியின் சிறப்பை விளக்கும் நூற்றுக்கும் மேற்பட்ட ஆதாரங்களை குர்ஆன், சுன்னாவிலிருந்து மிகவும் அற்புதமாகத் தொகுத்துத் தந்துள்ளார். இவ் ஆதாரங்கள் அனைத்திலும் மேற்குறிப்பிட்ட வசனத்தை முதன்மைப்படுத்தி, அது எவ்வாறு கல்வியின் சிறப்பை விவரிக்கின்றது என்பதனைத் தெளிவுபடுத்த பின்வரும் குறிப்புக்களை வழங்கியுள்ளார்:

1. படைப்புகளில் அறிஞர்களை மாத்திரம் குறிப்பிட்டு சான்று பகர்ந்துள்ளமை.
2. அல்லாஹ்வுடைய சாட்சியுடன் அறிஞர்களின் சாட்சியத்தை இணைத்துக் குறிப்பிட்டுள்ளமை.
3. வானவர்களின் சாட்சியுடன் சேர்த்து கல்விமான்களின் சாட்சியத்தை குறிப்பிட்டுள்ளமை.
4. அல்லாஹ் தஆலா சாட்சியாளர்களாக ஆக்கியவர்கள் நிச்சயம் நீதமானவர்களாகவே இருப்பார்கள். இதில் கல்விமான்கள் போற்றப்பட்டும் தூய்மைப்படுத்தப்பட்டும் உள்ளமை.
5. கல்விமான்களைக் குறிக்கும் أولو العلم எனும் சொற்பிரயோகம் அவர்கள் கல்வியின் உரிமையாளர்கள், சொந்தக்காரர்கள் என்பதும் கல்வி அவர்களிடத்தில் இரவல் வாங்கப்பட்ட ஒன்றல்ல என்பதும் எடுத்துக் காண்பிக்கப்பட்டுள்ளமை.
6. சாட்சியாளர்களில் மிகவும் உயர்வும் கண்ணியமும் உடைய அல்லாஹ் தஆலா முதலில் சாட்சி பகர்ந்து, அடுத்ததாக அவனது சிருஷ்டிகளில் மிகவும் உன்னதமான சிருஷ்டிகளாகிய வானவர்களையும் மனிதர்களில் அறிஞர்களையும் கொண்டும் சாட்சி பகர்ந்துள்ளமை.
7. எதற்காக இங்கு சாட்சியம் கூறப்பட்டுள்ளதோ அது உலகிலேயே மிகவும் உன்னதமான உயர்வான ஒரு விடயமாகும். அது ஏகத்துவத்தைக் குறிக்கும் எனும் உயர் கலிமாவாகும். உயர்வான ஒரு விடயத்துக்கு உயர்வானவர்களைக் கொண்டே சாட்சி கூறப்படுவதுதான் பொருத்தமானது.
8. அறிவுடையோர்களின் சாட்சியத்தை நிராகரிப்போருக்கு ஆதாரமாக ஆக்கியிருப்பது அவர்கள் ஏகத்துவத்தின் அத்தாட்சிகளாகவே திகழ்கின்றார்கள் என்பதையே குறிக்கும்.

கல்வியின் சிறப்பைக் குறிக்கும் இவ்வசனம் அல்லாத வேறு பல வசனங்களையும் இமாம் இப்னுல் கையிம் (றஹிமஹுல்லாஹ்) அவர்கள் அழகாகத் தொகுத்துள்ளார். அவற்றில் ஒரு சில வசனங்களை மிகவும் சுருக்கமாக முன்வைக்கின்றோம்.

1. சுவனவாதிகளும் நரகவாதிகளும் சமமாகாததைப் போன்று அறிவுடையோரும் அறிவில்லாதோரும் சமமாக மாட்டார்கள்.

"எவர் மறுமையை அஞ்சி தன் இறைவனுடைய ரஹ்மத்தை ஆதரவு வைத்து இராக் காலங்களில் ஸுஜூது செய்தவராகவும் நின்றவராகவும் வணங்குகிறாரோ அவர் (நிராகரிப்பவரைப் போல்) ஆவாரா? (நபியே!) நீர் கூறும்: அறிந்தோரும் அறியாதோரும் சமமாவார்களா? நிச்சயமாக (இக்குர்ஆனைக் கொண்டு) நல்லுபதேசம் பெறுவோர் அறிவுடையோர்கள்தாம்." (39: 9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நரகவாசிகளும் சுவர்க்கவாசிகளும் சமமாக மாட்டார்கள். சுவர்க்கவாசிகளே பெரும் பாக்கியம் உடையோர்." (59: 20)

2. அறியாமையில் மூழ்கியுள்ளவன் பார்வையை இழந்த குருடனுக்கு சமமானவன்.

"உம் இறைவனால் உம் மீது நிச்சயமாக இறக்கப்பட்ட (வேதத்)தை உண்மையென அறிகிறவர் குருடராக இருப்பவரைப் போலாவாரா? நிச்சயமாக (இவ்வேதத்திலுள்ள நுட்பம்) அறிவுடையவர்கள் தாம் நல்லுபதேசம் பெறுவார்கள்." (13: 19)

3. அறிவுடையோரே சத்தியத்தை அடைந்து கொள்வர்.

"எவர்களுக்குக் கல்வி ஞானம் அளிக்கப்பட்டிருக்கிறதோ, அவர்கள் உமக்கு உம்முடைய இறைவனிடமிருந்து அருளப் பெற்ற (இவ்வேதத்)தை உண்மையானதாகவும், அது வல்லமை மிக்க, புகழுக்குரியவனின் நேர்வழியின் பக்கம் சேர்க்கிறது என்பதையும் காண்கிறார்கள்." (34: 6)

4. மேலதிகத்தை வேண்டி பிரார்த்திக்குமாறு நபி அவர்களுக்குப் போதிக்கப்பட்டதும் கல்வித் தேவையாகும். ஆகவே, உண்மை அரசனாகிய அல்லாஹ்வே மிக உயர்ந்தவன்.

"இன்னும் (நபியே!) உமக்கு (குர்ஆனின்) வஹீ அறிவிக்கப்பட்டு அது முடிவதற்கு முன்னதாகவே குர்ஆனை ஓத நீர் அவசரப்படாதீர். இறைவா! கல்வி ஞானத்தை எனக்கு அதிகப்படுத்துவாயாக என்றும் நீர் பிரார்த்தனை செய்வீராக!" (20: 114)

5. அல்லாஹுத் தஆலா கல்வி ஞானமுடையோரின் அந்தஸ்தை உயர்வடையச் செய்கின்றான்.

"ஈமான் கொண்டவர்களே! சபைகளில் நகர்ந்து இடம் கொடுங்கள் என்று உங்களுக்குச் சொல்லப்பட்டால், நகர்ந்து இடம் கொடுங்கள்; அல்லாஹ் உங்களுக்கு இடம் கொடுப்பான். தவிர, எழுந்திருங்கள் என்று கூறப்பட்டால், உடனே எழுந்திருங்கள். அன்றியும், உங்களில் ஈமான் கொண்டவர்களுக்கும் கல்வி ஞானம் அளிக்கப்பட்டவர்களுக்கும் அல்லாஹ் பதவிகளை உயர்த்துகிறான். அல்லாஹ்வே நீங்கள் செய்பவற்றை நன்கு அறிந்தவனாக இருக்கின்றான்." (58: 11)

6. கல்வி ஞானமுடையோர் அல்லாஹ்வை மிகவும் அஞ்சக் கூடியவர்கள்.

"இவ்வாறே மனிதர்களிலும் ஊர்வனவற்றிலும் கால்நடைகளிலும் பல நிறங்கள் இருக்கின்றன. நிச்சயமாக அல்லாஹ்வின் அடியார்களில் அவனுக்கு அஞ்சுவோரெல்லாம் அறிஞர்கள்தாம். நிச்சயமாக அல்லாஹ் யாவரையும் மிகைத்தவன்; மிக மன்னிப்பவன்." (35: 28)

7. அல்லாஹ்வின் அருட்கொடைகளில் கல்வி மிக மகத்துவம் வாய்ந்த அருட்கொடையாகும்.

"(நபியே!) உம் மீது அல்லாஹ்வின் அருளும் அவனுடைய கிருபையும் இல்லாதிருந்தால், அவர்களில் ஒரு கூட்டத்தார் உம்மை வழிதவறச் செய்யும்படி செய்ய முயன்றிருப்பார்கள். ஆனால், அவர்கள் தம்மையே அன்றி வழி தவறும்படி செய்ய முடியாது. இன்னும், அவர்களால் உமக்கு எவ்விதமான தீங்கும் செய்துவிட முடியாது. மேலும் அல்லாஹ் உம் மீது வேதத்தையும் ஞானத்தையும் இறக்கியுள்ளான். நீர் அறியாதிருந்தவற்றையும் அவன் உமக்குக் கற்றுக் கொடுத்தான். உம் மீது அல்லாஹ்வின் அருள் மகத்தானதாகவே இருக்கின்றது." (4: 113)

8. கல்வியை அல்லாஹுத் தஆலா வாழ்வாகவும் ஒளியாகவும் ஆக்கியுள்ளான்.

"மரணமடைந்த ஒருவனை நாம் உயிர்ப்பித்து எழுப்பினோம். இன்னும் அவனுக்கு ஓர் ஒளியையும் கொடுத்தோம். அதைக் கொண்டு அவன் மனிதர்களிடையே நடமாடுகிறான். மற்றொருவன் இருள்களில் சிக்கிக் கிடக்கிறான். அதைவிட்டு அவன் வெளியேறவே முடியாது. இவ்விருவரும் சமமாவாரா? இவ்வாறு நிராகரிப்பாளர்களுக்கு அவர்கள் செய்யக்கூடிய (பாவச்) செயல்கள் அழகாக்கப்பட்டுள்ளன." (6: 122)

9. வேட்டைக் கலை கற்பிக்கப்பட்ட நாய், கற்பிக்கப்படாத நாயை விட மிகவும் சிறந்ததாகும்.

அதாவது, கற்பிக்கப்பட்ட நாய் வேட்டையாடியதை உண்பதை முஃமின்களுக்கு அல்லாஹுத் தஆலா ஆகுமாக்கி வைத்துள்ளான்.

"(நபியே!) அவர்கள் (உண்பதற்குத்) தங்களுக்கு ஹலாலானவை (அனுமதிக்கப்பட்டவை) எவை என்று உம்மிடம் கேட்கிறார்கள். நீர் கூறும்: உங்களுக்கு ஹலாலானவை, சுத்தமான நல்ல பொருள்களும், அல்லாஹ் உங்களுக்குக் கற்பித்திருக்கின்றபடி வேட்டையாடும் பிராணி, பறவைகளுக்கு நீங்கள் பயிற்சியளித்து அவை வேட்டையாடி நீங்கள் பெற்றவையையும் புசியுங்கள். எனினும், நீங்கள் (வேட்டைக்கு விடும்போது) அதன் மீது அல்லாஹ்வின் பெயரைக் கூறிவிடுங்கள். அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். நிச்சயமாக அல்லாஹ் கணக்கெடுப்பதில் மிகவும் விரைவானவன்." (5: 4)

10. கல்வியைத் தேடிச் சென்ற மூஸா (அலைஹிஸ் ஸலாம்) அவர்களின் வரலாற்றைக் குறிப்பிட்டு அல்லாஹ் ஸூரா அல்கஹ்பில் விளக்கியுள்ளான்.

"(இவ்வாறு) அவ்விருவரும் நம் அடியார்களில் ஒருவரைக் கண்டார்கள். நாம் அவருக்கு நம்மிடமிருந்து கிருபை அருளியிருந்தோம். இன்னும் நாம் அவருக்கு நம்மிடமிருந்து கல்வி ஞானத்தையும் கற்றுக் கொடுத்திருந்தோம். உங்களுக்குக் கற்றுக் கொடுக்கப்பட்ட நன்மையானவற்றை நீங்கள் எனக்குக் கற்பிக்கும் பொருட்டு, உங்களை நான் பின்தொடரட்டுமா? என்று அவரிடம் மூஸா கேட்டார்." (18: 65,66)

11. புனித அல்குர்ஆனின் முதலாவது இறக்கியருளப்பட்ட வசனத்தை கல்வியின் அவசியத்தை வலியுறுத்தியே அல்லாஹுத் தஆலா இறக்கி வைத்துள்ளான்.

"(அனைத்தையும்) படைத்த உம்முடைய இறைவனின் திருநாமத்தைக் கொண்டு ஓதுவீராக." (96: 1)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியின் சிறப்பை விளக்கும் இவ்வாறான பல குர்ஆனிய வசனங்களை முன்வைத்து பல ஹதீஸ்களையும் இமாம் இப்னுல் கையிம் (றஹிமஹுல்லாஹ்) அவர்கள் தொகுத்துத் தந்துள்ளார்கள். அவற்றில் ஒரு ஹதீஸை மாத்திரம் முன்வைக்கின்றோம். இதில் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கல்வியை நீண்ட நாள் வரட்சியின் பின் பொழியும் பெரு மழைக்கு ஒப்பிட்டு பின்வருமாறு குறிப்பிடுகின்றார்கள்:

"அல்லாஹ் என்னை நேர்வழி மற்றும் கல்வி ஞானத்துடன் அனுப்பியதற்கு உவமையானது, பூமியில் பொழிந்த பெரு மழை போன்றதாகும். அப்பூமியில் 'நகிய்யா' என்று அழைக்கப்படும் செழிப்பான ஒரு பகுதி, மழை நீரை உள்வாங்கி ஏராளமான புற்களையும் செடி கொடிகளையும் முளைக்கச் செய்தது. அப்பூமியில் 'அஜாதிப்' என்று அழைக்கப்படும் கரடுமுரடான ஒரு பகுதியும் இருந்தது. அது தண்ணீரைத் தேக்கி வைத்துக் கொண்டது. அதனை அல்லாஹ் மனிதர்களுக்கு பயன்படச் செய்தான். அதனை மனிதர்கள் அருந்தினர்; தமது கால்நடைகளுக்கும் புகட்டினர்; விவசாயமும் செய்தனர். மேலும் அப்பெருமழை 'கீஆன்' என்று அழைக்கப்படும் (ஒன்றுக்கும் உதவாத) வெறும் கட்டாந்தரையிலும் பொழிந்தது. அது தண்ணீரைத் தேக்கி வைத்துக் கொள்ளவும் இல்லை, புற்பூண்டுகளை முளைக்க விடவும் இல்லை. இதுதான் அல்லாஹ்வின் மார்க்கத்தில் விளக்கம் பெற்று நான் கொண்டுவந்த தூதினால் பயனடைந்து, கற்றுத் தெரிந்து, பிறருக்கும் கற்றுக் கொடுத்தவருக்கும் நான் கொண்டு வந்த தூதை ஏறிட்டுப் பாராமலும் நான் கொண்டு வந்த அல்லாஹ்வின் நேர்வழியை ஏற்றுக் கொள்ளாமலும் வாழ்பவனுக்குமான உவமையாகும்." (அல்புகாரி)

கல்விக்கு மழை நீரை உவமையாக்கியிருப்பது, மனிதனுக்கு நீரின் அவசியத்தைப் போன்று கல்வியின் அவசியத்தை வலியுறுத்துவதாகவே அமைந்துள்ளது. மனிதன் தனது அனைத்துப் பயன்களையும் அடைந்து கொள்வதற்கு நீர் அடிப்படையாக இருப்பது போன்று கல்வியும் மனிதனின் அடிப்படைத் தேவையாகவே உள்ளது.

இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் (றஹிமஹுல்லாஹ்) அவர்களின் கருத்துப்படி, மனிதனுடைய அடிப்படைத் தேவைகளில் ஒன்றாகிய உணவு, பானத்தை விடவும் கல்வியின் தேவை மிக முக்கியமானதாகும். ஏனெனில், மனிதன் ஒரு நாளைக்கு இரு முறை உணவு உட்கொண்டால் போதுமானதாகும். ஆனால், கல்வியைப் பொறுத்தவரை மனிதன் தனது ஒவ்வொரு மூச்சுடனும் எந்நேரமும் தேவையுடையவனாகவே உள்ளான்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஹதீஸின் உள்ளடக்கத்தினை பின்வரும் வசனத்திலும் கண்டு கொள்ள முடியும் என்பதுவே இமாம் இப்னுல் கையிம் (றஹிமஹுல்லாஹ்) அவர்களின் கருத்தாகும்.

"அல்லாஹ் வானத்திலிருந்து மழையைப் பொழியச் செய்தான். ஒவ்வொரு நதியும் அதனுடைய தன் கொள்ளளவுக்கு ஏற்பத் தண்ணீரைப் பெற்று ஓடியது. பிறகு வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, அதன் மேற்பாகத்தில் பொங்கும் நுரையைச் சுமந்து சென்றது. நகைகள், பாத்திரங்கள் போன்றவற்றைச் செய்வதற்காக மக்கள் உலோகங்களை நெருப்பில் உருக்கும்போதும் இதே போன்ற நுரை பொங்குகிறது. அல்லாஹ் இவற்றை சத்தியத்திற்கும் அசத்தியத்திற்கும் உவமையாகக் கூறுகின்றான். (பயனற்றதாக) நுரை ஒன்றுமில்லாமல் போய்விடுகின்றது. எது மக்களுக்குப் பயனளிக்கின்றதோ அது பூமியில் தங்கி விடுகின்றது. இவ்வாறு அல்லாஹ் உவமானங்கள் மூலம் தன் செய்திகளை விளக்குகின்றான்." (13: 17)

## சிறுநீரகம் தேவை

உடப்பனை 20ம் கட்டையடி என்ற முகவரியில் வசிக்கும் முஹம்மத் கலீபா அவர்களின் இரு சிறுநீரகங்களும் பாதிக்கப்பட்டுள்ளன. அவருக்கு 'B' பி பொசிடிவ் அல்லது 'O' பொசிடிவ் சிறுநீரகம் ஒன்று அவசரமாக மாற்றப்பட வேண்டும் என்று சிறுநீரக விசேட வைத்திய நிபுணர் அறிவித்துள்ளார். எனவே, தயவு செய்து நல்ல உள்ளம் படைத்த எவரேனும் இருப்பின் சிறுநீரகம் ஒன்றைக் கொடுத்து உதவுமாறு குடும்பத்தினர் வேண்டிக் கொள்கின்றனர்.

தொடர்புகளுக்கு: 0770606699

ඔබට ඉස්ලාම් දහම පිළිබඳවයෙන් වැඩිදුර
අධ්‍යයනය කිරීම සඳහා නොමිලේ පොත්පත්, තොරතුරු
අවශ්‍ය වන්නේ නම්, අප හා සම්බන්ධ වන්න. එසේම
ඉස්ලාම් දහම පිළිබඳව ඔබට ඇතැම් ගැටලු තිබේ නම්
දුරකථනය ඔස්සේ අප වෙත යොමු කරන්න. එයට පිළිතුරු
දීම සඳහා අප ආයතනය බැඳී සිටින්නෙමු. සතියේ දිනවල ප.ව
1.00 සිට ප.ව 12.00 දක්වා 0115 690717 අමතන්න.

ආගමික හා සංස්කෘතික අධ්‍යයන සංසදය
(FRCS) තැ. පෙ 1089 කොළඹ
ඊමේල්: frcs.org@gmail.com
වෙබ්: www.sinhalenislam.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய இளைஞர்களும் மரியாதைப் பண்பும்

[illegible]

ரஸூலுல்லாஹ் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்:

"ஓர் இளைஞன் ஒரு முதியவரை அவரது வயோதிபத்தின் காரணமாக சங்கை செய்தால் அவனது வயோதிபத்தில் அவனை சங்கை செய்கின்றவர்களை அவனுக்காக அல்லாஹ் ஏற்பாடு செய்வான்." (அத்திர்மிதி)

**தகவல்** பரிவர்த்தனைத் துறையில் இன்று பல மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. அறிவியல் ஆய்வு முயற்சிகளும் விஞ்ஞான கண்டுபிடிப்புகளும் மனித வாழ்வை சொகுசுபடுத்தியுள்ளன. இதனால் உலகம் ஒரு கிராமமாக மாறியுள்ளது. மனிதன் இயந்திரமயமான வாழ்வுக்குள் ஆட்பட்டுள்ளான். ஆனாலும் அவன் பண்பாட்டையும் உயர் விழுமியங்களையும் தொலைத்து விட்டான். அதனது கோர விளைவுகளை மனிதன் இன்று அனுபவித்து வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளான். இதனால் இன்று இளைய தலைமுறையினருக்கும் மூத்தவர்களுக்குமிடையே பாரிய தலைமுறை இடைவெளி அதிகரித்துக் காணப்படுகிறது. இவ்விடைவெளியைக் குறைப்பதற்கான வழிகாட்டல்களை அண்ணலார் மேற்படி ஹதீஸில் முன்வைக்கிறார்கள்.

மனிதன் தனது வாழ்வில் சந்திக்கின்ற முக்கியமான பருவமே வாலிபம். இது ஓர் இளைஞனின் அறிவில் வித்தியாசமான உணர்வலைகளைத் தோற்றுவிக்கின்றது. சிலபோது அவன் இலகுவில் நல்வழியில் நடைபயில முடியும். வேறு சில வேளைகளில் வழிதவறிப் போகவும் முடியும். "நேற்றைய காளை நாளைய தலைவன்" என்ற எண்ணக்கரு அவனை புதிய மனிதனாக வடிவமைக்கின்றது. எனவே அவன் வாழ்வியல் சித்தாந்தம் பற்றிய எவ்வித பிரக்ஞையுமின்றி வாழ முற்படுகின்றான். அறிவு அவனை வழிநடத்துவதை விட உணர்ச்சிக் கொந்தளிப்பு வேகம் அவனை எங்கோ அள்ளிக் கொண்டு சென்று விடுகிறது. அவன் சுயாதீனமாக செயற்பட ஆர்வப்படுகின்றான். அவன் தன்னைவிட வயதில் மூத்தவர்களை பெறுமானமிக்கவர்களாகக் கருதுவதில்லை. மூத்தவர்களையும் அவர்களின் கருத்துக்களையும் அவன் மதிப்பதில்லை. பெரியோரின் ஆலோசனைகள் அவனுக்கு வேப்பங்காயாக கசக்கின்றன. இதன்போது வாலிப நெஞ்சங்களிலிருந்து மரியாதைப் பண்பு விடைபெற்றுச் சென்றுவிடுகிறது. இதுவே பண்பாட்டுச் சரிவிற்கும் ஒழுக்க வீழ்ச்சிக்குமான ஆரம்பப் புள்ளியாகும்.

ஒவ்வோர் இளைஞனும் தனது வாலிபப் பருவம் மற்றும் பருவ வயது பற்றி அறிவார்ந்து சிந்திக்க வேண்டும். அல்லாஹ் அவனுக்கு வழங்கிய பகுத்தறிவின் வெளிச்சத்தில் தனது வாழ்க்கைப் பாதையைத் தெரிவு செய்து கொள்ள வேண்டும். தான் சந்தித்திருக்கின்ற வாலிபப் பருவம் நிரந்தரமானதல்ல. இது முழுமையாக நல்லதுமல்ல கெட்டதுமல்ல என்ற புரிதலை ஆழ்மனதில் அடைகாத்துப் பாதுகாத்திட வேண்டும்.

வாலிப வசந்தம் கொழிக்கும் பருவத்தில் தெனாவெட்டும் தெம்பும் இருக்கிறது என்ற ஒரே நியாயத்தை முன்வைத்து தான்தோன்றித்தனமாக நடந்து கொள்ளக் கூடாது. முதியோரையும் மூத்தவர்களையும் பரிகசிப்பதும் அவர்களது ஆலோசனைகளையும் புத்திமதிகளையும் இழிவாகக் கருதி அவர்களை அற்பமாகக் கணிப்பதும் பாரிய விரோத செயல்களாகும். நபியவர்கள் கூறினார்கள்:

"மூத்தவரை மதிக்காதவரும் சிறியோருக்கு இரக்கம் காட்டாதவரும் எம்மைச் சார்ந்தவரல்ல." (அபூ தாவூத்)

மரியாதைப் பண்பு முதலில் செழித்தோங்க வேண்டிய இடம் குடும்பமாகும். அந்தக் குடும்பத்திலேயே மரியாதைப் பண்பு குழி தோண்டிப் புதைக்கப்பட்டு விடுகிறது. பெரியவனாக வளர்ந்த பருவத்தை அடைகின்ற ஒரு பிள்ளை முதன்மையாக தாய் தந்தையரை மதிக்கத் தெரிந்திருக்க வேண்டும். ஆனால், இன்று முஸ்லிம் குடும்பங்களில் தந்தையுடன் உள்ள அந்நியோன்னியத்தை பிள்ளை வெறுத்துக் கொண்டு அந்நியப்பட்டு விடுகின்றது. தாயுடன் எதிர்வாதம் புரியக் கூடிய நிலைக்கு பிள்ளை வந்து விடுகின்றது. தாயை வைது நோவிக்கப் பேசுவதை அல்குர்ஆன் மறுக்கின்றது. அது நற்பண்பாட்டிலிருந்து பிரிக்க முடியாத ஒரு பகுதியாகும்.

"(அருளை நாடியே) நீ பணிவுடன் சிறகைத் தாழ்த்திக் கொள்." (ஸூரதுல் இஸ்ரா: 19)

இன்றைய சராசரி முஸ்லிம் குடும்பங்களில் தெருச் சண்டைகள் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகரித்திருக்கின்றன. கல்லூரியும் அடிதடியும் குடும்பங்களை அலங்கரிக்கின்றன.

கருவிலிருந்து பலவீனமான நிலையில் உலகை வந்தடைந்த பிள்ளையை தாயல்ல) அரவணைக்காமல் இருந்திருந்தால் அதனது நிலை என்னவாய் இருந்திருக்கும்? வளர்ந்து கட்டிளம் வாலிபராக மாறியதன் பின்னால் "நீங்கள் யார்? நீங்கள் எனக்காக என்னதான் செய்து விட்டீர்கள்? எனது வாழ்க்கை பற்றி முடிவெடுக்க எனக்குத் தெரியும்; நீங்கள் வாழ்ந்து விட்டவர்கள்; நாங்கள் வாழ வேண்டியவர்கள். வாழ வழி விடுங்கள். நீங்கள் பெரியதாய் நாங்கள் செய்து விட்டீர்கள்! இன்றைய காலத்தின் உங்களுக்குத் அறிவில்லை! நீங்கள் பழங்கதை பேசுகின்றீர்கள்! பழம் பெருமை பேசுகின்றீர்கள்... என்று வன் சொற்களால் பேச்சிக்கலை தொடுத்து பெற்றோரின் உள்ளங்களைக் காயப்படுத்தி அவர்களைக் குமுறி அழ வைக்கின்ற பரிதாபகரமான கலாசாரத்தை பரவலாக அவதானிக்க முடிகிறது.

குறிப்பாக, வாழ்க்கைத் துணையை தெரிவு செய்கின்றபோது குடும்பங்களில் இத்தகைய எதிர்வாதங்களை வெளிப்படையாக காண முடிகின்றது. இதற்கு இன்றைய நவீனமான சினிமாவும் வீடியோ டிராமாக்களும் செல்லிடத் தொலைபேசிப் பாவனையும் முக்கியமான காரணிகளாக அமைந்து விடுகின்றன. சில குடும்பங்களில் பிள்ளைகள் தமது பெற்றோரை உடலியல்ரீதியாக நோவினைக்குள்ளாக்குகின்றனர். இதன்போது வயோதிபம் அடைந்தோம் என பெற்றோர்கள் எண்ணத் தலைப்படுகின்றனர். நாங்கள் இவ்வுலகில் வாழ்வதைவிட மரணித்து விடுவது மேலானது என்று விரக்தியின் விளிம்புக்கு அவர்கள் சென்று விடுகின்றனர்.

பெற்றோருக்கு அடுத்தபடியாக ஒரு பிள்ளை ஆசிரியர்களைச் சந்திக்கின்றது. அப்பிள்ளை வகுப்பறைச் சூழலில் கல்வியறிவோடு நற்பண்பாட்டையும் சேர்த்துக் கற்றுக் கொள்வதோடு பண்பாட்டின் சிகரமாக மாற வேண்டும். ஆனால், இவற்றையெல்லாம் போதிக்கின்ற ஆசிரியர்களை அவமதித்து நடந்து கொள்கின்ற பாங்கை இன்று பழக்கமாகி வருகின்றது. பாடசாலை வட்டிப் பிடிக்கின்ற மாணவன் தன் வகுப்பறையில் இருக்கின்ற ஆசிரியரை முதலில் மதிக்கக் கற்க வேண்டும். இரண்டாவதாக கல்லூரிப் படிப்பை அந்த ஆசானை மதிக்க வேண்டும்.

ஆனாலும் இன்று வகுப்பறைக்குள் செல்ல ஆசிரியர்கள் தயங்கி நிற்கின்றனர். ஏனெனில், ஒழுக்க மரியாதையைக் காயப்படுத்துகின்ற நடவடிக்கைகளில் மாணவர்கள் ஈடுபடுகின்றனர். கற்பிக்கின்ற வழிமுறையை அவர்கள் விரும்புவதில்லை. வகுப்பறையை பொழுது போக்கு சாதனமாகப் பயன்படுத்துகின்றனர். தங்களுக்கு மத்தியில் பேசிக் கொண்டும் சிரித்துக் கொண்டும் ஆசிரியர்களை அவமானப்படுத்தும் வகையில் வார்த்தைகளைப் பிரயோகித்துக் கொண்டும் இருக்கின்ற நிலை பொதுவான தோற்றப்பாடாக மாறியுள்ளது. பாடசாலை வளாகத்திற்கு வெளியே தாங்கள் நாசப்படுத்த இருக்கும் வன்முறைகளை நிகழ்த்திக் கண்டபடி அவமரியாதைப் படுத்துகின்றனர்.

இன்றைய இளைய தலைமுறையினர் அப்பாஸ் சிறந்த பரம்பரையிடமிருந்து பாடம் கற்க வேண்டும். ஸஹாபாப் பெருமக்களிடமிருந்து எமது முன்மாதிரிமிக்க முன்னோடிகள். அவர்களிடம் பணிவடக்கம், அவையடக்கம், மனிதர்களுடனான மரியாதைப் பண்பாடு பிரத்தியட்சமாக பிரதிபலித்தன. பின்வரும் வரலாற்று நிகழ்வு இதற்கு நல்லதொரு சான்றாதாரமாக அமைகின்றது.

ஸமுரா இப்னு ஜுன்துப் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள். "நான் ரஸூலுல்லாஹ் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் காலத்தில் சிறுவனாக இருந்தபோது அவர்களிடமிருந்து ஹதீஸ்களை மனனமிட்டு வந்தேன். ஆனாலும், என்னைவிட மூத்தவர்கள் சபையில் இருந்தது ஹதீஸ்களை அறிவிப்பதை விட்டும் என்னைத் தடுத்துக் கொண்டிருந்தது." (அத்திர்மிதி)

ஒரு முறை நபியவர்கள் "ஒரு மரம் இருக்கின்றது. அது முஸ்லிமைப் போன்றது. அது என்ன மரம்?" என வினாவைக் கேட்டார்கள். அப்போது அங்கிருந்த மூத்த ஸஹாபிகளின் சிந்தனை பாலைவனப்புறத்திலுள்ள மரங்களின்பால் சென்றது. (ஆனால், இளைய ஸஹாபியான இப்னு உமர் (ரழியல்லாஹு அன்ஹுமா) அவர்களுக்கு அதற்கான பதில் தெரிந்திருந்தது. ஆனால், அவர் சபையிலிருந்த மூத்தவர்களைக் கருத்திற் கொண்டு பதில் சொல்ல வெட்கப்பட்டார்கள். பின்பு நபியவர்கள் "பேரீத்தம் மரம்" என அறிவித்தார்கள். (அல்புகாரி)

அவையடக்கத்திற்கு இது நல்லதோர் எடுத்துக் காட்டு ஆகும்.

குறிப்பாக, பெரியவர்களை மதிக்கும் மரியாதைப் பண்பை மாணவர்களுக்கு மத்தியில் வளர்ப்பது மிகவும் அவசியமாகும். அதுவே அறிவைப் பெறுவதற்கான வழிமுறையுமாகும். மரியாதைப் பண்பில்லா மாணவனுக்கு ஆசானின் அன்பும் அரவணைப்பும் ஆசீர்வாதமும் கிட்டுவதில்லை. இதன்போது கல்வியறிவுக்கான வாயில் மூடப்பட்டு விடுகிறது. அன்னாரைப் பற்றி விமர்சித்துப் பேசப்பட்ட சிறந்த தலைமுறை தூரப்பட்டு விடுகிறது.

அன்னாரைப்பற்றி விசாரித்துப் பேசப்பட்ட சிறப்பு வாய்ந்த ஸஹாபாக்களில் இளையவர் அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹுமா) அவர்கள் ஒரு முறை பாலைவனத்திலுள்ள ஸைத் இப்னு ஸாபித் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் வீட்டுக்கு இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹுமா) அவர்கள் சென்று வீட்டு வாசலில் அமர்ந்திருக்கின்றார்கள். ஒரு ஹதீஸைக் கேட்டுப் பெற்றுக் கொள்வதற்காகவே சென்றார்கள். ஆயினும், வீட்டுக் கதவைத் தட்ட விரும்பவில்லை; அந்த மூத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊழியரை அழைக்கவுமில்லை. நீண்ட நேரத்தின் பின்னர் கதவு திறக்கிறது. தனது வீட்டுக் கதவருகே இருந்த உருவத்தைப் பார்த்து அதிர்ச்சியுற்ற ஸைத் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள், "அண்ணலாரின் பெரிய தந்தையின் மகனே! நீங்கள் ஏன் இங்கு வந்தீர்கள்? ஒருவரை என்னிடம் அனுப்பி இருந்தால் நான் உங்கள் வீடு நோக்கி வந்திருப்பேனே" என்றார்கள். அதற்கு இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹுமா) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்:

"அவ்வாறு செய்ய நாம் ஏவப்பட்டுள்ளோம்; அறிவு உன்னை நோக்கி வரமாட்டாது, அதனை நோக்கி நீ செல்ல வேண்டும்."

அந்த இளம் ஸஹாபியிடம் இருந்த மரியாதைப் பண்பும் அவர்களுக்காக அண்ணலார் கேட்ட பிரார்த்தனையும் அவர், 'தர்ஜுமானுல் குர்ஆன்' (குர்ஆனிய மொழி பெயர்ப்பு), முபஸ்ஸிரீன் (குர்ஆன் விரிவுரையாளர்களின் முன்னோடி) என்ற சிறப்புப் பெயர்களைப் பெற்று வாழ்வில் உயர்ந்து விளங்க வழிவகுத்தன.

ஒரு மாணவன் அல்லது ஓர் இளைஞன் மூத்தவர்களை சங்கை செய்து பணிவோடும் மரியாதையுடன் வாழ்கின்ற போது அவனுக்கு சமூகத்தில் தனி அங்கீகாரம் கிடைக்கின்றது. அவ்வாறு வயோதிப வயதில் அவனை சங்கை செய்யும் மனிதர்களை உருவாக்கும் ஒரு பரம்பரை உருவாகி இருக்கும். இதற்கு மாறாக, ஓர் இளைஞன் மூத்தோரை அவமதித்து வாழ்கின்றபோது அவனைப் பற்றிய மக்கள் அபிப்பிராயம் தலைகீழாக அமையும். அவன் மக்களால் தூற்றப்படுவான். சிலபோது இவனால் பாதிக்கப்பட்ட மூத்தவர்கள் மற்றும் மரியாதைக்குரியவர்களின் பிரார்த்தனைகள் இறைவனிடம் அங்கீகரிக்கப்படுகின்றபோது குற்றப்பிடியில் இவ்விளைஞன் நடைப்பிணமாக வாழ வேண்டி வரும். அந்திம காலத்தில் இவனது நிலை பரிதாபகரமாக அமைந்துவிடும். இது ஒரு மாறாத நியதியாகும்.

"மேலும், அந்த நாட்களை மனிதர்களுக்கு மத்தியில் மாறிமாறி வரச் செய்கின்றோம்." (ஆலு இம்ரான்: 140)

எனவே, ஒவ்வோர் இளைஞனும் இறைவனின் மாறா நியதி பற்றி சிந்தித்து மூத்தவர்களை மதித்து சங்கை செய்து வாழுகின்ற வகையில் தீர்க்கமான முடிவுகளை எடுத்துச் செயற்பட வேண்டும்.


## இஸ்லாமிக் புக் ஹவுஸ் வெளியீடுகள்

| | |
|---|---|
| அரபுமொழி இலக்கங்கள் | 75/= |
| இலகு வழி அடிப்படை அரபு இலக்கணம் | 300/- |
| இஸ்லாம் தரம் -2 | 140/= |
| இஸ்லாம் தரம் -3 | 120/= |
| இஸ்லாம் தரம் -4 | 150/= |
| இஸ்லாம் தரம் -5 | 150/= |
| இஸ்லாம் தரம் -6 | 170/= |
| அரேபியர் வாழ்வியல் (இஸ்லாத்திற்கு முற்பட்ட காலம்) | 150/- |
| இஸ்லாமிய வரலாறு | 200/= |
| இலங்கையில் இனக் கலவரங்களும் முஸ்லிம்களும் | 400/= |
| முன்பள்ளி இலகு பாலர் வழிகாட்டி | 165/- |
| MY ENGLISH TEACHER GRADE-1 | 150/- |
| சிங்கள அரிச்சுவடிகளை எழுதுவோம்; வாசிப்போம் G1&2 | 200/= |
| தமிழ்,கணிதம்,சுற்றாடல்,செயல்நூல் தரம்- 2 | 375/- |
| தமிழ் மொழி வழிகாட்டி தரம் -4 | 350/= |
| தமிழ் வழிகாட்டி தரம் -5 | 350/= |
| சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் தரம் -5 | 350/- |
| கட்டுரை மஞ்சரி தரம் -5 | 125/= |
| க்ஷேத்திர கணிதம்-1 தரம் 9,10,11 | 150/= |
| எளிய நடையில் விஞ்ஞானம் தரம் -10 | 330/= |
| எளிய நடையில் விஞ்ஞானம் தரம் -11 | 390/- |
| க.பொ.த. (சா/த) இரண்டாம் மொழி சிங்களம் 2001-2010 | 260/= |
| வெற்றிச் சுடர் G.C.E. (O/L) ஆங்கிலம் 2006-2010 | 150/= |
| வெற்றிச் சுடர் G.C.E. (O/L) கணிதம் 2006-2010 | 150/= |
| உயர் தர பௌதிகவியல் அலகுகளும் அளவைகளும் | 250/- |
| ஐக்கிய அமெரிக்க அரசாங்கம் | 160/= |
| திறமைகளாற்றலை வளர்த்தல் | 250/= |
| கற்றலில் மாணவர் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் | 150/- |
| அன்றாட வாழ்வில் அனைவருக்கும் உளவியல்-1 | 250/= |
| English Grammar for you | 225/- |

எமது புத்தக விலைப்பட்டியலை பார்வையிட www.ibh.lk எனும் இணையத்தளத்தை பார்வையிடுங்கள்.

இஸ்லாமிக் புக் ஹவுஸ்

77, தெமடகொட வீதி, கொழும்பு-9.

தொலை பேசி: 011 2684851, 011 2669197

பெக்ஸ்: 011 2688102

தொலைபேசி:0112684851




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக ஒருமைப்பாட்டின் மையப்புள்ளி

[illegible] இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி

எது ஒற்றுமை? கருத்து வேறுபாடின்றி ஒன்றாகக் கலந்திருப்பதா?

கருத்து வேறுபாடுகளின்போது விட்டுக்கொடுத்தலையைக் கடைப்பிடிப்பதா?

கருத்து வேறுபாட்டுக்குரிய ஒரு விடயத்தில் ஒரே கருத்தைக் கொண்ட வர்க்கமாக அனைவரையும் மாற்றுவதா? அவ்வாறு ஒரே கருத்தைக் கொண்டவர்கள் மாத்திரம்தான் ஒற்றுமையாக வாழ முடியும் என்று இஸ்லாம் முடிவு செய்திருக்கிறதா?

அல்லது ஃபுஆரி போன்ற ஸஹாபாக்கள் சமூகத்தை ஒரு காலத்தில் ஒற்றுமையாக வைத்திருந்தனர் என்று சிலர் கூறுகிறார்களே. பின்னர் அவ்வாறான ஸஹாபாக்களைப் போல் அவர்கள் கூறுவது போன்று சமூகத்தை ஒன்றுபடுத்த முடியுமா?

அல்லது இன்றிருக்கும் சமூகத்தை முற்றாகப் புறக்கணித்து விட்டு புதியதொரு சமூகத்தை உருவாக்குவதன் மூலம்தான் ஒற்றுமை சாத்தியமாகுமா?

இவற்றுள் எது ஒற்றுமை?

முஸ்லிம் சமூகத்தின் ஒருமைப்பாடு குறித்து அனைவரும் பேசுகின்ற, சகலரும் ஒற்றுமையை வேண்டி நிற்கின்ற ஒரு காலத்தில் இன்று நாம் வாழ்கிறோம். எனவே, ஒற்றுமை இன்றைய கோஷமாக அனைவரினதும் ஒரு பேசுபொருளாக மாறியிருக்கிறது. எல்லோரும் ஒற்றுமை பற்றி பேச ஆரம்பித்திருப்பதால் மக்கள் மற்றுமொரு குழப்பத்தில் சிக்கியிருக்கின்றனர்.

யார் இந்த ஒற்றுமையின் எதிர் பக்கத்தில் இருக்கின்றார்; எல்லோரும் ஒற்றுமை பற்றிப் பேசுகின்றார்கள். எனினும், சமூகம் ஒன்றுபடவில்லை என்பது தெரியவில்லை. அவ்வாறாயின், ஒற்றுமையின் எதிரிகள் நம்மை மறைந்துக் கொண்டிருக்கின்றார்களா, ஒற்றுமை பற்றிப் பேச முன்வருகின்றனரா? அல்லது ஒவ்வொருவரும் பேசும் ஒற்றுமைக்கு வெவ்வேறு விளக்கங்கள் இருக்கின்றனவா?

இன்றைய களத்தில் பேசப்படுகின்ற ஒற்றுமை எது என்பதை மிகத் தெளிவாக அடையாளப்படுத்த வேண்டும். வெறும் கூப்பாடு ஒற்றுமைக் கோஷங்களை முன்வைப்பது அல்லது ஒரு பக்கத்தை மட்டும் இல்லாமல் ஆக்குவது என்று அனைவரும் ஒற்றுமை பற்றிப் பேசுகின்றனர். வெறும் கூப்பாடு, விளக்கங்கள் இன்றி இருப்பது தவிர ஒற்றுமை ஒன்றுபடுத்துவதற்கு சாதகமாக இருக்க முடியும் தவிர, பிரதான பலமாக இருக்க முடியாது.

அல்லது ஒரு தற்காலிகக் காரணியாக இருக்க முடியுமே தவிர, நிரந்தரக் காரணியாக இருக்க முடியாது.

இஸ்லாம் வலியுறுத்தும் ஒற்றுமை வேறு வகைப்பட்டதாகும். வலுவான அடிப்படை மீது அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையின் மீது சமூக ஒற்றுமையைக் கட்டியெழுப்ப முயல்வதன் மூலமே, காரணிகள் துணைக் காரணிகளாக அமையலாம். அடிப்படைக் காரணியை விட்டு துணைக் காரணியின் மூலமாக ஒற்றுமையைக் கட்டியெழுப்ப முயல்வதால் அது விழலுக்கு இறைத்த நீராகவே இருக்கும்.

அந்த அடிப்படை எது?

ஸூரா ஆல இம்ரானில் அல்லாஹ் "அல்லாஹ்வின் கயிற்றைப் பற்றிப்பிடியுங்கள்" என்பதுதான் அவ்வடிப்படை. பிரிந்து விடாமல் ஒன்றாக நின்று குர்ஆனையும், ஸுன்னாவையும் பற்றிப் பிடித்தல் என்று கூறலாம்.

குர்ஆனும் ஸுன்னாவும் 'கயிறு' என்று உவமிக்கப்பட்டிருப்பது ஏன்?

தூரவிலிருக்கும் மக்களுக்கு மத்தியில் மனித சமூகம் போகச் சேர வேண்டிய இந்தத் தொங்கு வழிகாட்டலில் பேசவே சேருவதற்கு இந்தக் கயிறு துணை புரிகிறது. இந்தக் கயிற்றைப் பற்றிப் பிடித்தவர்கள் பொருளை போய்ச் சேர வேண்டிய உயர மதிப்புமிக்க இலக்குகளை அடையும் வரை இந்தக் கயிறு விட்டு விடக் கூடாது என்பதாகும்.

இலக்குகளை நோக்கி நகராமல் கயிற்றைப் பிடித்துக் கொண்டு ஓரிடத்தில் அமர்ந்திருப்பது என இருந்தும் பொருள் கொள்ள முடியாது. காரணம், உலக-மறுமை இலக்குகளை நோக்கிய அல்லாஹ்வின் தூதர் பயணத்தின்போது பனிக் குர் வழிகாட்டலே அதுதான் அருளப்பட்டது. குர்ஆனைப் பற்றிப் பிடித்தவர்கள் அப்பணியை செவ்வனே நிறைவேற்றினர். அந்தவேளை, விருப்புடன் அதனை செய்தனர். அப்பணியே அவர்களை ஒரு சக்தியாக, ஜமாஅத்தாக ஒன்று திரட்டியது.

ஆக, அல்லாஹ்வின் அல்குர்ஆனின் தூய ஒளி வாழ்க்கைக்கு வழிகாட்டும் தெளிவான இலக்குகளை நோக்கிய இஸ்லாமியப் பணியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவரையும் ஒன்றிணைப்பதற்கான மையப்புள்ளி யாக இருந்தது. அந்தப் பணி இன்றைய நிலையில் இன்று போல் குர்ஆனும் சுன்னாவும் அறிவாராய்ச்சிகளும் வாழ்க்கை நெறிமுறைகளுக்கும் பயன்படுத்தப்பட்டிருந்தால் சமூகம் ஒன்றுபட்டிருக்கும்.

இந்தவகையில் இன்று மட்டுமல்ல, என்றும் சமூகம் ஒன்றிணைக்கப்பட வேண்டுமானால், அல்லாஹ்வின் தூதர் செய்த பணி மேற்கொள்ளப்பட்டாக வேண்டும். அந்தப் பணிக்காக குர்ஆனும் சுன்னாவும் பற்றிப் பிடிக்கப்படல் வேண்டும்; பிக்ஹு சட்டங்களிலுள்ள கருத்து வேறுபாடுகளில் வாதப் பிரதிவாதங்கள் செய் வதற்காகவல்ல. அந்தப் பணி மேற்கொள்ளப்படும் போது இஸ்லாத்தின் தூய்மையும் அதன் நீதியும் அதன் உயர் விழுமியங்களும் பண்பாடுகளும் தன்னிகரற்ற அதன் கொள்கையும் வெளிக் கொணரப்படும். அப் போது நல்லவர்கள் கெட்டவர்கள் அனைவரும் அப் பணியால் கவரப்பட்டு ஒன்றிணைக்கப்படுவார்கள்.

அது மட்டுமல்ல, நபிகளார் செய்த பணி உலகின் எக்காலப் பகுதியில், எப்பிரதேசத்தில் மேற்கொள்ளப் பட்டாலும், அது நல்லவர்கள் கெட்டவர்கள் அனை வரதும் பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடியதாக இருக்கும். அப்பணிக்கு உயர்ந்தவன்- தாழ்ந்தவன், வெள்ளையன்- கறுப்பன், அரபி- அஜமி, முஸ்லிம்-முஸ்லிமல்லாதவன் என்ற வேறுபாடு தெரியாது. இஸ்லாமியப் பணி மனித சமூகத்துக்கு நன்மைகளை வழங்க வந்த பணி; முஸ்லிம் சமூகத்துக்கு மட்டுமல்ல... முஸ்லிம் சமூகத்திலிருக் கின்ற ஓர் இயக்கத்துக்கு மட்டுமல்ல... ஒரு குடும்பத் துக்கோ ஒரு தனிமனிதனுக்கோ அல்ல.

இஸ்லாமியப் பணி ஓரிடத்தில் நடைபெறுமாயின் இந்த உண்மையை அங்கிருப்பவர்கள் உணர்ந்து கொள் வார்கள். அதன் விளைவாக அங்கிருக்கின்ற நல்லவர்கள் கெட்டவர்கள் அனைவரும் அப்பணியால் கவரப்படுவார் கள். அப்பணி மேலும் தொடர வேண்டும்; வளர வேண் டும் என அவர்கள் ஆசைப்படுவார்கள். உதவிகளையும் ஒத்துழைப்புக்களையும் வழங்குவார்கள்.

இத்தகைய ஒரு பணியை எதிர்த்து நிற்பவர்கள் இருந்தால் அது ஒரே ஒரு குழுவாக மட்டுமே இருக்க முடியும். மக்களின் இயலாமைகளைப் பயன்படுத்தி, தமது நலன்களை அடைந்து கொள்ள விரும்புபவர் கள், பிரித்தாளும் தந்திரத்தின் மூலம் சமூகத்தைக் கூறு போட்டுத் தமது செல்வாக்கையும் ஆதிக்கத்தையும் தக்கவைத்துக் கொள்ள விரும்புபவர்கள், அறியாமைகள் சமூகத்தில் தொடர்ந்தும் இருந்தால்தான் தமது குறைக ளை மக்கள் கண்டுபிடிக்கமாட்டார்கள் என்ற நோக்கில் அறிவின் வருகையைத் தடுத்து நிறுத்த நினைப் பவர்கள், அநியாயக்காரர்களும் வெளிப்படையாகவும் சதிகள் செய்துவிட்டு நல்லவர்கள் போல் நடித்துக் கொள்பவர்கள், யாரோ செய்த வேலைகளுக்குத் தமது பெயரைப் போட்டுக் கொள்பவர்கள்...

சமூக நலனை மையமாகக் கொண்டு நலன்களைப் பெறுபவர்கள்

விரும்பும் இதுபோன்று கருத்துவேறுபாட்டின் கூட்டமொன்று மட்டுமே இஸ்லாமியப் பணியை எதிர்க்கும். ஆனால் நடுநிலையாக அதைப் பார்க்கும் பொது மனிதர்கள் கூட இஸ்லாமியப் பணியினால் விளையும் நன்மைகளைப் பார்க்கும்போது அதனை ஆதரிக்கவே செய்வார்கள். ஆக, நபிகளார் செய்த பணி இன்று மேற்கொள்ளப் படல் வேண்டும்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் எத்தகைய இலக்குகளை அடைந்தார்களோ அந்த இலக்குகளை அடைவதற்கான பணியாக அது இன்று திட்டமிடப்படல் வேண்டும். அத்திட்டம் பேச்சளவில் மட்டுமல்லாமல் செயல்படுத்தப்படவும் வேண்டும். அத் திட்டத்தால் விளையும் நன்மைகளை மக்கள் கண் கூடாகக் காணவும் வேண்டும். இவ்வாறு நடந்தால் 'இஸ்லாமியப் பணி' என்ற மையப்புள்ளியை நோக்கி மக்கள் அணி திரள்வார்கள். சமூக ஒற்றுமை பற்றிய பேச்சு இருப்பதுபோல் அப்போது கானல்நீராக இருக்க மாட்டாது.

எனினும், கள நிலவரம் என்ன?

பணிகள் துவக்கப்படுகின்றன, முன்னெடுக்கப்படு கின்றன. ஆனால், இறுதி நபி செய்த இஸ்லாமியப் பணி அதன் இலக்குகளோடு சமூக மட்டத்தில் திட்டமிடப் படுவதில்லை; முன்னெடுக்கப்படுவதில்லை. ஒருவேளை அதன் சாயலைக் கொண்ட பணிகள் ஆங்காங்கே நடை பெற்றாலும் தேசிய மட்டத்தில் சமூகத்தை ஒன்றிணைக் கப் போதுமானதாக அவை இல்லை. நடக்கும் பணி களும் பக்கங்களைக் கவரும் வகையாக இல்லை.

குறிப்பிட்ட ஒரு சாராரைக் கருத்தில் கொண்டே பணிகள் நடைபெறுகின்றன. அவை அவர்களை மாத் திரமே கவருகின்றன. வாழ்வின் ஓரிரு துறைகளோடு பணிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. பழையவற்றை விட்டுவிட்டுப் புதிதாகப் பணிகளைத் துவக்குபவர் களும் முன்னர் யாரோ செய்தவற்றையே வேறு ஒரு பெயரில் மீண்டும் செய்கிறார்கள்.

இவ்வாறு ஒரு சில துறைகளுக்கு மட்டுப்படுத்தப் பட்டதாகவும் தனிமனிதர்களினதும் குழுக்களினதும் நலன்களுக்குட்பட்ட ஆர்வங்களைப் பின்னணியாகக் கொண்டும் ஆரம்பிக்கப்படும் பணிகள் சமூகத்தை ஒன்றுசேர்க்கப் போதுமானவையல்ல. மாறாக, இவை சமூகத்தைப் பிளவுபடுத்தவே உதவும்; ஒரு சில நன்மைகளை அப் பணிகளால் சமூகத்துக்கு வழங்க முடிந்த போதிலும் கூட!

ஆக, சமூக ஒருமைப்பாடு குறித்துப் பேசுபவர்கள் நாவன்மைக்காகவும் மேடையை அலங்கரிப்பதற்கா கவும் பேசிவிட்டுப் போகாமல், சமூக ஒருமைப்பாடு அல்லாஹ்வின் தூதர் செய்த பணியை அதன் இலக்கு களோடு திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதிலேயே தங்கியிருக்கிறது என்ற பேருண்மையை உணர வேண்டும். அந்தப் பணியை இன்றைய சூழலில் திட்டமிடுவது பற்றியும் நமது முன்னோர் செய்தவை பற்றியும் சமூகத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு பிரிவினர்களுக்கு மத்தியில் கலந்துரையாடல்களை ஆரம்பிக்க வேண்டும்.

பல நாடுகளில் இருந்து முஸ்லிம்கள் அன்றைய சூழலைக் கருத்தில் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட பணிகளை அதே வடிவில் செய்து விட்டுப் போகாமல், சமூகம் ஒன்றுபட்டிருக்கும் வகையில் குட்டிச் சுவர்களையும் தகர்த்து பல்வேறு பாகுபாடுகளிலிருந்து விடுபட வேண்டும். ஒரு தேசத்தைப் பற்றி இயக்கத்தைப் பற்றி மட்டுமே பேசுவதை விட்டும், எமக்கு முன்னால் உள்ள பொறுப்பு இத்தகைய நோக்கங்களுக்காகவும் நிர்ப்பந்தத்துக்காகவும் சமூக ஒருமைப்பாட்டைத் தவிர்த்துப் பேசுவோமாயின், இவ்வாறு பணிகளில் மாற்றங்கள் தேவையில்லை.

### பணிதான் சமூகத்தை ஒன்றுபடுத்தும்

பணிதான் சமூகத்தை ஒன்றுபடுத்தும் என்பதற்கான சான்றுகள் குர்ஆன் சுன்னாவிலும் இருக்கின்றன; நடைமுறைகளும் அதனை உண்மைப்படுத்துகின்றன. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்: "ஜிஹாத் (இஸ்லாமியப் பணியைக் குறிக்கும் ஒரு குர்ஆனியப் பிரயோகம்) நல்லவர்கள், கெட்டவர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து நடத்தும் பணியாகும்."

இதன் பொருள் இஸ்லாமியப் பணி நடைபெறும் போது அதில் நல்லவர்கள் கெட்டவர்கள் அனைவரும் ஒன்றிணையும் வாய்ப்பு இருக்கிறது என்பதாகும். ஒன்றுபட்ட சமூகத்தை அல்குர்ஆன் கூறும்போதெல்லாம் அந்த உம்மத்தின் முதல் வேலையாக இருப்பது இஸ்லாமியப் பணியே என்பதை அழுத்தமாகக் கூறுகின்றது.

"மனித சமூகத்தில் தோற்றுவிக்கப்பட்ட சிறந்த சமுதாயமாக (உம்மத்தாக) நீங்களே இருக்கிறீர்கள். (காரணம்) நீங்கள் நன்மையை ஏவுகிறீர்கள்; தீமையைத் தடுக்கின்றீர்கள்." (3:110)

என்று பணியை முதன்மைப்படுத்தி விட்டுத்தான்... "அல்லாஹ்வை ஈமான் கொள்கிறீர்கள்" என்பதனை இரண்டாவதாகக் கூறியிருப்பதைப் பார்க்கிறோம்.

"நீங்கள் நன்மையின் பால் அழைத்து நல்லதை ஏவித் தீமையைத் தடுக்கும் உம்மத்தாக இருக்க வேண்டும். அவர்களே வெற்றிபெற்றவர்கள்" (3:104) என்ற வசனத்திலும் பணிதான் ஒன்றுபட்ட உம்மத்தின் சிறப்பம்சம் என்பது மீண்டும் வலியுறுத்தப்படுகிறது. இந்த வசனத்தில் பணி முன்னிறுத்திக் குறிப்பிடப்பட்டிருப்பது நோக்கத்தக்கது; ஈமான் குறிப்பிடப்படவில்லை.

நடைமுறைகளும் இதனையே நிரூபிக்கின்றன. அல்லாஹ்வின் தூதர் செய்த எந்த ஒரு வேலையாக இருந்தபோதிலும், அதனை அறிவிப்பு செய்கின்ற போது மக்கள் அதனால் ஒன்றிணைக்கப்படுகின்றார்கள். அகழ்ப்போரில் நடைபெற்ற ஒரு சம்பவம் இதற்குச் சிறந்த சான்றாகத் திகழ்கிறது.

அகழ்ப்போரை ஜாஹிலியத்துக்கு உட்பட்ட, அன்றைய பள்ளிவாசல் நிர்மாணம், அகழ்ப்போரை எதிர்க்க சங்கம் என்பன ஒரு சிறப்பான பணியில் ஒன்றுசேர்ந்தன. அதனைத் தொடர்ந்து அன்றுள்ள ஏனைய இயக்கங்கள் அமைப்புகள் அனைத்தும் அவர்கள் மேற்கொண்ட முயற்சிக்கு உதவியும் ஒத்தாசையும் நல்கி முழு நாட்டிலும் ஒரு சிறந்த புரட்சியை அன்று மக்கள் வழங்கியுள்ளனர்.

அங்கு நடைபெற்ற நற்செயல் இருவகை: ஐங்காலத் தொழுகைக்காக மஸ்ஜிதுகளை மூடி தொழுகையில் பல சமூகத்தைக் காக்கவும்; தொழுகையை இலாபத் செய்யவும் வழி ஏற்படுத்தினர். இப்போது அல்ஹஸனாத் பணிகள் உள்ள பள்ளிவாசல்கள் ஐங்காலத் தொழுகையில் மட்டுமல்ல ஜும்ஆவின் தினம் போல தொழுகையாளர்களால் நிரம்பி வழிகின்றன. இத்தகைய தொழுகை மக்களின் உள்ளங்களில் தாக்கமுள்ளவையாகவும் மாறுகின்றது.

இதேபோன்று பாகிஸ்தானிலும் இஸ்லாமிய அமைப்புகள் மற்றும் பள்ளிவாசல்களும் மதரஸாக்களும் மேற்கொள்ளும் பல்வேறுபட்ட சமூகப் பணிகளும் மக்களிடையே வேற்றுமைகளுக்கு மத்தியிலும் ஒற்றுமை என்ற கோட்பாட்டை அமுல்படுத்தியிருக்கிறது. இவை சிறிய உதாரணங்களானாலும் ஒரு பெரிய உண்மையை எடுத்துக் காட்டுகின்றன.

துருக்கி ஒரு முஸ்லிம் நாடு. எனினும், அந்நாட்டின் அரசியலமைப்புச் சட்டம் மதச்சார்பின்மையை அடிப்படையாகக் கொண்டு வரையப்பட்டுள்ளது. நீண்ட காலத்தின் விழுமியங்களைத் தொடர்ந்து காலம் அதாதுர்க் எனும் கொடுங்கோலன் இஸ்லாத்தின் அடையாளங்களைக் கூட அழிக்க முற்பட்டான். ஆனால், இன்று அங்கே நடைபெறுவது என்ன?

ஐரோப்பாவின் நோயாளி என்று வர்ணிக்கப்பட்ட துருக்கி இன்று ஐரோப்பாவின் செல்வந்த நாடுகள் வரிசையில் 4ம் இடத்தை எட்டியிருக்கிறது.

ஆட்சியிலிருக்கும் அர்துகானின் இஸ்லாமியக் கட்சியை அங்குள்ள இஸ்லாமியர்கள் மட்டுமல்ல, இஸ்லாத்தை விரும்பாதவர்களும் கூட ஆதரிக்கின்றனர். தொடர்ந்து மூன்றாவது முறை தேர்தலில் வெற்றியீட்டியுள்ள அவரது கட்சி துருக்கிய வரலாற்றில் மொத்த வாக்காளர்களில் 50 சதவீத வாக்குகளைப் பெற்று சாதனை படைத்துள்ளது. துருக்கி முஸ்லிம் சமூகம் வேறுபாடுகளை மறந்து ஒன்று சேரும் ஒரு மகத்தான பணியை இன்றைய துருக்கி அரசு மேற்கொண்டு வருகிறது.

ஆக, முஸ்லிம் சமூகத்தை ஒன்றிணைப்பதற்கு பயான் களங்கள், அமைப்புகளை விரிவுபடுத்தவும் முயல்வதோடு அல்லாஹ்வின் தூதர் செய்த பணியில் ஒரு சிறப்பான பணி முன்னெடுக்கப்பட வேண்டும்.

ஜம்இய்யதுல் உலமா மற்றும் இஸ்லாமிய அமைப்புகள், இயக்கங்கள், முஸ்லிம் பிரமுகர்கள், சங்கங்கள், நிறுவனங்கள் அனைத்தும் இத்தகைய ஒரு பணியின்பால் கவனம் செலுத்துவது பல்லாயிரம் பயான்களை விட சிறந்தது. இருப்பினும், எப்போதுதான் அது நடக்க வேண்டும் என்று ஒவ்வொரு சாமானியனும் நினைக்கின்ற போது, ஒருமைப்பாடு வெறும் கனவாகவே தொடர்ந்தும் இருக்கிறது. ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கப் படையின் வெளியேற்றமும் பக்தாத் குண்டு வெடிப்பும்: ஓர் உள்நாட்டுப் போருக்கான முன்னுரையா?

PUBLIC LIBRARY
JAFFNA

- ஹாஜு அம்ரா -

ஈராக்கில் அமெரிக்கா நடத்தி வந்த 9 ஆண்டு காலப் போர் அதிகாரபூர்வமாக கடந்த மாதம் 15ஆம் திகதி முடிவுக்கு வந்துள்ளது. ஈராக்கின் அதிபர் சதாம் ஹுசைன் பயங்கர ஆயுதங்களைத் தயாரிப்பதாக பொய் கூறிக் கொண்டு 2003ஆம் ஆண்டு மார்ச் மாதம் போர் தொடுத்தார் அப்போதைய அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ். ஆனால், அங்கு எந்த பயங்கர ஆயுதமும் சிக்கவில்லை. இந்த ஆக்கிரமிப்பில் சதாமின் ஆட்சி தூக்கி எறியப்பட்டது. சதாம் ஹுசைன் 2003ஆம் ஆண்டு டிசம்பரில் கைது செய்யப்பட்டு தூக்கிலிடப்பட்டார். அவரது பிள்ளைகள், மூத்த அமைச்சர்கள், அதிகாரிகள் என பலரும் கொலை செய்யப்பட்டனர். சதாமின் மனைவி, மகள் உள்ளிட்டோர் வெளிநாடான ஜோர்தானில் தஞ்சம் புகுந்தனர்.

2007ஆம் ஆண்டு போர் மிக உச்சத்தில் இருந்தபோது அதிகபட்சமாக சுமார் 1.7 இலட்சம் அமெரிக்கப் படைகள் ஈராக்கில் இருந்தன. இக்கால கட்டத்தில் சுமார் 1 லட்சம் அப்பாவி பொது மக்கள் கொல்லப்பட்டனர். 4,500 அமெரிக்க வீரர்களும் பலியாயினர். 30,000 வீரர்கள் படுகாயமடைந்தனர்.

இந்தப் போருக்காக அமெரிக்கா செலவிட்ட தொகை 45 இலட்சம் கோடியைத் தாண்டும். மொத்தத்தில் சுமார் 15 இலட்சம் அமெரிக்க வீரர்கள் ஈராக் போரில் ஈடுபடுத்தப்பட்டனர். சதாம் கொல்லப்பட்டு அங்கு தேர்தலும் நடத்தப்பட்டது. ஆட்சிக்கு வர வேண்டிய அரசை அமெரிக்கா நியமித்தது. அல்மாலிகி இப்போது பிரதமராக உள்ளார். இந்நிலையில் ஈராக் மீதான ஆக்கிரமிப்பை விரைவில் முடிவுக்குக் கொண்டு வர வேண்டும்; படைகளை வாபஸ் பெற வேண்டும் என்ற கோரிக்கைகள் அமெரிக்காவில் அதிகரித்தன. இதனையடுத்து 2011ஆம் ஆண்டு இறுதிக்குள் படைகள் அனைத்தும் வாபஸ் பெறப்படும் என முன்னாள் அதிபர் ஜோர்ஜ் புஷ் அறிவித்தார்.

அவரைத் தொடர்ந்து பதவிக்கு வந்த அதிபர் ஒபாமாவும் ஈராக்கில் நிலைகொண்டுள்ள அமெரிக்கப் படைகளை துரித கதியில் வாபஸ் பெறுவதாக அறிவித்தார். அதன்படி படையில் பெரும்பாலான அமெரிக்கப் படைகள் நாடு திரும்பின.

கடைசியாக சுமார் 5,500 வீரர்கள் மட்டும் ஈராக்கில் நிலைகொண்டிருந்தனர். இவர்களும் தாய் நாடு திரும்பும் நோக்கில் குவைத்திலுள்ள அமெரிக்க இராணுவ முகாம்களுக்குத் திரும்பியுள்ளனர். இந்த இராணுவ நடவடிக்கை மூலமாக அமெரிக்காவுக்கு பெரும் பொருட் செலவும் உயிர் இழப்பும் ஏற்பட்டும் அதற்கேற்ப அரசியல் இலாபம் கிடைக்கவில்லை என்று விமர்சகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். அமெரிக்கப் படை வாபஸ் பெறப்படுவதற்கு முன்பாக 8 இலட்சம் ஈராக்கியர்களைக் கொண்ட இராணுவத்தை அமெரிக்கா உருவாக்கி பயிற்சியும் அளித்தது. இப்போது இவர்களின் கையில்தான் ஈராக்கின் பாதுகாப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஆனால் ஈராக் இராணுவத்திடம் இப்போது போதுமான ஆயுதங்களோ அடிப்படைக் கட்டமைப்போ இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஈராக் விமானப் படையிடம் வெறும் 3 சிறிய விமானங்கள் மாத்திரமே உள்ளன. இதனால் நாட்டு பாதுகாப்பை உறுதிப்படுத்த ஈராக் இராணுவத்தையும் விமானப் படையையும் மேம்படுத்தியாக வேண்டும். இதற்கு ஏராளமான செலவுகளும் நெடுங் காலமும் தேவை.

அமெரிக்கப் படைகள் வெளியேறுவதை பெரும்பாலான ஈராக்கியர்கள் வரவேற்றாலும் நாட்டில் உள்நாட்டுப் போர் வெடிக்கலாம்; நாசகாரர்கள் அதிகரிக்கலாம் என்ற அச்சமும் நிலவுகிறது. ஈராக்கில் 50 வீதமான ஷீஆக்களும் 40 வீதமான சுன்னிகளும் வசித்து வருகின்றனர். இவர்கள் தவிர குர்து உள்ளிட்ட பிற இனத்தினரும் வசிக்கின்றனர்.

ஈராக்கிலிருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறிய ஓரிரு தினங்களில் ஈராக்கியத் தலைநகர் பக்தாதில் இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்புகளில் 63 பேர் கொல்லப்பட்டு 200க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். நகரின் ஷீஆ மற்றும் சுன்னி இன மக்கள் வசிக்கும் 13 இடங்களில் 14 குண்டு வெடிப்புகள் நிகழ்ந்தன என்று ஈராக்கின் உள்துறை அமைச்சகம் தெரிவித்தது.

இந்தத் தாக்குதலுக்கு இதுவரை யாரும் உரிமை கோரவில்லை. ஈராக்கின் மிக மூத்த சுன்னி அரபு அரசியல்வாதியும் நாட்டின் துணை அதிபருமான தாரிக் அல்ஹாஷிமியைக் கைதுசெய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டதை அடுத்து அரசியல் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ள சூழலில் இந்த குண்டுவெடிப்புகள் இடம்பெற்றுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...ஈராக்கில் தற்போது ஆட்சியில் இருக்கும் தேசிய ஒற்றுமை அரசாங்கம் தாக்குதல் மற்றும் குண்டு வெடிப்புகளை எதிர்கொண்டுவரும் நிலையிலும் உள்நாட்டுப் பிரச்சினைகள், மோதல்கள் அதிகரிக்கக் கூடும் என்ற அச்சங்கள் எழுந்துள்ள நிலையிலும் இந்தத் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

இதனிடையே ஈராக்கின் பிரபல ஸுன்னி பழங்குடி இனத் தலைவரான அலி ஹாதிம் சுலைமான், நாட்டின் பிரதமர் நூரி அல்மாலிகியை ஸதாம் ஹுசைனுடன் ஒப்பிட்டு அவர் நாட்டை ஒரு சர்வாதிகார ஆட்சியை நோக்கி இட்டுச் செல்கிறார் என்று குற்றம் சுமத்தியுள்ளார்.

ஈராக்கை மயான பூமியாக மாற்றிய அமெரிக்கப் படை நாடு திரும்பும்போதும் ஈராக்கில் நாச விதைகளையே தூவி விட்டுச் சென்றுள்ளது. அதன் வெளிப்பாடுதான் அமெரிக்கப் படை நாடு திரும்பி ஒரு சில நாட்களுக்குள் பக்தாதில் தொடர் தாக்குதல்களாக வெடித்திருக்கிறது. ■

# எகிப்தின் இரண்டாம் கட்ட தேர்தலில் இஸ்லாமிய கட்சிகள் இமாலய வெற்றி


எகிப்தில் நடைபெற்ற இரண்டாம் கட்ட தேர்தலில் இஸ்லாமிய கட்சிகள் 65 வீத வாக்குகள் பெற்று வெற்றி பெற்றுள்ளதாக எகிப்தின் தேர்தல் கமிட்டி கூறியுள்ளது. ஹுஸ்னி முபாரக்கின் வீழ்ச்சிக்குப் பிறகு எகிப்தில் மூன்று முறையாக சுதந்திரமான தேர்தல்கள் நடைபெற்று வருகின்றன.

எகிப்தில் மூன்று கட்டங்களாக தேர்தல்கள் நடைபெறுகிறது. முதல் கட்ட தேர்தலில் எகிப்தின் பலம் வாய்ந்த முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தின் (இஃவானுல் முஸ்லிமீன்) அரசியல் பிரிவான சுதந்திரம் மற்றும் நீதிக்கான கட்சி (Freedom and Justice Party) 40 வீத வாக்குகளைப் பெற்று பாராளுமன்றத்தில் தனிப் பெரும் கட்சியாக உருவெடுத்தது. எகிப்து தேர்தல் களத்துக்கு புதிய கட்சியான ஸலபி இயக்கத்தைச் சேர்ந்த அந்நூர் கட்சி 20 வீத வாக்குகளைப் பெற்றது.

இவ்விரு இஸ்லாமியக் கட்சிகள் மற்றும் 1990களில் இஃவானுல் முஸ்லிமீன் அமைப்பிலிருந்து பிரிந்து சென்றவர்கள் உருவாக்கிய அல்வஸத் எனும் இஸ்லாமியக் கட்சியும் சேர்ந்து சுமார் 65-70 வீத வாக்குகளைப் பெற்றன. எகிப்தின் மதசார்பற்ற கட்சியான எகிப்திய பிளொக் 15 வீத வாக்குகளை மட்டுமே பெற்றது.

கடந்த 21ஆம் திகதி நடைபெற்ற இரண்டாம் கட்ட தேர்தலிலும் இஃவானுல் முஸ்லிமீன் அரசியல் பிரிவு 37 வீத வாக்குகளையும் அந்நூர் கட்சி 29 வீத வாக்குகளையும் பெற்றுள்ளன. மதசார்பற்ற எகிப்திய பிளொக் கட்சி 7 வீத வாக்குகளை மாத்திரமே பெற்றுள்ளமை மதசார்பின்மையையும் அடக்குமுறை ஆட்சியையும் எகிப்திய மக்கள் வெறுக்கின்றனர் என்பதையே காட்டுகிறது.

மூன்றாம் கட்ட தேர்தல் எதிர்வரும் ஜனவரி 3ஆம் திகதி நடைபெறவுள்ளது. நாட்டின் மொத்தமாகவுள்ள 27 மாகாணங்களில் ஒவ்வொரு கட்டத்திலும் சுமார் 9 மாகாணங்களில் தேர்தல்கள் நடைபெறுகின்றன. ஜனவரி 11ஆம் திகதிக்குப் பிறகே முழுமையான முடிவுகள் வெளிவரும் என நீதிபதிகளைக் கொண்ட உயர் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. எகிப்தின் வரலாற்றில் நியாயமாகவும் சுதந்திரமாகவும் நடைபெற்ற முதல் தேர்தல் இதுவென சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.



மக்களின் உண்மையான உணர்வுகளைப் பிரதிபலிக்கின்ற இம்மக்கள் ஆணையை அனைவரும் மதிக்க வேண்டும் என சுதந்திரம் மற்றும் நீதிக்கான கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது. பல்லாண்டு காலமாக கடுமையான அடக்குமுறைகளையும் சிறைப்படுத்தல்களையும் எதிர்கொண்ட இஃவானுல் முஸ்லிமீன் அமைப்பினர், எகிப்தின் முன்னாள் அதிபர் ஹுஸ்னி முபாரக்கிற்கு எதிரான மக்கள் புரட்சியில் மகத்தான பங்காற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இஸ்லாமியக் கட்சியின் வெற்றியினால் முழு இஸ்லாமிய உலகமும் உவகையடைந்துள்ளது. ஹமாஸின் தலைவர்கள் இவ்வெற்றியைக் கொண்டாடி வருகின்றனர்.

அரபு வசந்தத்தின் பின்னர் டியூனிசியாவில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதையடுத்து இஸ்லாமிய உலகில் நம்பிக்கை ஒளிக்கீற்று சுடர்விடத் துவங்கியுள்ளது. இன்று அதன் ஒளி எகிப்தின் அரசியலிலும் சுடர்விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலஸ்தீன் என்றொரு நாடு கிடையாது

## - அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளர் கிங்ரிச் -



பலஸ்தீன மக்கள் இஸ்ரேலை அழிப்பதற்காக உருவாக்கப்பட்டவர்கள் என்று 2012ஆம் ஆண்டு அமெரிக்காவில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஒபாமாவை எதிர்த்து குடியரசுக் கட்சி சார்பில் போட்டியிட உள்ள நியூட் கிங்ரிச் தெரிவித்துள்ள கருத்து இஸ்லாமிய உலகில் பலத்த கண்டனத்திற்குள்ளாகியுள்ளது.

பலஸ்தீன் என்றொரு தனி நாடு இருந்ததில்லை என்றும் உஸ்மானியப் பேரரசின் ஒரு பகுதியாகவே 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் வரை அது இருந்து வந்துள்ளது என்றும் கிங்ரிச் தெரிவித்துள்ளார். பலஸ்தீனில் உள்ள அரபிகள் பல இடங்களுக்கும் சென்று வசித்திருந்தும் அரசியல் காரணங்களினால் 1940முதல் இஸ்ரேலுக்கு எதிரான போரில் ஈடுபட்டிருப்பது கவலைக்குரியதாக உள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

கடந்த மாதம் ஒரு யூத தொலைக்காட்சி நிறுவனத்துக்கு அளித்துள்ள பேட்டியில் கிங்ரிச் இவ்வாறு உண்மைக்கு புறம்பான கருத்துக்களை தெரிவித்ததை அடுத்து பலஸ்தீன மக்கள் கடும் கண்டனங்களைத் தெரிவித்துள்ளனர். பலஸ்தீன அரசாங்கமான ஹமாஸ் இயக்கமும் இஸ்ரேலை அழிப்பதற்கு தீவிர முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகவும் கிங்ரிச் தெரிவித்துள்ளார். யூதர்களின் ஆதரவைப் பெறுபவர்கள்தான் அமெரிக்க அதிபராக வருவதற்கு அதிக வாய்ப்பு இருப்பதால் கிங்ரிச் இவ்வாறு இஸ்ரேலுக்கு ஆதரவான கருத்துக்களை கூறி வருகிறார் என்பதே உண்மை.

இவ்வாறான கருத்துக்களைத் தெரிவித்துள்ள கிங்ரிச், அதிபர் தேர்தலில் நிற்பதற்கு தகுதியற்றவர் என்று ஹனான் அஷ்ராவி என்ற பலஸ்தீன் உயர் அரச அதிகாரி கண்டனம் தெரிவித்துள்ளார். 1969ஆம் ஆண்டு இஸ்ரேலை ஆட்சிசெய்த கோல்டா மேயரைப் போன்று கிங்ரிச் கருத்து தெரிவித்துள்ளதாக அஷ்ராவி தெரிவித்துள்ளார்.

கிங்ரிச்சின் கருத்துக்கு பதிலளித்துள்ள பதாஹ் அமைப்பின் உயர் மட்ட அங்கத்தவரும் பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸின் அரசியல் ஆலோசகருமான நபீல் ஷஅத், இவ்வுண்மையை யாரும் திரிக்க முடியாது என்றும் இதுவரை பறிக்கப்பட்டுள்ள உரிமைகள், வாழ்வாதாரங்களை மறந்து வந்தவர்கள் தற்போது தங்களின் இருப்பை மறுதலிப்பதையே இது காட்டுகின்றது எனக் குறிப்பிட்டுள்ளனர்.

# மாலைதீவில் இஸ்லாமிய ஷரீஆவை நடைமுறைப்படுத்தக் கோரி மக்கள் பேரணி

மாலைதீவில் இஸ்லாமிய சட்ட திட்டங்களை அமுல்படுத்துமாறும் இஸ்லாத்திற்கு எதிரான செயல்களை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்து அண்மையில் மாலைதீவின் தலைநகரான மாலியில் ஆயிரக்கணக்கானோர் பேரணி ஒன்றை நடத்தினர்.

பல்வேறு முஸ்லிம் அமைப்புகளும் பிரதான எதிர்க் கட்சியான அதாலத் கட்சியும் இணைந்து இந்தப் பேரணியை ஏற்பாடு செய்திருந்தன.

"இஸ்லாமிய ஷரீஅத் சட்டங்கள் அமைதிக்கு சமமானது" என எழுதப்பட்ட சுலோகங்களை பேரணியில் கலந்து கொண்டவர்கள் உயர்த்திப் பிடித்திருந்தனர். இஸ்ரேலுக்கான நேரடி விமானப் போக்குவரத்தை நிறுத்த வேண்டும், மதுபானத்திற்கு தடை விதிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்த மக்கள், அதிபர் முஹம்மத் நஷீத் ஷரீஅத் சட்டங்களுக்கு மதிப்பு அளிக்கவில்லை எனவும் குற்றம் சுமத்தினர்.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் நோக்கில் மாலைதீவு அதிபர், மதுபானத்திற்கும் விபசாரத்திற்கும் மௌன அனுமதியை வழங்கியுள்ளதாக அவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதற்கிடையே ஒரு பிரிவினர் ஜனாதிபதிக்கு ஆதரவாகவும் பேரணி ஒன்றை நடத்தினர். ஆனால் இஸ்லாத்தின் நடுநிலை நிலைப்பாட்டை மக்கள் பேணிக்காக்க வேண்டும் என ஜனாதிபதி அலுவலகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சி பற்றிய இஸ்லாமிய சிந்தனை:

## உஸ்மானியர்களின் வீழ்ச்சியும் இஸ்லாமிய இயக்கங்களின் அரசியல் அனுபவங்களும்

ஏ. அப்துல் மலிக்

இஸ்லாம் சுமார் 1400 வருடங்களாக மக்களின் கவனிப்பை ஒரு சமூகத்தில் ஆட்சி செலுத்தியுள்ளது. கிலாபத்துர் ராஷிதாவுக்குப் பின்னர் உமையாக்கள், அப்பாஸியாக்கள் பின்னர் பாத்திமிக்கள், உஸ்மானியர் மற்றும் முகலாயர் என பல பிரிவினர் இஸ்லாமிய ஆட்சியாளர்களாக அரங்கேறியபோதும், ஆட்சி முறைமையில் அல்குர்ஆன் கூறிய அடிப்படை சிந்தனையில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை.

உஸ்மானிய இஸ்லாமிய சாம்ராஜ்யம், 1924ம் ஆண்டு வரை உலகின் ஆட்சி தொடர்பான 'இஸ்லாமிய சிந்தனை'யின் பிரதிநிதியாக எழுந்து நின்றது. உஸ்மானிய சாம்ராஜ்யத்தின் சில தவறுகளையும் ஆட்சியாளர்களின் போக்குகளையும் இஸ்லாமிய சீர்திருத்தவாதி ரஷீத் ரிழா போன்றோர் கடுமையாக விமர்சித்துள்ளனர். அவை ஆட்சியாளர்களுக்கான ஆலோசனைகளாகவே அமைந்தன; ஒருபோதும் ஆட்சி சம்பந்தமான இஸ்லாமிய சிந்தனையை தகர்ப்பதாக அந்த ஆலோசனைகள் அமையவில்லை.

ஆட்சியாளர்கள் அல்லாஹ்வுக்கு கட்டுப்பட்டு, அவனது வழிகாட்டலாக அல்குர்ஆன்- ஸுன்னாவின் வழியாகக் கட்டுப்பட வேண்டும் என்பதே அச்சிந்தனையாகும். அநீதி, அட்டூழியங்களை எல்லாம் புரிந்துவிட்டு இறுதியில் "நான் அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டேன்; எனக்கு கட்டுப்படுங்கள்" என ஆட்சியாளர்கள் கேட்பது நகைக்கவைக்கின்றது.

அல்குர்ஆன், ஸுன்னாவின் வழியில் இருந்து ஒரு சாண் விலகினாலும் தான் அல்லாஹ்வுக்கு வழிப்பட்ட ஆட்சியாளர் என்ற தகுதியை இழக்கத் தகுதியானவர் என்பதை அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் ஆட்சி மிகத் தெளிவாக படம்பிடித்துக் காட்டுகிறது. பாத்திமியர், மார்க்ஸியம், கம்யூனிஸம், மதச்சார்பின்மை... என அல்லாஹ்வின் இருப்பையே மறுக்கும், இஸ்லாத்தை வேரோடு களையெடுக்கத் தலைப்பட்ட கோட்பாடுகளை எழுபது எண்பது வருடம் தூக்கிப் பிடித்த ஆட்சியாளர்கள், எப்படி தம்மை அல்லாஹ்வுக்கு வழிப்பட்ட ஆட்சியாளர் என கடைசிக் காலத்தில் மார்தட்டிக் கூற முடியும்?

உண்மையில் முஸ்லிம் உலகத்தினர் அப்பாவிகளே. "பிஸ்மில்லாஹ்" என ஒரு ஆட்சியாளர் தனது உரையை ஆரம்பித்துவிட்டால் போதும், உரையின் அடுத்த பகுதிகள் அனைத்தையும் முழுக்க நம்பிவிடுவார்கள். "பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்" என தனது உரையை ஆரம்பித்த ஹுஸ்னி முபாரக், பலஸ்தீன முஸ்லிம்களை இஸ்ரேல் கொலை செய்வது நியாயமே; எகிப்து தனது மக்களுக்கு எரிவாயுவை அதிக விலையிலும் இஸ்ரேலுக்கு குறைந்த விலையிலும் வழங்கியதும் நியாயமே என மக்களையே வழங்களை நியாயப்படுத்திவிட்டுச் சென்றுள்ளார். இஸ்லாம் தெளிவாக வரையறுத்துள்ள ஆட்சியாளரைக் கூட இனங்காணத் திராணியற்ற நிலையில் எமது சமூகத்தின் நிலை உள்ளது.

இன்று எகிப்தில் நடைபெறுவதைப் பார்க்கும்போது, மேற்கத் திருப்தியிலான சடங்குகளுக்குப் பின்னால் இருப்பதிலிருந்து மக்கள் விலகியிருப்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடிகிறது. ஹுஸ்னி முபாரக்கின் போக்கில், அமெரிக்கா இராணுவ ஜனநாயகம் அல்லது இஸ்லாமியர்கள் தான் அந்த நேரத்தில் ஆட்சி செய்ய முன்வந்தாலும் இஸ்லாமியர்கள் சகித்துக் கொள்ள மாட்டார்கள் என்பதை தஹ்ரீர் சதுக்கத்தில் புதிதாக வெடித்துள்ள ஆர்ப்பாட்டங்கள் படம்பிடித்துக் காட்டுகின்றன.

1924ம் ஆண்டு உஸ்மானிய கிலாபத் கலைக்கப்பட்டு, முஸ்லிம்கள் மத்தியில் பிரதேசவாதம் எல்லைகளாக, தனி நாடுகளாக ஏகாதிபத்திய ஐரோப்பிய காலனித்துவத்தால் நிலைநிறுத்தப்பட்டதன் விளைவுகளை அரபிகள் இப்போது நன்கு உணரத் தொடங்கிவிட்டனர். அரபிகள் எல்லைகளை எத்தனித்தும் பிரியக்கூடிய மக்களில் கூட சாதிக்க முடியாத ஒரு விடயம் உண்டு. அதுவே ஒற்றுமை!

இஸ்லாம் கூறியுள்ள 'தேசிய உம்மத்' கோட்பாடு தோற்றுவிக்கப்படாத வரையில் முஸ்லிம் சமூகத்திடையில் மாத்திரமல்ல, அரபிகளுக்கு மத்தியிலும் ஒற்றுமையை ஏற்படுத்துவது சாத்தியமற்றதாகும். இஸ்ரேல்-பலஸ்தீன் விவகாரத்தில் ஏற்பட்ட அரபிகளின் மூன்று யுத்தங்களினதும் தோல்விகள், குவைத்தை ஈராக் ஆக்கிரமித்த போது ஒருமித்த நிலைப்பாட்டுக்கு வர முடியாமல் போனமை, துனிசியா-எகிப்து யெமன் மற்றும் லிபியாவில் மக்கள் எழுச்சிகளின்போது ஆட்சியாளர்கள், பொதுமக்களைக் கொன்று குவிப்பதை விட்டுத் தடுக்க முடியாமல் போனமை, இன்று சிரியாவில் பஷ்ஷார் அல்அஸத் பொது மக்களைக் கொன்று குவிப்பதைத் தடுக்க முடியாது அரபுலகின் தடுமாற்ற நிகழ்வுகள் அனைத்துமே அரபிகள் மத்தியில் ஒற்றுமை கேள்விக்குறியாக மாறியுள்ளதை எடுத்துக் காட்டுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உஸ்மானிய கிலாபத் நிலைத்திருந்தால், இவ்வரு டமோடு பல வருடங்கள் கடந்த போதிலும், ஆசியக் கூட்டணி, ஐரோப்பிய போன்ற அமைப்புக்கள் போன்று ஒருங்கிணைந்த முஸ்லிம்களுக்கு ஒரு கூட்டணியை யாவது வழங்கியிருக்கும். 'முஸ்லிம் உம்மத்' போன்ற ஒன்றை ஒரு பிராந்திய மட்டத்திலாவது அது காப்பாற்றியிருக் கும். இந்தக் குறைந்தபட்ச இலக்கைக் கூட எட்ட முடியாது காடுக் கணையும் ஓர் அமைப்பாக இஸ்லாமிய நாடுகளின் அமைப்பான OIC அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

ஐரோப்பிய காலனித்துவம் அரபு தேசியவாதத் தீக்கு எண்ணெய் வார்த்தது. உஸ்மானிய கிலாபத்திற்கு எதிராக முஸ்லிம்களின் ஒற்றுமையைக் கூறு போட்டு வைத்தது. இதேவேளை, உஸ்மானிய கிலாபத்துக்கு எதிராக இஸ்லாம் கூறும் சகோதரத்துவத்தையும் எதிர்க்கும் ஆட்சிக் குழுக்களையும் தோற்றுவித்தது. காலம் அரபுத் தேசிய அரசியல்வாதிகளைக் கொண்டு ஒரு உஸ்மானிய கிலாபத்தின் அரச மொழியை மாற்றி, லத்தீன் அரிச்சுவடிகளை வழங்கி மத்திய நிலைக்கு மாற்ற இஸ்லாமியர்களை அதன் சுற்றுவட்ட கிலாபத்தை வெறுத்திருந்தனர்.

முஸ்லிம்களின் ஒற்றுமைக்கு வேட்டு வைக்கப் படுவதை நன்கு புரிந்து கொண்ட உஸ்மானிய கலீபா, முஸ்லிம்களை அனைவருக்கும் சமவுரிமை வழங்கும் அரசியல் சீர்திருத்தங்களை வெளியிட்டிருந்தார். 1839ல் அவர் வெளியிட்ட உத்தியோகபூர்வ பிரகடனமான 'ஹத்தாஷரீப்' உஸ்மானிய கிலாபத்தில் அனைத்துப் பிரஜைகளினதும் உயிர், உடைமைகளைப் பாதுகாத்து, வரி செலுத்துவதற்கு ஏற்பாடு செய்தார். 1856ல் வெளியிட்ட 'ஹுமாயூனி' பிரகடனம் மூலம் உஸ்மானிய கிலாபத்தின் பொருளாதாரத்தை சந்தைப் பொருளாதாரமாக மாற்ற முயன்றார்.

1876ல் உஸ்மானிய கிலாபத்தின் அரசியல் யாப்பை அவர் வெளியிட்டிருந்தார். அதன் பிரகாரம், பாராளுமன்றம் மற்றும் செனட் போன்ற மேல் சபையும் தோற்றுவிக்கப்பட்டது. தேர்தல் முறையும் கொண்டு வரப்பட்டு, பல தடவைகள் தேர்தல்களும் நடைபெற்றன. கல்வித்துறையைக் கூட கலீபா சீரமைத்தார். பாரம்பரியக் கல்வி மாத்திரமல்லாது, நவீன கல்வி என தனியான ஒரு பகுதியைத் துவக்கி மற்ற அனைத்துக் கலைகளும் துறைகளும் போதிக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்தார்.

இச்சீர்திருத்தங்கள் ஆரம்ப கட்டங்களில் இருந்தாலும், முஸ்லிம்களின் பன்மைத்துவ, பல்கட்சித் தன்மையை விளங்கி அனைவரையும் சமமாகவும் பிரதிநிதித்துவப் படுத்தும் முறையை கலீபா முன்வைத்தார்.

இந்திய உபகண்டத்தில் முகலாயர்கள் கிறிஸ்தவ மிஷனரிகளை உள்வர அனுமதித்தனர். ஆனால், உஸ்மானியர்கள் இதற்கு அனுமதி கொடுக்கவில்லை. மேற்கு லகம் ஒவ்வொரு கட்டத்திலும் கலீபாவிற்கும் முஸ்லிம் உம்மாவின் ஒற்றுமைக்கு ஏற்படுத்தி வந்த சவால்களை நன்கறிந்திருந்த உஸ்மானியர்கள், முஸ்லிம்களின் ஒற்றுமைக்குள் எவரும் புகுந்து குழப்பம் விளைவிக்கக் கூடாது என்பதில் கவனமாகவே இருந்தனர்.

கலீபா இரண்டாம் அப்துல் ஹமீத் இஸ்தான்பூலில் இருந்து சிரியாவின் டமஸ்கஸ் வழியாக மதீனா வரை 1320 கிலோ மீற்றர் நீளமான புகையிரதப் பாதையை அமைத்தார். இதனூடாக பல மாதங்கள் எடுத்த பயணம் சில நாட்களில் அமையும் நிலையை ஏற்படுத்தினார். பாலைவனத்தினூடாகச் செல்லும் மிகப் பெரிய வசதியை ஏற்படுத்திய அவர், இப்புகையிரதப் பாதை மூலம் வழிப்பறிக் கொள்ளைக்காரர்களிடம் இருந்து ஹாஜிகளைப் பாதுகாத்தார். முஸ்லிம் உம்மாவின் ஒற்றுமைக்கு அவர் செய்துள்ள சேவைக்கு இதைவிட வேறு என்ன ஆதாரம் தேவை!

## இஸ்லாமிய அரசியல் கட்சிகளின் அனுபவங்கள்

முதலாம் உலகப் போரின் பின்னர், 1924ல் உஸ்மானிய கிலாபத் முடிவுக்கு வந்தது. அடுத்து வந்த அரபு ஆட்சியாளர்களும் அதிகாரத்தை இஸ்லாமியரிடமிருந்து பறித்துவிட்டு, மேற்கின் சிந்தனை ஒழுங்கில் புதிய சர்வாதிகாரங்களையே கொண்டு வந்தனர். இது சவூதி அரேபியா மாத்திரமே அல்குர்ஆன்-ஸுன்னாவின் பின்னணியில் அரச அந்தஸ்தில் முதலிடத்தை ஷரீ அத்துக்கு வழங்கியது.

மற்ற முஸ்லிம் நாடுகள் அனைத்திலும் இஸ்லாமிய இயக்கங்களே நவீன இஸ்லாமிய அரசியல் சிந்தனையை காவித்து, எதிர்பாராது அரசாங்கங்களின் ஒடுக்குதலுக்குக் கொண்டுவரப்பட்டன. பல சவால்கள், பேரு பின்னடைவுகளுக்கு மத்தியில் மறு மலர்ச்சி இஸ்லாமிய இயக்கங்களின் அரசியல் அனுபவங்களை முக்கிய மூன்று கோணங்களில் நோக்கலாம்.

## Exclusivism (வெளித்தள்ளும் போக்கு)

இப்போக்குடைய பலர் அரசியல்ரீதியாக தம்மைத் தவிர்ந்துள்ள ஏனைய இஸ்லாமியக் குழுக்கள் கூறும் கருத்தை ஏற்றுக் கொள்வதில்லை; தாம் சொல்வது மாத்திரமே சரி என வாதித்தனர்.

எழுபதுகளின் ஆரம்பத்தில் எகிப்தில் உருவான 'அல்ஜமாஅத் அல்இஸ்லாமியா'வை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். இவர்கள் ஓர் அரசியல் கட்சியாக வெளியே வர தொன்னூறுகள் வரை சந்தர்ப்பம் கொடுக்கவில்லை. எனினும், இவர்கள் அரசியல் ரீதியாக தீவிரப் போக்குடைய வினைதிறன்களைத் தவிர்த்திருந்தனர். அவர்களின் ஆரம்பகாலப் போக்கைப் புரிந்து கொண்டு, எதிர்காலத்தில் அரசியலில் அவர்களின் நுழைவு எப்படியிருக்க வேண்டும் என்ற நோக்கங்களை தெளிவாக உணர்த்திக் கொள்ள முடியவில்லை.

1981 ஒக்டோபர் 6ஆம் திகதி, இந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் மேஜர் காலித் இஸ்லாம்பூலி தலைமையில் எகிப்து ஜனாதிபதி அன்வர் ஸாதாத்தை சுட்டுக் கொன்றனர். இஸ்ரேலுடனும் அமெரிக்காவுடனும் செய்த 'கேம்ப் டேவிட்' ஒப்பந்தத்தில் அன்வர் ஸாதாத் கைச்சாத்திட்டதற்காகவே அவர் கொல்லப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையை இலக்காக எகிப்தின் உல்லாசப் பயணிகளை சமூகத்தில் ஊவாஹ் ஷரீபும் தலைமையில் தோற்றம் பெற்ற அல்ஜமாஆ அல்இஸ்லாமிய்யா, மனைவியைக் கொன்று இங்கை அழிக்க வேண்டும் என கருதிக் கட்டியிருந்தது. பல்கலைக்கழகங்களில் ஆண் பெண் கலவன் கல்வித் திட்டத்தை அவர்கள் எதிர்த்தனர். இசை மற்றும் பாடல் நிகழ்ச்சிகளை வன்முறை கொண்டு நிறுத்தினர்.

அன்வர் சதாத்தின் படுகொலையின் பின்னர் பெரும் சிக்கல்களை எதிர்கொண்ட இவ்வமைப்பு, வன்முறை ஆயுத வழிமுறையை தேர்ந்தெடுத்தது. 1997இல் மஸ்ஜிதுல் அக்ஸா பகுதியில் தாக்குதல் நடத்தி 58 சுற்றுலாப் பயணிகள் கொல்லப்படுவதற்கு இவர்களே பின்னணியில் செயற்பட்டனர்.

2008 முதல் அல்காஇதா அமைப்புடன் இந்த அமைப்பின் உறுப்பினர்கள் சிலர் இணைந்து கொண்டதாக அல்காஇதாவின் அரசியல் இரண்டாவது முக்கியஸ்தர் அய்மன் அல்ஸவாஹிரி தெரிவித்திருந்தார்.

இப்போது வன்முறையைக் கைவிட்டு எகிப்தின் அரசியலிலும் இந்த இயக்கம் குதித்துள்ளது. அடுத்து வரும் நாட்கள் அவர்களின் அரசியல் போக்கை தெளிவாக எடுத்துக் காட்டும்.

(மீதி அடுத்த இதழில் இன்ஷா அல்லாஹ்)

# சின்னதாய் ஒரு சிந்தனை

தலைநகர வீதிகளில் மனிதர்களை விட அதிகமாக முச்சக்கர வண்டிகளைக் காணலாம். முஸ்லிம்களுக்குச் சொந்தமான முச்சக்கர வண்டிகள் பலவற்றின் பின்புறக் கண்ணாடியில் அரபியில் கலிமாவும் ஆங்கிலத்தில் அதன் பொருளும் கீழே வாளின் படமும் அழகாகப் பொறிக்கப் பட்டுள்ளன.

ஆனாலும் இலங்கை போன்ற முஸ்லிம்கள் சிறுபான்மையினராக வாழும் சூழலில் கலிமாவுக்குக் கீழே வாள் பொறிக்கப்படுவது ஆரோக்கியமானதல்ல. அது இஸ்லாத்தைப் பற்றி ஏற்கனவே உள்ள தப்பபிப்பிராயங்களை உறுதிப்படுத்துவதாக இருக்கும்.

லா இலாஹ இல்லல்லாஹ் எனும் திருக்கலிமா மிகப் பெரும் புரட்சிகளுக்கு வித்திட்டது; உலக வரலாற்றை மாற்றியமைத்தது என்பதெல்லாம் உண்மைதான், என்றாலும் இங்கே நாங்கள் வெறுமனே கலிமாவைக் காட்சிப்படுத்துவதால் எதுவும் யாருக்கும் புரியப் போவதில்லை. "நாம் வணங்கும் கடவுளர்களைப் பொய் என்றும் தங்களது அல்லாஹ் மட்டுமே உண்மை என்றும் இவர்கள் சொல்ல வருகிறார்கள் என்று மட்டுமே" அவர்களுக்கு நினைக்கத் தோன்றும். நம்மைச் சுற்றி வாழும் சகோதர சமூகத்தவர்கள் தங்கள் மதக் கோட்பாடுகளால் குழம்பிப் போயிருக்கிறார்கள். கடவுளுக்கும் தாய், மனைவி, மக்கள், பலவீனங்கள், பிரச்சினைகள் இருப்பதைப் பார்க்கும்போது மதம் இடியப்பச் சிக்கலாய் அவர்களுக்குத் தெரிகிறது. கடவுளுக்கே பிரச்சினையென்றால் நமது பிரச்சினையை யாரிடம் சொல்வது எனச் சிந்திக்கும் மனிதன் நாத்திகனாகிறான். கண்ணை மூடிக் கொண்டு பின்பற்றுவதையன்றி ஆய்ந்தறிந்து பின்பற்று முனையும் மனிதனால் இக்கோட்பாடுகளை முழு மனதோடு ஏற்றுக் கொள்ள முடியாது. இப்படிக் குழம்பிப் போயுள்ள மனிதனுக்கு மிகச் சிறந்த தெளிவையும் தீர்வையும் வழங்கக் கூடியதாக "லா இலாஹ இல்லல்லாஹ் அல்லாஹ்" என ஆரம்பிக்கும் சூறதுல் இஃக்லாஸ் அமைகிறது. இந்த சூறாவைப் பொருளுடன் பொது இடங்களில் காட்சிப்படுத்த முடிந்தால் அது அல்குர்ஆனின் பக்கம் மக்களை ஈர்க்க வழிவகுக்கலாம். இன்ஷா அல்லாஹ் முயற்சிக்கலாமே!

– ஸஹ்றா –

மாவனல்லையில்
கடை விற்பனைக்கு
மாவனல்லை நகருக்கு (நிமிட நடை) அண்மையில் நயாவலையில் சகல வசதிகளுடனுமான 10 பேர்ச்சஸ் தரைக்காணி விற்பனைக்கு விடப்பட்டுள்ளது.
தொடர்புகளுக்கு:
0777445306, 0718074140

DIPLOMA IN
PRE SCHOOL TEACHER TRAINING
(Nursery Teaching)
100% Government Recognition
இத்துறையில் இதுவரை அரச அங்கீகாரம் பெற்ற ஒரே ஒரு முஸ்லிம் கல்வி நிறுவனம்
6 வருட அனுபவம்
ஒரு முன்பள்ளியை நடத்துவதற்கு இச்சான்றிதழ் கட்டாயம் என்பது குழந்தை அபிவிருத்தி அமைச்சின் சட்டமாகும்.
OTHER COURSES
Pharmaceutic (Pharmacy)
Nursing
Psychology & Counseling
Course Centers
Thihariya, Kandy, Negambo
AGRA Institute, 66/20C, Ali Jinna Mw, Thihariya.
0718 07 37 97



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஸக்கியா முக்தார்,
பகுதிநேர விரிவுரையாளர், திறந்த பல்கலைக்கழகம்

"அநாதைகள் விடயத்தில் நீதியாக நடைப் பெறுவீர்களா" (2: 137) என்று அல்குர்ஆன் அழுத்திக் கூறுகின்றது.

இயற்கை அனர்த்தங்களையும் போர்களையும் சதா அனுபவித்துக் கொண்டிருக்கும் இன்றைய உலகில் அவற்றுடன் அநாதைகளின் எண்ணிக்கையும் பெருகிச் செல்வதைக் காண்கின்றோம். அவர்களைக் கவனிக்க வேண்டியது முஸ்லிம்களின் கடமை என்பதையும் அறிந்தே வைத்திருக்கின்றோம். ஆயினும், குர்ஆன் குறிப்பிடும் நீதி முறையின்படி அவர்களிடம் நடந்து கொள்கின்றோமா?

ஸூரதுல் பகறாவில் குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகின்றது:

"நற்செயல் என்பது உங்கள் முகங்களை கிழக்கு நோக்கியோ மேற்கு நோக்கியோ திருப்புவதல்ல. மாறாக, அல்லாஹ்வையும் இறுதி நாளையும் மலக்குகளையும் வேதங்களையும் நபிமார்களையும் ஒருவர் முழுமையாக நம்புவதும்; மேலும், அல்லாஹ்வின் மீதுள்ள நேசத்தின் காரணமாக தனக்கு விருப்பமான பொருளை உறவினருக்கும் அநாதைகளுக்கும் வறியவர்களுக்கும் வழிப்போக்கருக்கும் யாசிப்போருக்கும் அடிமைகளை விடுவதற்கும் வழங்குவதும் தொழுகையை நிலைநாட்டுவதும் ஸகாத் கொடுப்பதுமேயாகும்." (2: 177)

இங்காம் அநாதைகளுக்கு உதவுவதை நற்செயல் என்று மட்டும் கூறுவதுடன் நிறுத்திக் கொள்ளவில்லை. மாறாக முக்கிய கடமைகளான தொழுகை, ஸகாத் போன்ற கட்டாயக் கடமைகளுடன் இணைத்துக் கூறுவதன் மூலம் அநாதைகளின் முக்கியத்துவத்தையும் அவர்களுக்கு உதவுவதால் கிடைக்கும் நன்மைகளையும் உச்ச அந்தஸ்தில் வைத்துக் காட்டுகின்றது.

இதேபோன்று அல்குர்ஆனின் 90வது அத்தியாயத்தின் (அல்பலத்) 13, 14, 15, 16, 17ஆம் வசனங்களை உன்றி நோக்கும்போது ஓர் அநாதைக்கு உணவளிக்கும் காரியம், அடிமையை விடுவிப்பதோடும் சமமான பொறுமையையும் இரக்கத்தையும் போதிக்கும் நல்லவர்களோடும் ஒப்பிட்டுக் காட்டப்பட்டு அது கடினமான மலைப்பாதையைக் கடந்து வெற்றி பெறுகின்ற செயலாகவும் வர்ணிக்கப்படுகின்றது. எனவே, இறைவனோடு உள்ள நேசத்தின் காரணமாக அநாதைக்கு உணவளிப்பது மிகப் பெரிய சிறப்புக்குரிய பணியாகும்.

இவ்வாறு ஒருவருக்கொருவர் உதவுவது பற்றி சமூகத்தை வலியுறுத்திக் காட்டும் எல்லா சந்தர்ப்பங்களிலும் குர்ஆன், பெற்றோருக்கும் உறவினருக்கும் அடுத்து அநாதைகளையே சுட்டிக்காட்டுவதன் தாத்பரியத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அநாதைகளுடன் தொடர்புகளைப் பேணுவதை எடுத்துக் காட்டுவது போன்றே அவர்களைப் பொறுப்பேற்போருக்கும் இஸ்லாம் நிர்க்கமான கட்டளைகளை முன்வைத்துள்ளது.

"அநாதைகள் அவர்களது திருமணப் பருவத்தை அடையும்வரை அவர்களை சோதித்து வாருங்கள். அவர்களிடம் (பகுத்தறியும்) தகுதியைக் கண்டால் அவர்களது உடைமைகளை அவர்களிடம் ஒப்படைத்து விடுங்கள். அவர்கள் பெரியவர்களாகி (தங்களின் உரிமைகளைக் கேட்டு) விடுவார்கள் என அஞ்சி அந்த உடைமைகளை வீண்விரயமாக அவசரமாக விழுங்கி விடாதீர்கள்..." (4: 6)

"அநாதைகளின் சொத்துக்களை அவர்களிடம் அளித்து விடுங்கள் (அவர்களின் சொத்துக்களில்) நல்லதை (உங்களிடம் உள்ள) கெட்டதற்குப் பகரமாக மாற்றி விடாதீர்கள். அவர்கள் சொத்துக்களை உங்கள் சொத்துக்களுடன் சேர்த்து சாப்பிடாதீர்கள். இது மிகப் பெரும் குற்றமாக உள்ளது." (4: 2)

"...செல்வந்தராக இருப்பவர் (அநாதையின் சொத்தைத் தொடாமல்) தன்மானம் காக்கட்டும். ஏழையாக இருப்பவர் (பராமரிப்புக் கூலியாக) முறைப்படி உண்ணலாம். அவர்களின் சொத்தை அவர்களிடம் ஒப்படைக்கும்போது அவர்கள் விஷயத்தில் சாட்சிகளை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். அல்லாஹ் கணக்கெடுப்பதற்குப் போதுமானவன்." (4: 6)

அநாதைகளைப் பொறுப்பேற்கும் நிலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர் அநாதையப் பெண்ணொருத்தியைத் திருமணம் செய்ய விரும்பினாலும்கூட அவளது திருமண உரிமைகள் மறுக்கப்படாமல் பாதுகாக்கும் நோக்கில் "பெண்களுக்கு அவர்களுடைய மஹர் கொடைகளை மனப்பூர்வமாகக் கொடுத்து விடுங்கள்" (4:4) என்று வலியுறுத்துகிறது.

அடுத்து, இச்சட்ட வரையறைகளை மீறுபவர் நிச்சயமாகக் கடுமையான தண்டனையை எதிர்கொள்ள வேண்டும் என்பதையும் குர்ஆன் விளக்குகிறது.

"அநாதைகளின் சொத்துக்களை யார் அநியாயமாக உண்ணுகின்றார்களோ, அவர்கள் உண்மையில் தங்கள் வயிறுகளில் நெருப்பைத்தான் நிரப்பிக் கொள்கின்றார்கள். மேலும், அதி சீக்கிரத்தில் அவர்கள் கொழுந்து விட்டெரியும் நரக நெருப்பில் வீழ்வார்கள்" (4:10)

அநாதைகள் விடயத்தில் இறைவனது நீதியை மறந்து செயற்படுவோர் மறுமையில் பெரும்பேறுகள் கூலி வழங்கும் இறுதிநாளை மறுப்பவர் என்று இவ்வுலகில் ஏனைய கூறும் அத்தியாயம் 107ம் அல்மாஊன் (அற்பப் பொருள்) 2ம், 3ம் வசனங்கள் காணப்படுகின்றன. இவ்வசனங்களில் அல்லாஹ் அநாதையை விரட்டுபவன் தீர்ப்பு நாளைப் பொய்ப்பிப்பவன் ஆவான் எனத் தீர்ப்பு வழங்குகின்றான்.

"அநாதையை நீர் கடிந்து கொள்ளாதீர்" அருள் செல்வத்தைக் குறைத்து என்னை அவமானப்படுத்தி விட்டான்" என அதிருப்தியடைந்த மனிதரை நோக்கி, "நீங்கள் செய்த குற்றங்களுக்காகவே இச் சோதனை" என்று கூறும் இறைவன், அதில் ஒரு குற்றமாக "நீங்கள் அநாதைகளை மதிப்பதில்லை" (89:17) என்று தெளிவாக எடுத்துக் கூறுகின்றான்.

அநாதைகள் விடயமாக நீதி வரையறைகளில் உலகில் பெரும் அளவிலான போதனைகள் இங்கு கூறப்படுகிறது.

எனவே, அநாதைகள் விடயத்திலே நீதி வரையறைகளைப் பேணி நடக்குமாறு மறுமைப் பயணத்தை விடுத்து சுயவிருப்பு, சந்தர்ப்ப சூழ்நிலைகள், ஆசாபாசங்கள், உடனடிக் காரணிகள் என்ற போர்வையில் இந்த வரம்புகளை மீறும் செயல்களைச் செய்வோர் யாரும் தடுக்க முடியாது. குர்ஆன் கூறும் வழிமுறைகளைப் பின்பற்றினால், நாம் இறைப் பொருத்தத்தைப் பெற்று மறுமையில் அதற்குரிய பலாபலன்களைப் பெற்றுக் கொள்வது நிச்சயம்; அது போலவே நீதி வரையறைகளை மறந்தவர்களாக இறை வேதத்தைப் புறக்கணித்து நடப்பவர்களுக்கு அவமானமும் நிச்சயமாகும்.

எனவே, அநாதைகளுக்கு உதவுமாறு கூறும் குர்ஆன் வழியில் சமூக உறவுகளைப் பேணி வாழ்வதன் மூலம் இறைவனை நெருங்குவோம். அதற்கான வாய்ப்பை வல்ல அல்லாஹ் நம் அனைவருக்கும் தந்தருள்வானாக!

---


# HONEY MEDI CARE


CURE WITH PURE HERBAL



எம்மிடம்...

- ஆஸ்துமா (Arthritis)
- முதுகுவலி (Back Pain)
- நீண்ட நாள் தலைவலி (Prolong Headache)
- கழுத்து, தோள்பட்டை வலி (Neck & Shoulder pain)
- தோல் நோய்கள் (Eczema, Psoriasis, Scabies, etc)
- சிறுநீரக, பித்தப்பை கற்கள் (Renal, Gold bladder calculi)
- குழந்தைப் பேறின்மை (Sub fertility)
- மாதவிடாய் பிரச்சினைகள் (Menstrual problem)
- பாலியல் குறைபாடுகள் (Sexual problem)
- மூலவியாதி (Piles)
- பாரிசவாதம் (Paralysis)
- நீராக சம்பந்தமான (Phlegm, Sinusitis, Asthma)

போன்ற சகல வித நோய்களுக்கும்...




HONEY MEDI CARE CURE WITH PURE HERBAL

No 109, Arunodaya Mawatha, Obeysekarapura, Rajagiriya.

Phone: 0112866467

Hijamah ...

HONEY MEDI CARE

CURE WITH PURE HERBAL

Dr. J. Aynul Fasniya. BUMS (Hons) ... Dip in psy cou CHM.

Double Cert in Panchakarma, Marma & Therapeutic Massage

SLAMC Reg No. 15057.

Tel: 0718299773, 2863309, 2866467




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது பெயர் வெரோனிகா. நான் புரட்டஸ்டாந்து கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்தேன். எனது தாயும் தந்தையும் கிறிஸ்தவ சமயப் பாடசாலையில் கிறிஸ்துவைக் கற்பிப்பவர்கள். எனது வீடு முழுவதும் கிறிஸ்தவம் நிறைந்திருந்தது. ஆனால், நான் கிறிஸ்தவத்தைப் பின்பற்றியது ஸ்பெயினைச் சேர்ந்த ஜைமியை சந்திக்கும் வரைதான்.

எங்கள் சந்திப்பு வெளிநாட்டு மொழிகளைக் கற்பிக்கும் வலைத்தளம் ஒன்றில் நடந்தது. எனக்கு பிரெஞ்ச் மொழியைக் கற்றுக் கொள்ள வேண்டுமென்ற தேவை இருந்தது. ஜைமி எனக்கு பிரெஞ்ச் மொழியைக் கற்றுக் கொள்ள நிறைய உதவினான். ஆரம்ப நாட்களில் அம்மொழியை நான் பிழையாகத் தட்டச்சு செய்வேன். அவன் ஆச்சரியப்படத்தக்க பொறுமையுடன் ஒவ்வொரு தவறையும் திருத்தி மீண்டும் தட்டச்சு செய்து அனுப்புவான். அவன் மிகவும் பொறுமைசாலியவன்; அன்பானவன்.

சில காலங்களாக எங்களுக்கிடையில் தொடர்ந்த நட்பு, நம்பிக்கையின் காரணமாக எனது தனிப்பட்ட பின்னணியைப் புகைப்படங்களை அவனுக்குக் கொடுத்திருந்தேன். ஆனால், ஒரு நாள் கூட அவன் எனது முகத்தைப் பார்ப்பதற்காக புகைப்படமொன்றை அனுப்பி வைக்கச் சொல்லவுமில்லை; கிண்டலான ஒரு வார்த்தையேனும் கூறியதுமில்லை. எனது பிரெஞ்ச் மொழி ஆற்றல் இவ்வளவு சீக்கிரம் வளரக் காரணம் ஜைமிதான் என்று நினைத்துக் கொள்வேன்.

நான் அவனைக் காதலிக்க ஆரம்பித்து விட்டேன். ஜைமியுடைய முகத்தைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை இருந்தாலும் பழமைவாதக் கருத்தில் உள்ளவன் போலும், அவனால் மனதில் ஏற்பட்ட வெறுமையை மறைத்துவிடவும் என்றே எனது மனம் சொன்னது. இறுதியாக எனது மனதில் இருந்த சந்தேகத்தை ஜைமியிடம் கேட்டேன். ஆவலோடு எதிர்பார்த்திருந்த அவனது பதிலில் நான் ஆடிப் போனேன். அவனது அமைதியான பதில் இதுதான்; "இஸ்லாமே எனது காதலி; எனது மனைவி!"

ஜைமியின் மேல் இருந்த காதல் அதிகமானது. நான் இஸ்லாத்தையும் காதலிக்க ஆரம்பித்தேன். அந்த உயரிய மார்க்கம் பற்றி ஜைமியிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள விரும்பினேன். நான் அவனிடம் இஸ்லாம் பற்றி கொஞ்சம் கொஞ்சமாகக் கேட்டேன். திடீரென அவன் தலைமறைவானான். எனக்குப் பைத்தியம் பிடித்தது போல் இருந்தது. ஜைமி எங்கே? அவனைப் பற்றிய எந்தத் தடயமும் இல்லை. நான் ஜைமியிடத்து மேல் மேலும் அனுப்பிய கடிதங்கள் பலனில்லாமல் போனது. வேறு அறிய எதுவுமில்லை.

ஏன் எனது மனதை அவனுக்குப் புரிந்து கொள்ள முடியாமல் போனது... நான் அழுதேன்; கண்ணீர் வற்றும் வரை அழுதேன். ஜைமி பற்றிய எல்லா நினைவுகளையும் அழித்துவிட முயற்சித்தேன். என்னால் முடியாமல் போனது அது ஒன்றுதான்.

ஒவ்வொரு பொழுதும் என்னை வாட்டி வதைத்தது. இந்த நாட்களில் இன்னுமொரு முஸ்லிம் நண்பியை அதே வலைத்தளத்தில் சந்தித்திருந்தேன். அவளுடைய பெயர் ஆயிஷா (புனைப் பெயர்). அவள் அல்ஜீரியாவைச் சேர்ந்தவள். அதுவரை ஒரு முறை கூட நாம் சாட்டிங் மட்டுமே செய்திருந்தோம். அவளுடைய வீடியோ பக்கங்களைப் படித்ததிலிருந்து இஸ்லாம் மீது அவளுக்கிருந்த அன்பையும் அக்கறையையும் என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. நான் எவ்வாறாவது பரிகாரம் தேட வேண்டும்; தெளிவினை பெற வேண்டும்!

நான் ஆயிஷாவிடம் நெருங்கினேன். அவளும் எனது நட்பை ஏற்றுக் கொண்டாள். நாங்கள் தொடர்ந்து செட் செய்வோம். சில சமயங்களில் எனக்குச் சந்தர்ப்பத்திற்கு இஸ்லாத்தைக் குறை கூறுவேன். அவள் அதற்கு புன்னகையை பதிலாக அனுப்புவாளே தவிர, ஒருபோதும் ஒன்றும் சொல்லவுமில்லை; இடைமறிக்கவுமில்லை. வேளைகளில் இஸ்லாத்தைப் பற்றி முட்டாள்தனமான வசை தொடுத்துப் பேசுவேன். ஆனாலும், இவள் ஒரு சொல் கூட கோபமாகப் பதிலளிப்பதே இல்லை.

என்னடா இது? இவள் உணர்ச்சியே இல்லையோ! புன்னகையை மட்டுமே பதிலாகத் தருகிறாளே! அற்புதமான பொறுமை!

எனது வாழ்க்கையிலேயே இந்தளவு பொறுமை செய்யும் ஒருவரை நான் சந்தித்ததே இல்லை. அவளும் என்னைப் போல் ஒரு யுவதி. நான் கோபம் தாள முடியாமல் ஆயிரம் முறை வசைபாடி விட்டேன்; இவள் பொறுமையை நாடைக்கு மேல் வைத்துக் கொண்டு நிம்மதியாக இருக்கின்றாள். நான் பொறுமையிழந்து கேட்டேன், "எனது வார்த்தைகள் உனக்கு கோபமூட்டவில்லையா?"

அவள் தந்த அமைதியான பதில் எனது மனதில் இன்றுவரை ஆழமாகப் பதிந்துள்ளது. "அவை வார்த்தைகள் மட்டுமே. அந்த வார்த்தைகள் இஸ்லாமிய மார்க்கத்

**இது ஓர் உண்மைச் சம்பவம். Seethala Group எனும் வலைத்தள குழுவில் வாசிக்கக் கிடைத்தது. இந்த உண்மைக்கதையுடன் தொடர்புபட்ட சகோதரிகளுடன் இம்மொழிபெயர்ப்பு தொடர்பாக கலந்துரையாடக் கிடைத்தது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றேன்.**

தமிழில்: ஸஹீயாம் ஹுஸைன்

# வெரோனிகா:
# இனி இஸ்லாத்தை மட்டுமே காதலிப்பார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்ந்திட்டாலோ என்ற சந்தர்ப்பத்தில் எந்த மாற்றமும் ஏற்படுத்தப் போவதில்லை."

இறுதியில், எல்லாம் வெளிப்படுத்தப்பட வேண்டிய கதையைச் சொல்ல வேண்டும் என நினைத்தேன். ஏனெனில் அவள் நன்றாக செவிமடுப்பவள் என அப்போதே நம்பிக்கை வைத்திருந்தேன். நான் எனது காதல் கதையைக் கூற ஆரம்பித்தேன். இடைக்கிடை பேசிக்கொண்டிருக்கின்ற சந்தர்ப்பங்களில் இஸ்லாத்தைத் தாழ்த்தி ஏதாவது சொல்லுவேன். அவள் அனைத்தையும் மிகுந்த பொறுமையோடு செவிமடுத்துக் கொண்டிருந்தாள். எனது காதல் கதையை முழுமையாகக் கேட்டு முடித்த பின் அவள் சொன்ன பதில் எனது இதயத்தைக் கீறிக் கிழித்து ஆன்மாவை அதிரவைத்தது. அவள் சொன்னாள்:

"O sister, you didn't love Islam because of Islam. You loved it because of a Muslim man, and that's wrong, know Islam before Muslims and you will feel real love of Islam." (சகோதரி நீங்கள் இஸ்லாத்திற்காக இஸ்லாத்தின் மீது அன்பு வைக்கவில்லை. நீங்கள் ஒரு முஸ்லிம் வாலிபனுக்காக அதனை விரும்பினீர்கள். அது தவறு. முஸ்லிம்களுக்கு முதல் இஸ்லாத்தைத் தெரிந்து கொள்ளுங்கள். அப்போது தான் இஸ்லாத்தின் உண்மையான அன்பை உங்களால் அனுபவிக்கலாம்)

அந்த பதிலைப் பொருட்படுத்தாதது போல இருக்க முயன்றேன். ஆனால், அந்தப் பதில் மீண்டும் மீண்டும் எனது ஆன்மாவை உலுப்பிக் கொண்டே இருந்தது. நான் ஆதிராவுக்கு மின்னஞ்சலொன்று அனுப்பினேன். "நான் இஸ்லாத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும்." அவள் மிகவும் மகிழ்ந்து அவசர அவசரமாக இஸ்லாத்தைக் கற்பிக்கும் வலைத்தளங்களின் முகவரிகளைத் தொகுத்தனுப்பினாள். அந்த வலைத்தளங்கள் இஸ்லாத்திற்கு மிகவும் நோக்கமுடைய பொருத்தமான வழிகாட்டும் வலைத்தளங்கள். அந்த வலைத்தளங்களில் இஸ்லாத்திற்கு மீண்ட பெண்களின் வாழ்க்கைக் கதை, அவர்கள் இஸ்லாத்திற்கு மீண்ட விவரம் ஆகியவை இருந்தன. மறுக்கமுடியாத பேருண்மை விடயங்களும் இருந்தன.

நான் பிழையான பாதையில் சென்று இஸ்லாத்தைக் கேட்க முயன்றிருந்ததைப் புரிந்து கொண்டேன். நான் அழுதேன்; கண்ணீர் வற்றும்வரை அழுதேன்; மனதின் ரத்தம் வடை வரையும் அழுதேன். உள்ளம் அமைதியாகி ஆறுதலடைய ஆரம்பித்தது. வல்லமையான அருங்கல் வெளிவந்து வெளியே பயணிப்பதாகும் ஆச்சரியத்தை நான் அனுபவித்தேன். இறைவனுக்கு ஆயிரம் முறை நன்றி கூறினேன். நிறைய விடயங்களை சிந்தித்துப் பார்த்து இறுதியில் இஸ்லாத்தை ஏற்பது என்ற முடிவுக்கு வந்தேன். ஆதிராவுக்கு தகவல் அனுப்பினேன்.

இன்று நான் முஸ்லிமானதை எண்ணி மகிழ்ச்சியடைகிறேன். ஒரு முஸ்லிம் அன்பானவரின் மனைவியாகி மனம் நிறைந்த மண வாழ்க்கையில் இணைந்திருக்கின்றேன். எனது கணவரின் பெயர் உமர்.

எல்லாப் புகழும் அல்லாஹ் ஒருவனுக்கே. அல்ஹம்துலில்லாஹ்.

புதிய மாணவர்கள்

BERUWALA SCIENCE PROJECT

2014 உயர் தரத்திற்கான விஞ்ஞான, கணித வகுப்புகள் ஆரம்பம்

| | |
|---|---|
| BIOLOGY | • V. Uruya Srinegan |
| PHYSICS | • S. Ganeshan B.Sc (Eng.)<br>• S. Nanthakumar B.Sc |
| CHEMISTRY | • S.T. UmaShankar B.Sc. M.Sc (Phy. Tech)<br>• M.F.M. Rizwan B.Sc. |
| COMBINED MATHS | • Gurusingham B.Sc |

2012 Revision

ஜனவரி 9 2012

அமைதியும் பாதுகாப்பும் கூடிய இஸ்லாமியச் சூழலில்

Residential Education System

மேலதிக தொடர்புகளுக்கு : 0773 017 102, 0778 154 404 0777 477 830

148, JAMIAH NALEEMIYAH ROAD, CHINAFORT, BERUWALA.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநீதிக்கெதிரான குரல் ஓங்கி ஒலிக்க வேண்டும்!

ஏ. ஷப்பீர் அஹ்மத்
மாநிலத் தலைவர், ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த், தமிழ்நாடு

இது மிக முக்கியமான கால கட்டம்.

இஸ்லாமிய விழுமியங்களையும் ஒழுக்க மாண்புகளையும் தவிர்க்க இயலாத காலமிது.

நோய் பெருகப் பெருக மருத்துவத்தின் தேவையும் அதிகமாகி விடும். இன்று சமுதாயத்தை ஒழுக்கக் கேடு எனும் பெரு நோய் பீடித்துள்ளது. இஸ்லாம் என்ற மாமருந்தின் தேவையும் அதிகமாகி விட்டது.

இன்றைய பிரச்சினைகளுக்கு எதுவெல்லாம் காரணம்?

ஒரே நாடு, ஒரே கலாச்சாரம் (One Nation, One Culture) என்பது சொற்கத்தியர்களின் தீவிர எண்ணம்.

'ஒரே நாடு' என்பது அவ்வளவு சுலபமல்ல. அதனால் ஒரே கலாச்சாரம் என்பதை பெரு அக்கறையோடு முன்னெடுத்துச் செல்கின்றார்கள்.

கலாச்சாரமொன்றாகி விட்டால் ஒரே நாடு என்ற இலக்கை எட்டிப் பிடித்து விடலாம் என்பது அவர்களின் நம்பிக்கை.

மேற்கத்திய கலாச்சாரம் குடும்ப அமைப்பைக் குலைத்துக் குலைக்கிறது. திருமணமின்றி குடும்பம் நடத்துதல், ஓரினச் சேர்க்கை உறவுகள் என்பவற்றை வேகமாகப் பரப்பி வருகிறது.

திருமணமானால் விவாகரத்திற்காக நீதிமன்றம், வழக்கு என்று அலைவானேன்? என்று திருமணத்தில் போகிறே விவாகரத்திற்கான ஒப்பந்தம் போடுகிறார்கள். இரண்டு ஆண்டுகள் மட்டுமே இணைந்து வாழ்வது; தேவைப்பட்டால் நீட்டித்துக் கொள்ளலாம் என்கிறார்கள்.

ஓரினச் சேர்க்கைக்கு மேற்கத்திய நாடுகளில் முழு அங்கீகாரம் கிடைக்கவில்லை என்றாலும், ஒரு சில நாடுகள் அனுமதியளித்து விட்டன.

வெள்ளையர்கள் நம்மை ஆட்சி புரிந்த காலத்தில் நம் இரத்தத்தில் ஊறிய அடிமைத்தனம் இன்றளவும் தொடர்கிறது. அவர்கள்தான் நம்மைவிட உயர்ந்தவர்கள், கலாசாரத்தில் முன்னேறியவர்கள் என்று நாம் நினைக்கிறோம். அறிவிடம் என்ன வென்றால், அவர்களிடமிருந்து ஆக்கபூர்வமான விடயங்களை நாம் எடுத்துக் கொள்ளவில்லை.

நாம் மாறினால் மட்டும் போதாது. மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். நம்மால் முடியாது என்பதெல்லாம் இல்லை. நாம் செய்ய வேண்டியது, தீமைகளுக்கெதிரான கருத்துருவாக்கமாகும். முதலில் அதை மக்கள் கருத்தாக மாற்ற வேண்டும். பின்னர் ஒன்றிணைந்து போராட வேண்டும். இயக்கங்களுக்கு இதில் மிகப் பெரும் பொறுப்பும் கடமையும் இருக்கிறது.

ஊடகங்களும் கலாசார சீரழிவில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இன்று பக்கத்துக்குப் பக்கம் கள்ளக் காதல் பற்றிய செய்திகள். முன்பெல்லாம் அருவருப்பாக பார்க்கப் பட்ட இந்த விடயங்கள் இன்று சாதாரணமாகி விட்டன. பத்திரிகைகள் அவற்றை முக்கியமாக வெளியிடுகின்றன. இது போன்ற செய்திகளை வாசகர்கள் முழுமையாகப் படிக்கின்றார்கள். பத்திரிகைகள் வணிகமயமாகி விட்டதே இதற்குக் காரணம்.

சினிமாவும் இந்த கலாசார சீரழிவில் பெரும் பங்கு வகிக்கின்றது. அருவருக்கத்தக்க வசனங்கள், இரட்டை அர்த்தப் பாடல்கள், ஆபாச நடனங்கள், அரை நிர்வாண உடைகள், கட்டுப்பாடற்ற வாழ்க்கை முறைகள்... இவை உச்ச கட்டமாக கற்பனை செய்ய முடியாத கதைகள். கோபுரில் ஒருவன் செய்யும் முறை தவறிய உறவை மையப்படுத்திய கதைகளைக் கூச்சமற்று நம்மிடம் பேசுகின்றன இன்றைய சினிமாக்கள். மறைவாக இருக்க வேண்டியவை திரைக்கு வந்து விட்டன.

சின்னத் திரையும் சீரழிவை விதைக்கின்றது. சினிமாக்கள் காதலை மையப்படுத்துகின்றன. காதல் இல்லாமல் வாழ்வே இல்லை என்பது அதன் போதனை. ஆனால், சின்னத் திரையோ திருமணத்திற்குப் பிறகு உள்ள தகாத உறவுகளைப் பேசுகின்றது. பெண்கள் வக்கிர உணர்வு கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர்.

பத்திரிகை, சினிமா, சின்னத்திரை இவற்றில் இடம் பெறும் விளம்பரங்கள் அருவருப்பானவை; அசிங்கமானவை. செய்தித் தொலைக்காட்சிகள்கூட இவ்வாறான விளம்பரங்கள் செய்தொடர்களும் இத்தீமைகளுக்கு பெரு மளவு வழிவகுக்கின்றன. ஆபாசம் வீடுகளில் தொடங்கி சிறுமியில் முடிவடைகிறது.

இப்படியான அம்சங்களும் மனித இயல்பிலுள்ள வேட்கையைத் தூண்டி விடுகின்றன, எரிகின்ற நெருப்பில் எண்ணெய் வார்க்கின்றன. நாம் இத்தீமைகளுக்கு எதிராகக் களம் காணாமல் மௌனம் காத்தால் இதுதான் விளைவுதான் கள்ளக் காதல்களும் அதன் விளைவுகளும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுத்தர அமைப்பிலுள்ள கோளாறுகளும் தவறு களுக்கு வழிவகுக்கின்றன. தாயும் தந்தையும் வேலைக்குச் சென்றுவிடும்போது குழந்தைகள் கவனிப்பின்றி வளர்கின்றார்கள். நாம் வேறு பொழுதுபோக்குகளைக் குறிப்பாக, முஸ்லிம்கள் வியாபாரிகளாக இருப்பதனால் குழந்தைகள் கண் விழிக்கும் முன்பே வேலைக்குச் சென்று, அவர்கள் தூங்கிய பிறகே வீடு திரும்புகின்றனர்; அல்லது வெளிநாடு சென்று விடுகின்றனர்.

குழந்தைகள் இயல்பாகவே பாராட்டை விரும்பு வார்கள். அதிலும் தந்தை பாராட்ட வேண்டும். அதற்கு நாம் நேரம் ஒதுக்க வேண்டும். குறைந்தது அரை மணி நேரமாவது அவர்களுடன் செலவிட வேண்டும். குழந்தைகளை விட மகளிடம் அதிகக் கவனம் வேண்டும். அரைகுறையான ஆடைகளை குழந்தைகளுக்கு அணிவிக்காதீர்கள். இப்போது அரையும் குறையுமாக அணிந்தால் நாளை பெரியவர்களானாலும் அவ்வாறே விரும்புவார்கள்! பார்க்கச் சகிக்காத உடைகளும் டீசேர்ட்டுகள் தெரிய வைக்கும் லோ கட்களும் கலாச்சாரம் அதிகரித்தது யார் காரணம்?

நம் பிள்ளைகளை ஆங்கிலம் பேசும் பாடசாலையில் சேர்க்க கடும் பாடுபடுகிறோம். குழந்தைப் பருவத்திலேயே போட்டிக் குடும்பப் போட்டி கலந்து பழக ஆரம்பித்து விடுகின்றார்கள். மார்க்கக் கல்வி பற்றிய அக்கறை இல்லை.

ஆரம்பக் கல்வியோடு மார்க்கக் கல்வியும் புகட்ட வேண்டும். மார்க்கக் கல்வி என்பது வெறும் குர்ஆன் ஓதுவது மட்டுமல்ல, மார்க்கப் போதனைகளை அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

சிறுவயதிலேயே நல்ல விசயங்களைப் பேசி வளர்க்க வேண்டும். ஏழு வயது வரை அவர்கள் மனதில் எது அதிகமாக விதைக்கப்படுகின்றதோ அவ்வாறே அவர்கள் வாழத் தொடங்குவார்கள் என்று மனோதத்துவ ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

நம் குழந்தைகள் நம்மை அதிகம் நேசிக்கும் அளவு அன்பாகவோடு நாம் நடந்து கொள்ள வேண்டும். நம்மை மீறி ஒரு சின்னத் தவறை செய்வதற்கும் அவர்கள் மிகவும் தயங்க வேண்டும். மக்கள் குழுவிற்குள் எழுந்த கடும் சண்டையை தந்தையை எண்ணால் உதறி விட்டு வர முடியாது என்று அவர்கள் நினைக்குமளவிற்கு நம்மீது அவர்கள் நேசமும் மரியாதையும் வைக்க வேண்டும். அந்த அளவு நம் குழந்தைகளோடு நாம் பழகி, அவர்களை நெறிப்படுத்த வேண்டும்.

அவர்களுக்கு அதிக செல்லமும் கொடுக்கக் கூடாது. நாளை குறுக்க விட்டால் இந்தச் செல்லம் கிடைக்கவில்லையெனில் அவர்கள் அதிருப்தியுற ஆரம்பித்து விடுவார்கள்.

அதுபோல திருமணத்தைத் தள்ளிப் போடாதீர்கள். உரிய வயதில் அவர்கள் வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுத்துக் கொடுத்தால் குற்றங்கள் குறைய ஆரம்பிக்கும். ஆண் குழந்தைகளென்றால் மாப்பிள்ளை டிமாண்ட் ஒரு தொகை கிடைக்க வேண்டும் என்று பிடிவாதம் பிடிக்கிறோம். பெண் குழந்தைகளுக்குப் படிப்பு படிப்பு என்று வரதட்சணை வாங்குவதை காரணமாக்குகிறோம்.

சீதனக் கொடுமையும் திருமணச் சுமையும் காரணமாகிறது. சீதனத்தை ஒழிக்க வேண்டும். ஆடம்பரமாகத் திருமணங்கள் நடைபெறுவதும் திருமணங்களைத் தாமதப்படுத்துகின்றது. எளிய முறையில் திருமணங்கள் நடத்தினால் திருமணம் ஒரு சுமையே அல்ல.

திருமணங்கள் எளிமையாக எளிமையாக விபச்சாரம் அருகி விடும். திருமணங்கள் கடினமாகக் கடினமாக விபச்சாரம் எளிதாகி விடும். திருமணம் கொடுக்க முடியாமல், திருமணத்திற்கு பெண்ணெடுக்க சக்தி இல்லாமல் தள்ளிப்போய் முதிர் கன்னிகளாக மாற்று மதத்தினரை துணை பொருத்தமில்லை என்று பிற மதத்தினரோடு திருமணம் நடைபெறுவது அதிகரித்து வருகிறது.

இதற்கெல்லாம் இந்த சமுதாயமும் ஒரு காரணம் தானே!

வெளிநாட்டு வாழ்க்கையும் இத்தீமைகளுக்கு ஒரு வகையில் காரணமாய் அமைகின்றது. கணவன் மனைவியை பிரிந்து விட்டு பாதிக் காலத்தில் இல்லறம் நடத்தினால் அங்கே பிரச்சினைகள் ஏற்படத்தானே செய்யும்!

டி.வி., இன்டர்நெட், செல்போன் என்று நம் உணர்வுகளை உசுப்பேற்றி விடும் இயந்திர காலத்தில் நாம் வீட்டுக்குள்ளே இருந்தாலும் நம்மைத் தேடிச் செய்திகள் வருகின்றன. காட்சிகள் நம் நடு வீட்டுத் தொலைக்காட்சியில் வந்து விடுகின்றன. வன்முறைகள் அங்கே தற்கொலைகளும் அதிகமாக நடக்கின்றன.

இதற்கெல்லாம் தீர்வு மாற்றங்கள்தான். நாம் மாறினால் மட்டும் போதாது. மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். நம்மால் முடியாது என்பதெல்லாம் இல்லை. நாம் செய்ய வேண்டியது, தீமைகளுக்கெதிரான கருத்துருவாக்கமாகும். முதலில் அதை மக்கள் கருத்தாக மாற்ற வேண்டும். பின்னர் ஒன்றிணைந்து போராட வேண்டும். இயக்கங்களுக்கு இதில் மிகப் பெரும் பொறுப்பும் கடமையும் இருக்கிறது.

இவை எல்லாவற்றுக்கும் ஒரே தீர்வு இஸ்லாமிய வாழ்வு முறைதான். அல்குர்ஆனும் நபிவழியும் காட்டுகின்ற வழிகாட்டுதலும் போதனைகளும் முஸ்லிம் சமூகத்தை மட்டுமே வளப்படுத்த வந்தவை அல்ல. ஒட்டுமொத்த மனித குலத்தின் நல்வாழ்வையும் அது போதிக்கிறது. அதனை எல்லாத் துறையிலும் எல்லாச் சூழலிலும் நிலைநாட்ட வேண்டும். அதில்தான் முழு வாழ்க்கையின் வெற்றியும் அடங்கி இருக்கிறது.

நன்றி: சமரசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டி முடிவுகள்

# பேனாக்கள் பேசட்டும்

## அகில இலங்கை இலக்கியப் போட்டி - 2011

பாக்கு வந்து சேர்ந்த 100க்கும் அதிகமான ஆக்கங்களிலிருந்து பரிசுக்குரிய மற்றும் பாராட்டுக்குரிய ஆக்கங்களை மிகச் சரியாகத் தெரிவுசெய்வதென்பது ஒரு சவாலாகவே அமைந்தது. கவிதை, சிறுகதை, கட்டுரை ஆகிய ஒவ்வொரு பிரிவிலும் ஏராளமான ... தரமும் அனுபவமும் வாய்ந்த நடுவர்கள் ஊடாக இத்தெரிவு நிகழ்த்தப்பட்டிருந்தது.

இந்தப் போட்டியில் வெற்றி பெற்ற அனைவருக்கும் இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி பெண்கள் அணியின் மீடியாப் பகுதியின் மகிழ்வான வாழ்த்துக்கள். அதேநேரம் அதிக உற்சாகத்தோடு போட்டியில் கலந்து கொண்டு தங்களது திறமைகளை வெளிப்படுத்த ஆவலாக இருந்த சகோதரிகளுக்கும் எமது நன்றிகள்.

### சிறுகதை

**முதலாமிடம்:** எப்.எப். ஸபீனா, ஜயந்திமாவத்தை, அநுராதபுரம்
**இரண்டாம் இடம்:** எஸ். நிலா ஹஸன், தெமடகொட, கொழும்பு
**மூன்றாமிடம்:** சின்ன லெப்பை அஸ்னா, ஓட்டமாவடி - 02

**சான்றிதழ் பெறுவோர்:**
நளீபா அனீஸ் அனீம், ரசவல்பொல, வெலம்பொடை
எம்.எம்.எப். ரம்ஸியா, மீரப்பள்ளி வீதி, தர்கா நகர்
நஸ்ஹத் நளீம், வான் வீதி, புத்தளம்
சுலைமா சமி இக்பால், கிரிங்கதெனிய, மாவனல்லை
ஷபீஹா பாயின் ஜிப்ரி, உடம்பட, அம்பனை
அஸ்கா எம். லெப்பை, அஸ்பிடிய வீதி, மாவனல்லை
பாயிஸா ஐகஸ், சீனன் கோட்டை, பேருவளை
எப். மிப்ரா மர்ஸூக், வடதெனிய, வெலம்பொடை
நஸ்மியா நஜீப், குமாரதுங்க மாவத்தை, மாத்தறை
எம்.எஸ்.எப். ஷப்னா, கருந்துவத்த வீதி, தர்கா நகர்

### கட்டுரை

முதலாமிடம்: எஸ்.எச். நஸ்லியா ஷரீப், சம்மாந்துறை-05
இரண்டாமிடம்: ரிஸ்னா அப்துல் வஹ்ஹாப், தம்பிலாவ, கஹனிய
மூன்றாமிடம்: எம்.எஸ். பாத்திமா சஜானா, அல்மனார் வீதி, மருதமுனை-02

**சான்றிதழ் பெறுவோர்:**
எம்.ஆர்.என். ரஹானா அலி, ஜின்தோட்டை, காலி
எம்.ஏ.எப். புஷ்ரா, வராகஸ்ஹின்ன, அதுரணை
சவ்மியா முஹம்மத் ஸித்தீக், வராகஸ்ஹின்ன, அதுரணை
உம்முல் ஹாதியா, உயன்வத்த, தெலனகம
எப். ஸமீரா அப்துல் மஜீத், இஸ்லாஹிய்யா அரபுக் கல்லூரி, புத்தளம்
எம்.ஏ.எப். ரிப்கா, பண்டாரகொஸ்வத்தை, குருநாகல்
அமதுர் ரஹீம், பெரியமுல்லை, நீர்கொழும்பு
ருபைதீன் எப். ராஷீதா, பழைய நகர், மாதம்பை
ஆதிலா பானு முஹைதீன் பாவா, அக்கரைப்பற்று - 06
ஏ. மஸீஹா, பானகமுவ, குருநாகல்

### கவிதை

முதலாமிடம்: ஏ.ஆர். சித்தி பாயிஸா, பாத்திமா பாலிகா மகா வித்தியாலயம், புத்தளம்
இரண்டாமிடம்: எம்.ஜே.எப். ஹுஸ்னா, வான் வீதி, புத்தளம்
மூன்றாமிடம்: ராஜீதா காமில், இஸ்லாஹிய்யா அரபுக் கல்லூரி, புத்தளம்


**சான்றிதழ் பெறுவோர்:**
எஸ்.எஸ்.எப். பிரோஸா, ஹனீபா வீதி, மருதமுனை
ரிப்னா முஹம்மத், தர்மபால வீதி, கல்லெலிய
எம்.ஆர். ரஸ்மியா பானு, கடுகஸ்தோட்டை, கண்டி
சப்ரா பின்த் இக்பால், தெல்தோட்டை, கண்டி
எம்.யூ.எப். சக்ரா, பிரதான வீதி, மாத்தறை
அரபா ரஸ்லாக், வான் வீதி, புத்தளம்
இஷ்ரா பஹ்ரத் முஹர்ந்திரம், மரிக்கார் வீதி, மருதமுனை - 04
மாஜிதா அப்துல் கையூம், நூராணியா வீதி, மருதமுனை - 04
எம்.என்.எப். ரொஷான் சஹ்ரானி, மதுரங்குளி, புத்தளம்
ஆர்.எம். மதீஸ், கல்லொழுவ, மிரிஹானபிட்டிகெடை

இன்ஷா அல்லாஹ் பரிசளிப்பு வைபவம் இடம்பெறும் திகதியும் இடமும் வெற்றியாளர்களுக்கு தபால் மூலம் அறியத்தரப்படும். வெற்றி பெற்ற ஆக்கங்களின் பதிப்புரிமை பெண்கள் அணியின் மீடியாப் பகுதிக்குச் சாரும்.

**மீடியாப் பகுதி, பெண்கள் அணி,**
**இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி,**
**தெமடகொட வீதி, கொழும்பு - 09**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# the aCADDemy

College of Architectural Engineering Technology

**PROVIDES PROFESSIONAL TRAINING ON**

- AUTOCAD 2D & 3D MODELLING
- MEP DRAFTING USING AUTOCAD
- ENGINEERING DRAUGHTSMANSHIP
- PRIMAVERA PROJECT PLANNER
- 3DS MAX
- MOBILE PHONE REPAIRING
- WEB DESIGNING
- GRAPHIC DESIGNING
- COMPUTER HARDWARE & NETWORKING
- MICROSOFT OFFICE APPLICATION



கலை, தொழில்நுட்ப மற்றும் கட்டட நிர்மாண துறைகளில்
பல்வேறு கற்கைநெறிகளை வழங்கி உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும்
அதிகமான மத்திய கிழக்கு நாடுகளில் சிறந்த வேலை வாய்ப்புக்களைப்
பெறுவதை உறுதிப்படுத்துகிறது

வெளியூர் மாணவர்களுக்கு தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும்.



எமது விரிவுரையாளர்கள் குழாம்:
- பேராசிரியர்கள்
- பல்கலைக்கழக விரிவுரையாளர்கள்
- தொழில்நுட்பக் கல்லூரி விரிவுரையாளர்கள்
- மத்திய கிழக்கு நாடுகளில் அனுபவம் வாய்ந்த துறைசார் விரிவுரையாளர்கள்

**FAST TRACK COURSES ARE AVAILABLE**

**HOTLINES:**
**0776323434, 0775919798**
22, Kaburady Road, Kattankudy-01, Sri Lanka
E-mail: theacaddemy@gmail.com

Registered under ... Reg No :P20/0037



When a pen strikes at a right time with a right message
Even sleeping hearts silently awake
Humble minds will never say no
To open the pages of inspiring messages of the noble pen.

# Reflection of Ever Green
(100 Islamic Poems)

## Dr. M.A.M.H. Barry

(PhD (Hawaii), LLM (Aus), MA (Sri Lanka), BA (Sri Lanka)
Post-Attorney Dip in International Trade Law (Merit)
Post-Attorney Dip in Intellectual Property Law
Dip in Commercial Arbitration
Post Graduate Dip in International Affairs

**Attorney-at-law**
Former Senior Lecturer, University of Manchester.
(Seychelles Polytechnic, Seychelles)

WILL BE PUBLISHED VERY SOON
"INSHA ALLAH"

**A Publication of FISR**
Foundation of Islamic Studies and Research (Sri Lanka)
077-6216301, 071-7268373




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜுமானா ஹிஜாஸ், அம்பரப்பொல




அது சென்ற வருட ஹஜ் மாதம். புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவென நாம் மக்கா சென்றிருந்தோம். மக்காவில் தங்கிவிட்டு மதீனாவுக்குச் சென்று மூன்றாவது நாள் ஊரைச் சுற்றிப் பார்ப்பதற்கு எம் சகாக்களுடன் பயணிப்பது அன்றைய திட்டம்.

விடியற் காலையில் நாம் தயாரானோம். எனக்குள் ஒரே பரபரப்பு. இலங்கையில் பிறந்து வளர்ந்தாலும் எம் புனிதம் குவிந்து கிடக்கின்ற பூமியல்லவா அது! வரலாற்று நிகழ்வுகளையும் தாத்பரியங்கள் நிறைந்த தடங்களையும் பார்வையிடக் கிடைக்கிறதே என்ற பேராவல் எனக்குள் உணர்வுப் பூர்வமாய் பொங்க எதிர்பார்ப்புடன் ... விட்டோம்.

நெஞ்சில் அலைகள்.. ஓயாமல்.. நபியவர்களின் பாதம் பட்ட இடங்களில் என் கால்கள்...

அவர்கள் கட்டளையிட்ட வார்த்தைகள் என் செவிகளில்...

அவர் தோழர்களின் வீரம் பேசிய வாள்கள் என் பார்வையில்...

உஹுத் யுத்தமே என் கண் முன்னால் படங்களாய்... தெளிவாய்!

சேதங்கள், நஷ்டங்கள், பாதகங்கள் பல...

உஹுத் போர் கற்றுத்தந்த பாடங்களும் பல...

வஞ்சம் தீர்த்த நெஞ்சங்கள் பல...

போரின் சில துளிகளை மனக்கண் முன்னே பின் எம் வழிகாட்டி ஒரு பெருந்துயரைக் காட்டி நின்றார். அது ஹம்ஸா (றழியல்லாஹு அன்ஹு) அவர்களின் அடக்கஸ்தலம். என் கால்கள் திடீரென்று பலமிழந்து கொண்டு செல்வதாய் உணர்ந்தேன். வேதனை நெஞ்சில் வந்து குந்திக் கொண்டது.

எத்தனை நபித்தோழர்கள் கொல்லப்பட்டனர்... வீர மரணமடைந்தனர்!

அன்றைய மக்காவின் நம்பிக்கை நிறைந்த இஸ்லாத்திற்கு ஒரு பலம் கிடைத்ததென்றால் அது ஹம்ஸா (றழியல்லாஹு அன்ஹு) அவர்கள் இஸ்லாத்துக்குள் நுழைந்ததால்தான் என்றால் பிழையில்லை. நபியவர்களுக்கு நன்மையென்றால் சிங்கமாகச் சீறும் இவர்கள் ஒரு முறை நபியவர்கள் மீது வசை பேசியதற்காக அபூ ஜஹ்லைக் கூடத் தாக்கியவர். எங்கள் பாசறையில் வலது கை எனலாம். அப்படிப்பட்டவரே ஹம்ஸா (றழியல்லாஹு அன்ஹு) அவர்கள்.

மக்காவில் ஒரு பெரும் புள்ளியாக இருந்த அபூ ஸுப்யானின் மாமனார் ஹிந்தின் தந்தை உத்பாவும் அவளது சிறிய தந்தை ஷைபாவும் பத்ர் யுத்தத்தில் ஹம்ஸா (றழியல்லாஹு அன்ஹு) அவர்களால் கொல்லப்படுகின்றனர். அன்றிலிருந்தே வஞ்சம் தீர்ப்பேன் என சபதம் செய்து கொண்டிருந்தவள் ஹிந்த். தருணம் பார்த்துக்கிடந்தவள் உஹுதில் தன் சபதத்தை நிறைவேற்றிக் கொள்கிறாள்.

ஹம்ஸா (றழியல்லாஹு அன்ஹு) அவர்களைக் கொன்று விட்ட செய்தி அவளுக்குக் கிடைக்கிறது. மிக்க மகிழ்ச்சி. இருந்தும் தணியவில்லை அவள் தாகம். அடிமை வஹ்ஷியுடன் ஹம்ஸாவைக் கொலை செய்தவர் சென்று நபியவர்களின் சிறிய தந்தையின் உடலைப் பார்க்கிறாள்.. குரூரம் அவள் கண்களில்..! அவரது வயிற்றைக் கிழித்து ஈரலைக் கையில் எடுக்கிறாள். ஆவேசமாக அதன் ஒரு துண்டை வாயில் போட்டு சப்பி உமிழ்ந்த பின்னரும் வெறி அடங்காதவளாக அவர் உடலின் மேல் பாய்ந்து ஒவ்வொர் உறுப்பாய் அறுத்தெறிகிறாள். வஞ்சம் தீர்ந்த திருப்தி அவளுக்கு.

நபியவர்களின் செவிகளுக்கு எட்டியது இச்செய்தி. தாள முடியவில்லை அவர்களால். குறைஷியர் மேல் கடும் கோபமடைகிறார். இதற்கான பதிலை கொடுத்தே தீரவேண்டுமென ஆக்ரோஷத்துடன் சொல்லிக் கொள்கிறார். கண்கள் கலங்குகின்றன. நபியவர்களுடன் மிகவும் பாசம் கொண்ட ஹம்ஸா அல்லவா!

இருப்பினும், மக்கா வெற்றியின்போது இஸ்லாத்தை ஏற்றுக் கொள்கிறாள் ஹிந்த். தன்னைப் பழிவாங்கி விடுவாரோ முஹம்மத் என்றெண்ணிய ஹிந்த் ஏமாற்றமடைகிறாள். ஹம்ஸாவின் இழப்பில் பெருந்துயரும் கடும் ஆவேசமும் கொண்டிருந்த நபியவர்கள் இஸ்லாத்தின் கட்டளையின் முன் பொறுமை காக்கிறார்; ஹிந்தை மன்னித்து அனுப்புகிறார்.

சிந்தித்துப் பார்க்கிறேன். இப்படியும் மனிதரொருவர் இருக்க முடியுமா? ஆம் இருந்திருக்கிறார். ஹம்ஸா (றழியல்லாஹு அன்ஹு) அவர்களின் கப்ர் முன்னிலையில் வரண்ட இதயத்துடன் நின்றிருந்தேன். எத்தனை துயரம். எத்தனை கோரம்!

அவர்கள் சுவனத்துப் பூஞ்சோலையில் சுகமனுபவித்துக் கொண்டிருப்பார்கள். அல்லாஹ் அவர்களைப் பொருந்திக் கொள்வானாக! உஹுதைக் காணவெனப் பரபரத்த கண்களில் வழிந்த நீர்த்துளிகளும் வேதனை ஏறி அமர்ந்த நெஞ்சின் வலியும் இன்று நினைப்பினும் கனக்கிறது.

ஹம்ஸா (றழியல்லாஹு அன்ஹு) அவர்களின் கப்ர் முன்னிலையில் பிரார்த்தித்துவிட்டு பஸ்ஸை நோக்கி நடந்தோம், ஒரு சரித்திரம் படைத்த மனிதரை சந்தித்துவிட்ட திருப்தியில்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள் மறையாம் அல்குர்ஆன்



அருள்மறை யாம்; திருக் குர்ஆன் போலொரு
பொருள்நிறைத் திருமறை போலும் புவியினில்
ஒருமறை இல்லையே ஒருவன் இறைவனின்
திருமறை எனப்படும் திருக்குர் ஆனினைப்

போலொரு வேதநூல் இல்லை இத்தரை
நூலொடு பொருந்திடும் நூலதும் நன்றெனப்
பால்தரும் வேதநூல் பருகிக் களிப்பவர்
மேல்வரும் மதிப்பும் மேன்மைச் சிறப்பும்

இவ்விரு வேதமோ இயம்பும் நல்லறம்
ஒத்திருப் பிறழ்ந்திலா வேத நெறியுடன்
இவ்விரு மறைதான் இறையனுக் கிணையொடு
வைத்தொரு பொருள்தனை வணங்காதே;என்றது

"இரவினைச் சுருட்டியே பகலை விரித்திடும்
பகலினைச் சுருட்டியே இரவை விரித்திடும்"
இறையுடை மேன்மையே திகழ்ந்தொரு தவ்ஹீதோ
சரணடைந் திடுவோர் சாற்றுந் திருமறை

அனைத்தையும் படைத்தவன் அல்லாஹ் அவனே
நினைத்ததை முடிப்பவன் நிலைத்து நின்றவன்
நீர்; நிலம்; தீ; வளி; வானம் யாவுமே
பேரருளாளனின் பெருமை பேசுமே!

காற்றினைத் தடைபட்டுப் பாட்டில் வைத்ததும்
வலத்தென மூசிறுக் குமார விடுத்ததும்
நீர்த்துளி யாக்கையில் நின்று பொழிந்ததும்
ஆச்சரிய மும்;என குர்ஆன் கேட்குமே

சூரியனைச் சந்திரனை இதர கோள்களைச்
சுற்றிவர வைப்பவனைக் கூறும் புவிமீது
காரியங்கள் நிகழ்வதற்குக் காரணமாய் இருப்பவனைக்
கண்டு அறிவோ மென்றிடவே கட்டளை இட்டதுவே!

கருவறைக்குள் வருமுன்னர் தன்னுயிரைத் தாங்கிநிற்பீர்
கருவறைக்குள் வந்தபின்னே கட்டழகு உடல்பெற்றீர்
சாமறைக்குட் போனபின்னே காட்டிடும் மண்ணோடும்
உயிர்க்கும் வரைதானே "ஓடுதலும் ஆடுதலும்"

கம்பீரக் குரலெழுப்பும் குர்ஆனுக் கிணையாக
இம்புவியில் இன்றைக்கு எவ்வேத நூலுமில்லை!
எம்பிரான் இன்னுலகில் திருமறையாம் திருக்குர்ஆன்
தன்னிறைத் திருமொழியால் குறிசெட்ட மக்களுக்கு

தெம்புமே வாழ்வதுவே! நினைத்திடுவோம் கடவுளை
நெருங்கினிலே குழம்பாமல் திண்மையை அன்னவரைக்
கம்பீரத் தொனியாலே கவர்ந்திழுத்த குர்ஆனைக்
காட்டிடுமோர் வேதநூல் காசினியில் இல்லையே!

கலாபூஷணம் ஏ.எம்.எம். அலி

# பிளவுபட்ட பெரியவர்கள் அகப்பட்ட சிறுசுகள்!

காட்டி அணைத்து..
கன்னத்தில் முத்தமிட்டு..
இதமாய் என்னை வளர்ப்பாய் தாயே!

நான் தவழ
கவி பிடி கதைசொல்லி
பக்குவமாய் தூண் தவழ விடுவாயே

மின்சாரம் இறுகிட
இறந்துவிட்ட குப்பியுடன்
"இதோ வந்துவிட்டேன் பயப்படாதே..."
குரல் கொடுப்பாயே!

கதவு தாண்டி வந்து
கல்லெறிந்தும் தொலைவுவரை
பார்த்து வழிநிறுப்புவாய் -
காத்திருந்து வரவேற்பாய்!

உம்மா...
பொத்தியிட்ட தீயினை..
தவழவிட்ட நீயில்லை
பசியறிந்து உணவூட்ட
அம்மாவால் முடியவில்லை!

பூட்டிய வீடு இருந்து
தாளாத வருகிறேன்
ஆறிய தேநீரை தானே பருகுகிறேன்
வாப்பா உன்போல்
கதை சொல்வதில்லை
"பயம் வேண்டாம்" என்றெனக்குக்
கொடுப்பதுமில்லை

வாப்பாவைப் பிரிந்துவிட்ட நாம்
கனவில் மூழ்கலாம்
உன்னை நினைத்துவிட்டால்
என் நெஞ்சில் வருத்தம்!

நீயில்லை.
இனி நீ வருவதுமில்லை.
பிள்ளைகளின் என் துயரமில்லை
வாழ்விலே சாந்தியில்லை

ஜுமானா ஹுஸைன்
அம்பாறை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதா புவனம் கவிதா பவனம்

# தவக்குல்

என் பாலைவனத் தேடல்களின்
முடிவுகள் எப்போதும்
கானலாய் கரைந்து போவதைக் கண்டு
கண்ணீர் விட்டுக் கதறியழ - நானொன்றும்
சராசரிப்
பெண்ணல்ல.



முடிவேயற்று ஸம் ஸம் தேடுகின்ற
அன்னை ஹாஜராவின்
நவயுக வாரிசு.

பொறுமை கொள்ளுங்கள் என்
வயோதிபத் தாயே.
உங்கள் ஏழைக் குடிசைக்குள்
இன்னும் நான் முப்பதையும் தாண்டிவிட்ட
முதிர்கன்னிப் பட்டதாரி.

எம்மைப் பாதுகாக்கவும்
எம் பிரார்த்தனைகளை செவிமடுக்கவும்
எம் தேவைகளைப் பொறுப்பேற்கவும்
எப்போதும் எம்முடன் அன்பான எம்
இரட்சகன் இருக்கிறான்
கன்னத்தில் வழிந்தோடி முஸல்லா நனைக்கும்
உங்கள் கண்ணீர் துளிகளில் கரைந்திருக்கும்
பிரார்த்தனைகள்
நிச்சயம் நிறைவேறும் இன்ஷா அல்லாஹ்!

ஷஹீதா

# ஆன்(த்)மா

மனிதா! அது புனிதம்
ஆன்(த்)மா இன்றேல்
அது ஒரு பிணம்!
உடலும் ஆன்(த்)மாவும்
இணையும் போதுதான்
மனிதம் பிறக்கிறது!
மானிடம் உருவாகிறது!

மனிதா!
ஆன்(த்)மாவும் நீயும்
சமநிலையிலாய்



இருக்கும்போதுதான்
மனிதப் புனிதமடைகிறாய்!

நீ உனக்காக அல்ல உன்
ஆன்(த்)மாவுக்காய்
நல் ஆன்(த்)மாவுக்காய்
மீண்டும் வாழ வேண்டும்!
உன்னால் எந்த ஆன்(த்)மாவும்
அடிமைப்படுத்தப்படவும் ஏன்
துன்புறுத்தப்படவும் கூடாது!
ஆன்(த்)மாவின் விரோதிகள்
கெட்ட தீய எண்ணங்களும்
பேராசைகளும் தான்!

நாகரீக மோகத்தில்
விழுந்து தவிக்கும் உனக்கும்
ஆறுதல் கொடுப்பதும்
ஆன்(த்)மா தான்!

மோகத்திலும் சோதனையிலும்
சிக்கித் தவிக்கும் உனக்கும்
ஒத்தடம் கொடுப்பதுவும்
ஆன்(த்)மா தான்!

பரிசுத்தவானாய் - நீ
மரணித்த வேளையிலன்றி
தாங்குமுன் இருதயமெனும்
உன் செயல்களை(த்)
சீர்தூக்கும் கோன்!

தோத்திரங்கள் நிறை வேதம்
வல்லவனின் பரிசுத்தமாய்...
மறுமையில் சுட்டும் நிறை பெற...
உன் ஆன்(த்)மாவை
பரிசுத்தத்தாலும் நல்லமல்களாலும் தூய்மையாக்கு!
பொறுமையாலும் பணிவாலும் நிரப்பு...
அறிவாலும் நிறைவாலும் நிறைத்து விடு!
தீயவற்றை விட்டும் தூரமாகு!
அப்போதுதான்
ஈருலகிலும் வெற்றியடைவாய்!
இன்ஷா அல்லாஹ்!

- கே.எம்.எம். பஹீமா -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# WinSYS NETWORKS

*The Information security training provider of the nation*

No: 14, Schofield Place, Kollupitiya, Colombo-03, Sri Lanka.
Tel: 011-2589567/8,011-4340666,0777 259927
www.winsysnetworks.net / www.winsys.lk / info@winsysnetworks.net


*Tertiary and Vocational Education Commission – Sri Lanka – Reg. No:- P01-6402*

## Build your Foundation for Microsoft & CISCO Proven Structured Learning Approach @ WinSYS

**CCNA** 640-802 (ICND1) v1.1 (ICND2) v1.1 **Rs. 12,000/=**

**CCNP** 642-902 (ROUTE) 642-813 (SWITCH) 642-832 (TSHOOT) **Rs. 15,000/=** (PER MODULE)

**CCIP** 642-691 (BGP)(MPLS) 642-902 (ROUTE) 642-642 (QoS) **Rs. 150,000/=**



Microsoft Certifications

**MCTS** 70-680 / 70-642 70-643 / 70-640 **MCITP** Enterprise Administrator Server Administrator | **Linux** leads to RHCE | **A New Begining in 2012**

**VMware** VMware vSphere® 5.0 | **PHP MySQL** | **Diploma In Hardware Engineering With Networking.** | **Special Diploma In Network Administration.**

## REFER 5 STUDENTS FOR ANY TRAINING GET YOUR TRAINING TOTALLY FREE

## WEEKDAYS SPECIAL OFFER

ALL 3 TRAININGS ONLY **25000/=**

- Special Diploma In Advanced Networking (ANW)
- Cisco Certified Network Associate (CCNA)
- Microsoft Certified Technology Specialist (MCTS) 70-680 MCTS: Windows 7 Configuring

Those Who Succeed Microsoft & CISCO Last Week.



MCITP Enterprise Administrator | CCIP | CCNA | CCNA | CCNA

**Learn Computerized Accounting**

Introduction to Computerized Accounting

**BRANCHES**

Kandy E-win Networks
No: 524, Peradeniya Road, Kandy.
081-2203785-6/0777-047708/0777-807630

Puttalam Twin-WIN ICT Professionals
No: 33, Masjid Road, Puttalam.
Tel:- 032-2267477 / 0777-112771

Batticaloa WinSYS
No: 10, New Kalmunai Road, Batticaloa.
Tel:- 065-2228789-0777-632 871




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Get your 25% Discount for Selected Training

Office

Office 2007
Office 2010

Word Excel Power Point Access Internet & Email

## Computerized Accounting AutoCAD Drafting

Learn Computerized Accounting
கணனிமயமாக்கப்பட்ட கணக்கீட்டுக் கற்கைநெறி

Certificate in Professional Accountant (CPLC)
Introduction to Computerized Accounting
M.Y.O.B. Premier Accounting
Quick Books Premier

Diploma in Professional Accountant (DPAC)
Introduction to ERP & DPC


# Diploma in Hardware Engineering with Networking



Computer Hardware / Troubleshooting / Upgrading / Operating Systems / Windows 7 / XP / Linux / Windows 8 / Software Installation / Virus Guard Installation / Computer Networking / Introduction to Networks and Network Types / Network Topologies and Architectures / Network Cabling / Remote Desktop / NetMeeting / Introduction To Workgroups and Domains / Configuring and Managing a Workgroup / Connecting User Settings / Creating Domain Users Wireless Networking / Wireless Communication / Linux Installation & User Creation

## Special Diploma In
# Advanced Networking

* Virtualization Technology
* Installing Internet Security Acceleration (ISA)
* Installing Internet Information Service (Web Server)
* Installing Exchange Server (E-Mail Server) * Installing and Configuring a DNS Server





# Graphic Designing

# Web Designing

PUBLIC LIBRARY JAFFNA

## All These Training NOW Available at

E-win NETWORKS
On your way to future
No: 524,
Peradeniya Road, Kandy.
081-2203785-6/0777-047708/0777-807630

BRANCH
Puttalam. Twin-WIN ICT Professionals
No: 33, Masjid Road, Puttalam.
Tel:- 032-2267477 / 0777-112771

NEW BRANCH
WinSYS NETWORKS
The network security training provider of the nation
No: 10, New kalmunai Road, Batticaloa.
Tel:- 065-2228789-0777-832 871

HEAD OFFICE
WinSYS NETWORKS
The network security training provider of the nation
No: 14, Schofield Place, Kollupitiya, Colombo-03, Sri Lanka.
Tel: 011-2585967/8, 011-4340656, 0777 259927




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜமாஅத்தின் செயற்பாடுகளில் கடந்த ஆண்டின் களமியங்கிய நிகழ்வுகளை மீட்டிப்பார்த்து வருடமுழுவதுமான செயற்பாடுகளை முன்வைக்கும் ஜமாஅத்தின் வருடாந்த அங்கத்தவர் பொதுக் கூட்டம் 2011 டிசம்பர் 03-04 ஆம் திகதிகளில் மீலாதுந் நபி தேசிய மாநாட்டின் முதன்மையாக நிகழும் ஆகிய முஸ்லிம் நகர் காத்தான்குடி- காத்தான்குடியில் அமைந்துள்ள மண்டபத்தில் நடைபெற்றது.

2011 டிசம்பர் 03 ஆம் திகதி மாலை பகல் ஆரம்பமாகி மறுநாள் 04 ஆம் திகதி பிற்பகல் மூன்று நாற்பது வரை இடம்பெற்ற இந்நிகழ்வில் நாடெங்கிலுமிருந்து சுமார் ஆயிரம் அங்கத்தவர்கள் முழுமையாகக் கலந்து கொண்டனர்.

"சமூகத்தை நோக்கிய ஜமாஅத்தின் செயற்பாடுகள்" என்ற கொள்கைப்பொருளில் இலங்கை அமர்வு, சிறுவர் அமர்வு, வெளிநாட்டுப் பிரமுகர் அமர்வு என நிகழ்ச்சிகள் பல்வேறுபடுத்தப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தன.

முதல் நாள் தொடக்கத்தில் ஜமாஅத்தின் செயற்பாடுகளை அலசிப் பார்க்கும் விதமாக செயற்பாட்டு அறிக்கைகள் முன்வைக்கப்பட்டன. கடந்த வருட பதவியில் இருந்தவர் அமீர் அறிக்கை, செயலாளர் நாயகம் அவர்களாலும் ஆண்டறிக்கை அஷ்ஷெய்க் அப்துல் வாஜித் (இஸ்லாஹி) ஆசிரியர் அப்துல் ஸலாம் ஆகியோரால் முன்வைக்கப்பட்டது.


முதல் நாள் நிகழ்வில் "இஸ்லாமிய சிந்தனைகள்" எனும் தலைப்பில் பொறியியலாளர் மீஸான் ஸஹூர் அவர்களும் "பன்மைச் சமூகச் சூழலில் இஸ்லாமிய வழிமுறை" எனும் தலைப்பில் ஜமாஅத்தின் முன்னாள் அமீர் மௌலவி ஏ.எல்.எம். இப்றாஹீம் அவர்களும் "சமூகமாற்றத்தை நோக்கிய வாழ்க்கை" எனும் தலைப்பில் ஜமாஅத்தின் அமீர் உஸ்தாத் ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர் அவர்களும் உரையாற்றினர்.

முதல் நாள் அமர்வைத் தொடர்ந்து உலமா பிரமுகர்களும் கலந்து கொள்ளும் விசேட நிகழ்வாக பிரமுகர் அமர்வு இடம்பெற்றது.

அந்நிகழ்வில் பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் அஷ்ஷெய்க் எம்.ஏ.எம். நிஸ்வி (நளீமி) வரவேற்புரை நிகழ்த்த, ஜமாஅத் பற்றிய அறிமுகம் டாக்டர் ஆகில் அஹ்மத் அவர்களது பின்னணிக் குரலுடனும் தொழிநுட்ப பங்களிப்புடனும் ஒளிக் காட்சியாக வழங்கப்பட்டது.

முன்னாள் அமீர் மௌலவி ஏ.எல்.எம். இப்றாஹீம் அவர்கள் தலைமையுரை வழங்க "பெரும் கடமையா? சிறுகடமையா?" எனும் தலைப்பில் அமீர் உஸ்தாத் ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர் உரை நிகழ்த்தினார். ஜமாஅத்தின் மூத்த சகோதரரும் கிழக்குப் பிராந்திய பெண்கள் கல்வி நிறுவனத்தின் பணிப்பாளருமான ஏ.எம். மன்சூர் அவர்களது "மனித நல்ன் காக்க வாழ்வதே மனிதம்" எனும் கவிதையும் நிகழ்வில் இடம்பெற்றது.

காத்தான்குடி அனைத்துப் பள்ளிவாயல்கள் சம்மேளனப் பிரதிநிதி சகோதரர் கபூர், அஷ்ஷெய்க் அப்துல் கபூர் (மதனி), மக்கள் சகோதரர் ஏ.எம். அப்துல் காதர் ஆகிய பிரமுகர்கள் தத்தமது கருத்துக்களை வழங்கினர். மருதமுனை, வாழைச்சேனை, மூதூர், ஓட்டமாவடி ஆகிய ஊர்களிலிருந்து சுமார் மூன்னூறு பிரமுகர்கள் இதில் பங்குகொண்டனர்.




## இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் வருடாந்த அங்கத்தவர் பொதுக் கூட்டம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முதல் நாள் நிகழ்வில் வாசித்தலுக்கு ஊக்கமூட்டும் நிகழ்வாக கலாநிதி ஷிஹான் அத்தாஸின் அவர்களால் எழுதப்பட்ட 'முஸ்லிம் சாதனைகள்' எனும் நூலுக்கு அறிமுகம் ஏ.ஜே.எம். ஃபைஸல் அவர்கள் அறிமுகத்தை வழங்கினார்.

இரண்டாம் நாள் நிகழ்வில் விசேட நிகழ்வாக வெளிநாட்டுப் பேராளர் அமர்வு இடம்பெற்றது. இதில் தமிழ்மொழியிலான குர்ஆன் வெளியீடு, சூடான் மற்றும் இந்தோனேசிய நாட்டுப் பிரதிநிதிகளின் உரை என்பன இடம்பெற்றன. இவற்றின் மொழிபெயர்ப்புகளை முறையே மௌலவி ஏ.எல். இர்ஷாத், மௌலவி அப்துல் முஜீப் (கபூரி) ஆகியோர் வழங்கினர்.

தொடர்ந்து "சக வாழ்வும் சமூகப் பொறுப்புகளும்" எனும் தலைப்பில் டாக்டர் ஆதில் ஹஸன் அவர்கள் உரை நிகழ்த்தினார்.

ஏனைய செயற்பாட்டைப் பிரதிபலிக்கும் நிகழ்வாக நடமாடும் சேவை ஒன்று இடம்பெற்றது. நடைமுறை வாழ்வில் எதிர்கொள்ளும் தொழில், குடும்ப, மார்க்க சுகாதாரம், குடும்ப விவகாரம், கல்வி போன்ற பல்வேறு துறைகளுக்குமான ஆலோசனைகள் துறைசார்ந்தோரால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.


இம்மாநாட்டில் அனாதைகளுக்கான நேர்த்தியான அமர்வொன்றும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இவை தவிர, காத்தான்குடி பள்ளிவாயல் வளாகத்தில் கண்காட்சி ஒன்றும் இடம்பெற்றது.

இரண்டு நாட்களும் தொழுகைகள், உணவு என்பன மத்திய பள்ளிவாயலில் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அங்கத்தவர்கள் தங்குவதற்கான ஏற்பாடுகள் மத்திய பள்ளிவாயல், ஏனைய பள்ளிவாயல்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

காத்தான்குடியைச் சேர்ந்த சகோதரர்களின் ஒத்துழைப்புடன் உணவுகள் பரிமாறப்பட்டன.

- ஆ.எம். நூமீல் -





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களது மதீனா வாழ்வின் இறுதிப் பகுதி அது. முஸ்லிம்களுக்கு வெற்றிக்கு மேல் வெற்றி; கனீமத் பொருட்கள் வந்து குவிந்த வண்ணம் இருக்கின்றன; மனிதர்கள் இஸ்லாத்தில் கூட்டம் கூட்டமாக நுழைகின்றனர்; கடந்த இரண்டு தசாப்தங்களாக அந்த முழுச் சமூகமும் உயிரைக் கொடுத்து அர்ப்பணித்து வந்த கொள்கைகள் யாவும் நிறைவேறுகின்றன; கனவுகள் நனவாகின்றன; முஸ்லிம்கள் ஆயுதங்களைக் கீழே போட்டு நிம்மதிப் பெருமூச்சு விடும் காலம்; செல்வம், செல்வாக்கு, அதிகாரம் ஆகிய [illegible] முஸ்லிம்களின் கைகளில். அல்லாஹ்வுடைய மார்க்கத்தை விஞ்சுகின்ற இன்னுமொரு மார்க்கம் அரபு மண்ணில் எங்குமே இருக்கின்றதா என்று நான்கு மாதங்கள் பூமியில் சுற்றித் திரிந்து பாருங்கள் என்ற அல்லாஹ்வுடைய [illegible] பிரகடனமும் ஓங்கி எதிரொலிக்கிறது.

நேற்று வரைக்கும் இஸ்லாத்தைத் துவம்சம் செய்ய இரவும் பகலும் சூழ்ச்சிகள் செய்து [illegible] திட்டமிட்டவர்கள் ஒரு ஒளிக்க இடமில்லாமல் அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் காலடியில் வந்து சரணடைகின்றனர். ஏன் தெரியுமா? இந்தக் காலத்தில் இஸ்லாத்தை ஏற்று முஸ்லிம்களுடன் இணைவதுதான் உலகத்திலும் மறுமையிலும் வெற்றிக்கும் பாதுகாப்புக்கும் ஒரே வழி என்று அவர்கள் உணர்ந்தார்கள். இஸ்லாத்தை நிராகரித்து முஸ்லிம்களை எதிர்த்து நிற்பது உலகிலும் மறுமையிலும் தோல்வியையும் இழிவையும் தவிர வேறெதனையும் பெற்றுத் தராது என்பது புரிந்துவிட்ட காலம்.

# முந்திக் கொண்டவர்கள் முஹாஜிரூன்கள் மட்டும்தானா?

இஸட். ஏ. எம். ஃபவாஸ், சர்வதேச இஸ்லாமிய பல்கலைக்கழகம், மலேசியா

இஸ்லாத்துக்கு இப்படியொரு காலமும் இருந்தது. [illegible] முஸ்லிம்களைத் தேடிக் கொண்டிருக்கிறது. இஸ்லாத்தின் தூதைப் பகிரங்கப்படுத்த அழைப்பாளர்களை வேண்டி நிற்கிறது. அல்லாஹ், முஹம்மத் என்று வாய்திறக்க முடியாத காலம். இக்காலத்தில் யாராவது இஸ்லாத்தைக் கூறினால் அவர் சொல்லொணாத் துயரங்களுக்கு ஆளாக வேண்டிவரும். தனது நெருங்கிய உறவுகள், சொத்து செல்வங்கள், கனவுகள், [illegible] ஆகிய அனைத்தையும் இழக்க நேரிடும். எதற்காக? இஸ்லாம் என்ற கொள்கையை ஏற்றதற்காக... [illegible] இணைந்ததற்காக... முஹம்மத் என்ற மனிதருக்குத் தோள் கொடுத்ததற்காக... தனது உள்ளத்தில் குடிகொண்டிருந்த மூட நம்பிக்கைகள், அஞ்ஞான இருள்களைக் களைந்தெறிந்ததற்காக... ஓர் உன்னத இலக்கை அடைய நீண்டதொரு பயணத்தைத் தெரிவு செய்ததற்காக...!

எனவே, விசுவாசமும், [illegible] எதிரும் புதிருமான இவ்விரு காலப் பிரிவுகளிலும் இஸ்லாத்தை ஏற்றவர்களின் நிலைமைகள் அந்தஸ்தும் ஒன்றுபோல இருக்க முடியுமா? ஒருபோதும் இல்லை! அல்லாஹ் கேட்கிறான்:

"அவர்களில் சிலருக்கு வேறு சிலரைவிட எவ்வாறு நாம் சிறப்பு அளித்துள்ளோம் என்பதைப் பாருங்கள். மேலும் மறுமையிலோ அவர்களுக்கு இன்னும் அதிக அந்தஸ்து உண்டு. பெரும் சிறப்புக்குரியதும் அதுதான்." (17:21)

ஆரம்பகால மக்கா வாழ்வின் தியாக இலட்சியங்களைப் புரிந்து செய்து, கனவுகள் [illegible], கடுகள் [illegible] பாதை [illegible] சோதனைகளுக்கு முகம் கொடுத்து அர்ப்பண சிந்தனையுடன் உழைத்து, சொந்த நாட்டை விட்டு ஹிஜ்ரத்கள் செய்து விடா முயற்சி [illegible] இஸ்லாம் எனும் கட்டிடத்துக்கு அத்திவாரமிட்டு அரண்களுடன் கட்டியெழுப்ப [illegible] அந்தஸ்து பிற்பட்ட மதீனா வாழ்வின் அந்தக் [illegible] பெறும் [illegible] முஸ்லிம்களின் அந்தஸ்தைவிட அல்லாஹ்வுடைய பார்வையில் பல மடங்கு அதிகமானது. ஆரம்ப காலத்திலிருந்தே இஸ்லாத்தின் எழுச்சிக்காக உழைத்த இந்த [illegible] அல்குர்ஆன் 'முந்திக் கொண்டவர்கள்' என்றும் 'அல்லாஹ்வுக்கு நெருக்கமானவர்கள்' என்றும் சிறப்புப் பெயர்கள் கொண்டு அழைக்கிறது.

மறுமையில் [illegible] மனிதர்கள் மூன்று [illegible] பிரிந்து விடுவார்கள். [illegible] என்று அல்லாஹ் [illegible] குறிப்பிட்டு, "முந்தியவர்கள் முந்தியவர்களே. அவர்கள்தான் (அல்லாஹ்வுக்கு) நெருக்கமானவர்கள். அருட்கொடைகள் நிறைந்த சுவனங்களில் இருப்பவர்கள்" (56: 10,11) என அல்லாஹ் [illegible] கூறுகிறான்.

முந்திக் கொண்டவர்கள் பற்றி அல்குர்ஆனில் [illegible], அல்வாகிஆ, அத்தவ்பா, அல்ஹதீத் ஆகிய அத்தியாயங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. அல்லாஹ்வுடைய அடியார்களில் [illegible] வாரிசுகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மனிதர்களை அல்குர்ஆன் மூன்று வகையினராக இனங்கண்டுள்ளது.

"நாம் நம்முடைய அடியார்களில் இருந்து (வேதத்தின் வாரிசு களாக) எவர்களைத் தேர்ந்தெடுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ந்தெடுத்த அடியார்களை இவ் வேதத்துக்கு வாரிசுகள் ஆக்கினோம். இப்போது அவர்களில் சிலர் தமக்குத் தாமே அநீதியிழைத்துக் கொண்டவர்கள். மேலும் சிலர் இடைப்பட்ட நடுநிலையில் இருக்கின்றனர். இன்னும் சிலர் அல்லாஹ்வின் கட்டளைப்படி நன்மைகளில் முந்திக் கொள்பவர்களாய் இருக்கின்றனர். இதுதான் மாபெரும் அருளாகும்." (35: 32)

தமக்குத் தாமே அநீதியிழைத்துக் கொண்டவர்கள் வரலாற்றில் அதிகமானவர்களாக இருப்பதால் அவர்களை முதலாவதாகவும்; நடுநிலையில் செயல்படுபவர்கள் அதனைவிடக் குறைவாக இருப்பதனால் இரண்டாவதாகவும்; போட்டி போட்டு முந்திக் கொள்பவர்கள் முன்னைய இரு வகையினரையும் விட மிக சொற்பத் தொகையினராக இருப்பதால் அவர்களை மூன்றாவதாகவும் குர்ஆன் குறிப்பிட்டுள்ளது.

யார் இந்த முந்திக் கொண்டவர்கள்? இவ்விடயத்தில் இஸ்லாமிய அறிஞர்கள் பல்வேறு கருத்துக்களைக் கொண்டுள்ளனர். அவை பின்வருமாறு:

1. தொழுகைத்திசை மக்காவுக்கு கிப்லா மாற்றப்பட முன் இஸ்லாத்தின் வளர்ச்சிக்காக உழைத்தவர்கள். (அதாவது: இரண்டு கிப்லாக்களை நோக்கியும் தொழுதவர்கள்)
2. ஹிஜ்ரத் செய்தவர்கள் அல்லது பத்ர் போருக்கு முன் இஸ்லாத்திற்காக உதவி செய்தவர்கள்.
3. பத்ரில் கலந்து கொண்டவர்கள்.
4. ஹுதைபிய்யா உடன்படிக்கை காலத்துக்கு முன் இஸ்லாத்தை ஏற்றவர்கள் (மேலும் உஹுத் யுத்தத்தில் ஏற்பட்ட தோல்வியில் இருந்து ஹுதைபிய்யா உடன்படிக்கை வரை முஸ்லிம்கள் மிக நெருக்கடியான சூழ்நிலைக்கு உட்பட்டிருந்தார்கள்.)
5. பைஅதுர் ரிழ்வானில் கலந்து கொண்டவர்கள். (ஹுதைபிய்யாவில் ஒரு யுத்தம் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் தென்பட்டபோது நபியவர்கள் அங்கு குழுமியிருந்த 1400 ஸஹாபாக்களிடமும் மரணம்வரை போராடுவோம் எனப் பெற்ற உறுதிமொழி 'பைஅதுர் ரிழ்வான்' என அழைக்கப்படுகிறது.)

மேற்கூறிய கருத்துக்களைப் பகுப்பாய்வு செய்து அலசிப் பார்த்து, முந்திக் கொண்டோர் என்போர் முஹாஜிர்கள் மற்றும் அன்ஸார்களையே குறிப்பிடுவதாக அஷ்ஷஹீத் ஸையித் குதுப் (றஹிமஹுல்லாஹ்) விளக்குகிறார். மக்காவின் ஆரம்ப காலத்திலிருந்தே பாடுபட்ட நபித்தோழர்களான முஹாஜிர்கள் அல்லாஹ்வின் பார்வையில் அதி சிறப்புக்குரியவர்கள். அன்ஸார்கள் அகபாவில் அல்லாஹ்வுடைய தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு வழங்கிய உறுதி மொழி (அகபா உடன்படிக்கை) மூலமாக முஹாஜிர்களின் அந்தஸ்துக்கு உயர்கிறார்கள். அல்லாஹ் கூறுகிறான்:

"எவர்கள் ஈமான் கொண்டு ஹிஜ்ரத் செய்து அல்லாஹ்வின் பாதையில் தங்களின் உயிர்களாலும் பொருட்களாலும் போர் புரிந்தவர்களோ அவர்களும் எவர்கள் (ஹிஜ்ரத் செய்த) முஹாஜிர்களுக்கு இடமளித்து உதவியும் புரிந்தார்களோ அவர்களும் உண்மையில் ஒருவருக்கொருவர் ஆதரவாளர்களாய் இருக்கின்றனர்." (8: 72)

"(இஸ்லாத்தில் அழைப்புக்கு) முதல் முதலில் பதிலளித்த முஹாஜிர்கள் அன்ஸார்கள் குறித்தும் அவர்களை யார் நேர்மையோடு பின்பற்றினார்களோ அவர்கள் குறித்தும் அல்லாஹ் திருப்தி கொண்டான். அவர்களும் அவனைக் குறித்து திருப்தி அடைந்தார்கள்." (9: 100)

மேற்கூறிய வசனத்தில் அல்லாஹ் மூன்று வகையான தரப்பினர்களைப் பற்றித் தனது திருப்தியை வெளிப்படுத்துகிறான்.

1. முஹாஜிர்கள்
2. அன்ஸார்கள்
3. முஹாஜிர்கள், அன்ஸார்களைப் பின்தொடர்ந்தவர்கள்

இந்த மூன்றாவது வகையினர் முஸ்லிம்கள் வரிசையில் சேர்ந்த பின்னர் மக்காவில் இஸ்லாத்தை ஏற்று மதீனா வந்து முஸ்லிம் சமூகத்துடன் இணைந்தவர்களாக இருக்கலாம் அல்லது மதீனாவில் இஸ்லாத்தை ஏற்று அந்த சமூகத்துடன் இணைந்து கொண்டவர்களாக இருக்கலாம். எனினும், வேறு பல அல்குர்ஆன் வசனங்களின்படி முஹாஜிர்கள், அன்ஸார்கள் ஆகிய இரு பிரிவினருக்கும் தனியான அந்தஸ்து கொடுக்கப்படுகிறது. இத்தகைய உத்தமர்கள் ஏனைய முஃமின்களின் பிரிவினர்களில் இருந்து வேறுபடுகிறார்கள் என்பதைப் பின்வரும் திருவசனம் விளக்குகிறது:

"ஹஜ் செய்பவர்களுக்குத் தண்ணீர் புகட்டுவதும் கஃபாவுக்கு அருகிலுள்ள பள்ளியைப் பராமரிப்பதும் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் ஈமான் கொண்டு அல்லாஹ்வின் பாதையில் கடுமையாக உழைப்பவரின் பணிக்குச் சமமாகுமா? அல்லாஹ்விடத்தில் இவ்விரண்டும் சமமாகாது. எவர்கள் ஈமான் கொண்டு (இறைவழியில்) ஊரைத் துறந்து தம் உயிர்களையும் பொருட்களையும் அர்ப்பணித்து அல்லாஹ்வின் பாதையில் போராடுகிறார்களோ அவர்கள் அல்லாஹ்விடம் உயர்ந்த பதவியைப் பெறுவார்கள். மேலும் அவர்கள் தான் வெற்றியாளர்கள்." (9: 19-20)

முந்திக் கொண்டவர்களுக்கு சுவனத்தில் கிடைக்கும் பாக்கியங்கள் மற்றும் உயர் பதவிகள் யாவை என்பதை அல்குர்ஆன் விரிவாக விளக்கியுள்ளது:

"நீடித்த நிலையான சுவனங்களில் இவர்கள் நுழைவார்கள். அங்கே தங்கக் காப்புகளாலும் முத்துக்களாலும் அவர்களுக்கு அணிவிக்கப்படும். அங்கு அவர்களின் உடை பட்டாக இருக்கும். மேலும் அவர்கள் கூறுவார்கள்: 'எங்களை விட்டு கவலைகளை அகற்றிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்.'" (35: 33-34)

(37ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்ஷெய்க் எம்.எம். பஸ்லுர் றஹ்மான் (நளீமி) — தொடர் - 1




(ஒரு வரலாற்றுக் கண்ணோட்டம்)

புராதன காலம் தொட்டு இன்று வரை உலக வரலாற்றில் பலஸ்தீனம் பெற்று வந்துள்ள அரசியல், சமய முக்கியத்துவத்தை வேறெந்த நிலமும் பெற வில்லை. அதற்கான காரணம் அப்புனிதம் வாய்ந்த பூமி பெற்றுள்ள அதி பெறுமானமாகும். அவ் அதி பெறுமானத்தைப் புரிந்து கொண்டவர்களும் [illegible] வர்களும் உலகின் பிரதான மூன்று சமயத்தவர்களான யூதர்களும் கிறிஸ்தவர்களும் முஸ்லிம்களுமேயாவர். இதன் காரணமாக இம்மூன்று சமயத்தவர்களும் பலஸ்தீன உரிமையை தமதாக்கிக் கொள்வதற்காக மிக நீண்ட காலமாகவே ஒருவரை ஒருவர் எதிர்த்துப் போராடி வருகின்றனர். இன்று இப்போராட்டத் தொடர் உக்கிர நிலையை அடைந்துள்ளதுடன் முழு உலகிலும் அதன் தாக்கம் உணரப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

பலஸ்தீனம் யாருக்குச் சொந்தமானது?

- இறைதூதர் மூஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் தலைமையில் பலஸ்தீனை மீட்டெடுக்கப் போராடிய யூத இனத்துக்கா?
- பலஸ்தீன பூமியில் பிறந்து இறைதூதை எத்திவைத்த ஈஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களை விசுவாசித்த கிறிஸ்தவர்களுக்கா?
- தௌராத்திலும் (பழைய ஏற்பாடு) இன்ஜீலிலும் (புதிய ஏற்பாடு) வாக்களிக்கப்பட்ட இறுதி இறைத் தூதராகிய முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களைப் பின்பற்றும் முஸ்லிம்களுக்கா?

இவை ஆழமான வினா... தேடும் வினாக்களல்ல. ஏனெனில், பலஸ்தீன விவகாரமானது வரலாறும் கலந்து கொண்டது. அடிக்கடி சுவாலை விட்டுப் பற்றி எரியும் ஒரு விவகாரம். யார் பலஸ்தீனை வெற்றி கொள்கிறார்களோ அவர்களுக்கே அப்பூமி சொந்தம். இது பலஸ்தீன வரலாற்றில் நாம் கண்டு கொள்ளும் நியதியாகும். பலஸ்தீன் ஒரு காலத்தில் யூதர்களின் கைகளில் இருந்தது. பின்னர் அவர்கள் அங்கிருந்து விரட்டியடிக்கப்பட்டார்கள். தொடர்ந்து கிறிஸ்தவர்கள் வசமாகியது. அடுத்த சில நூற்றாண்டுகளில் அவர்கள் அதை முஸ்லிம்களிடம் பறிகொடுத்தார்கள். தொடர்ந்து வந்த காலங்களில் நிகழ்ந்த சிலுவைப் போர்களினூடாக கிறிஸ்தவர்கள் மேற்கொண்ட முயற்சிகள் பூரணமாக வெற்றியளிக்கவில்லை. இருப்பினும், ஐரோப்பிய சமயச் சீர்திருத்தம், பிரான்ஸியப் புரட்சி என்பவற்றைத் தொடர்ந்து ஐரோப்பாவில் ஏற்பட்ட மாற்றங்களின் காரணமாக பலஸ்தீன் உட்பட பல முஸ்லிம் நாடுகள் ஐரோப்பியர் வசமாகியது. பின் யூதர்கள் பல்வேறு சூழ்ச்சிகளை மேற்கொண்டு பலஸ்தீனினுள் இஸ்ரேலை உருவாக்கினார்கள்.

இரண்டாம் உலக மகா யுத்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்து பலஸ்தீனினுள் யூதர்களின் தனி நாடாக இஸ்ரேல் அங்கீகரிக்கப்பட்ட நிகழ்வை உலக வல்லரசுகள் முன்னின்று அங்கீகரித்தன. அதனை மூன்றாம் உலக மகா யுத்தம் ஒன்றிற்கு அடிக்கல் நாட்டியமையாகவே [illegible] நடைபெற்ற, இன்று வரை நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிகழ்வுகள் உறுதிப்படுத்தியே வருகின்றன. பலஸ்தீன் விடயத்தில் முஸ்லிம்களுக்கு இருக்கும் உரிமையை வெள்ளையர்களும் மேற்குலகினரும் யூதர்களும் தவிர்த்து வைத்துள்ளமையை [illegible] முஸ்லிம்கள் பலஸ்தீனை மீட்டெடுக்கும் நாளைத் தாமதப்படுத்துவதற்காக திட்டமிடப்பட்ட பல்வேறு சூழ்ச்சிகளைக் கையாண்டு செய்து வருகின்றார்கள். பின்வருவன அவற்றுள் சிலவாகும்:

- முஸ்லிம் நாடுகளில் தமக்குச் சார்பான முஸ்லிம் பெயர் தாங்கிகளை ஆட்சி பீடத்தில் அமர்த்தல்.
- முஸ்லிம் நாடுகளை அரபு நாடுகளுடன் மோதவிட்டு வைத்தல்.
- முஸ்லிம்களின் [illegible] போராட்டங்களை [illegible] உலகம் முழுவதும் பரப்புதல்.
- முஸ்லிம்கள் தூய இஸ்லாமிய சிந்தனையின் அடிப்படையில் ஒன்றுபடுவதையும் [illegible] அதற்கு எதிராக செயற்படல்.
- பலஸ்தீன மக்களை வறுமை நிலையில் பலவீனமாக வைத்து இஸ்ரேலை எதிர்ப்பதிலும் விடுபடச் செய்தல்.
- முஸ்லிம்கள் இயக்க ரீதியாகவோ கொள்கை ரீதியாகவோ பிளவுபட்டு மோதிக் கொள்கின்ற போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருந்த எண்ணெய் வார்த்து கடைக்குச் சாதகமான சூழ்நிலையை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

இத்தகைய அநுக்கிரகங்கள் இன்று பகிரங்கமாக, இரகசியமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அதன் கொடூரத்தை பலஸ்தீன மக்கள் நேரடியாக அனுபவித்து வருகின்றனர். அன்று ஒரு யூதனால் அநீதி இழைக்கப்பட்ட முஸ்லிம் பெண் ஒருத்தி 'வா முஃதஸிமா' எனக் கூவிய சப்தம் கலீபா முஃதஸிமின் காதுகளை எட்டியதுமே அவர் அபயக் குரல் எழுப்பிய முஸ்லிம் பெண்ணின் கண்ணியத்தைப் பாதுகாத்தார். ஆனால் இன்று பலஸ்தீனிலும் ஈராக்கிலும் ஆப்கானிஸ்தானிலும் இன்னும் பல இடங்களிலும் பெண்கள், குழந்தைகள், வயோதிபர்கள் என ஆயிரக்கணக்கானோர் அநீதி இழைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இன்றைய முஸ்லிம் உம்மாவின் ஆட்சியாளர்களோ ஏகாதிபத்திய எஜமானர்களுக்கு முன்னால் மண்டியிட்டவர்களாக, இந்த அநீதிகளுக்கு எதிராக மௌனம் சாதிக்கும் சாட்சிகளாக இருக்கின்றனர்.

இவை எல்லாம் போன்ற நிலை காணப்படுவதால்,

- இவ்வாறான அநீதிகளுக்கெதிராகப் போராடி வருவோரை அடிப்படைவாதிகள் என்று முத்திரை குத்தும் நிலையும், இஸ்லாமியப் பணியாகக் கருதாத இஸ்லாமிய தஃவா அமைப்புக்கள் இருக்கின்றமை.
- யூதர்கள் காண்பிக்கும் தவறான வரலாற்றுச் சான்றுகளை அதிகமானோர் நம்புகின்றமை.
- பலஸ்தீன் பற்றி நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறிய முன்னறிவிப்புக்கள் இன்னும் முஸ்லிம்களின் கவனத்தை ஈர்க்காமை.
- முஸ்லிம்கள் இன்னும் தயக்க மத்தியில் ஐக்கியப் படாமை.
- பலஸ்தீன எழுச்சியை மையப்படுத்திய சர்வதேச வலைப்பின்னல் ஒன்றை அமைப்பதில் முஸ்லிம்களின் இயலாமை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இவை எல்லாவற்றையும் நிவர்த்திப்பதாயின் இன்று முஸ்லிம்கள் பலஸ்தீன வரலாற்றை காய்தல் உவத்தல் இன்றிக் கற்று, பலஸ்தீன மக்களின் தியாகபூர்வமான போராட்டங்களை உணர்ந்து, அதனை இஸ்லாமியப் பணியாகவும் பலஸ்தீன மீட்பு, சர்வதேச இஸ்லாமியத் தலைமைத்துவம் என்ற தூர நோக்குடன் (Vision) செயற்பட வேண்டும். இதுவே இன்றைய காலத்தின் தேவையாகும்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களும் ஸஹாபிகளும் குறுகிய எல்லைக்குள் அடக்கி முறைக்குட்பட்டு தப்பிச் செல்ல இன்னொரு இடம் தேடும் நிலையில் அல்லாஹ் 'இஸ்ரா' என்ற அற்புதப் பயணத்தின் மூலம் நபியவர்களை பைத்துல் முகத்தஸுக்கு அழைத்துச் சென்று நபிமார்களுக்கெல்லாம் இமாமாக நின்று தொழுகை நடத்தும் அரிய சந்தர்ப்பத்தை வழங்கிய நிகழ்வில் நாம் பெறும் படிப்பினைகள் ஏராளம். அவற்றுள் சில வருமாறு:

பலஸ்தீனில் எந்த ஒரு முஸ்லிமும் இல்லாத நிலையிலேயே அல்லாஹ் இந்த நிலையில் ஒரு தூர நோக்கை (Vision) அல்லாஹ் இவ்வுலகத்துக்கும் ஏற்படுத்தப்பட்ட முஸ்லிம்களுக்கும் ஏற்படுத்தினான். அக்காலப்பகுதியில் வாழ்ந்த மக்கள் இந்த அற்புதம் பற்றி முஸ்லிம்கள் இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் நிலையில் அது பற்றி முஸ்லிம் உலகில் பல கோணங்களில் அதனைப் பற்றி விளக்க வேண்டிய தேவை இல்லை.

- நபிமார்களைக் கொண்டு பல சமுதாயங்கள் உலகில் தோன்றியுள்ளன. நபிமார்களுக்கெல்லாம் இமாமத் செய்யும் சந்தர்ப்பம் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு வழங்கப்பட்டதன் மூலம் அல்லாஹ் சர்வதேச தலைமைத்துவத்தை முஸ்லிம் உம்மத்துக்கு வழங்கியுள்ளான்.

- நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு அல்லாஹ்வினால் காண்பிக்கப்பட்ட பலஸ்தீன் இங்கு மிகப் பெரும் போராட்டத்தின் பின்னரே ஸஹாபாக்கள் காலத்தில் ஆட்சியைப் பெற்றது. பின்னர் அது இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் பிரதான மட்டமாக மாறியிருந்தது. அவ் எல்லையை முஸ்லிம்கள் முழுமையாகக் கைப்பற்றிக் கொண்டிருந்த காலப்பகுதியில் இஸ்லாமிய சாம்ராஜ்ய எல்லைகளும் விரிவடைந்து சென்றுள்ளது. முஸ்லிம்கள் அவ் எல்லையில் பலமிழக்கும்போது சாம்ராஜ்யத்தின் பல பகுதிகள் எதிரிகளின் கைகளில் வீழ்ந்திருக்கின்றன.

- கஃபதுல்லாஹ், மஸ்ஜிதுன் நபவி, மஸ்ஜிதுல் அக்ஸா ஆகிய மூன்றும் பிரதான புனிதப் பணிகளைப் பிரதிபலிக்கும் இஸ்லாமியப் புனிதத் தலங்களாகும். கஃபா-ஆன்மீகம், மஸ்ஜிதுன் நபவி-அறிவுப் பணி, மஸ்ஜிதுல் அக்ஸா-புனிதப் போர். இம் மூன்றும் ஒரு முஸ்லிமின் இருப்பின் பெறுமதியை வெளிப்படுத்துகின்றன.

- கைபர் யுத்தம் (ரழியல்லாஹு அன்ஹு), தளபதி அலீப் அர்ஸலான் (ரஹிமஹுல்லாஹ்), ஸலாஹுத்தீன் ஐயூபி (ரஹிமஹுல்லாஹ்), ஸைபுத்தீன் குதுஸ் (ரஹிமஹுல்லாஹ்), முஹம்மத் அல்பாதிஹ் (ரஹிமஹுல்லாஹ்) போன்ற வரலாற்று வீரத் தளபதிகளை முஸ்லிம் உலகம் பலஸ்தீன மீட்புப் போராட்டத்தில் அவர்கள் அடைந்த வெற்றியின் மூலமே பெற்றுக் கொண்டது.

வாசகர்களே, இதனை வாசிக்கும்போது பலஸ்தீன வரலாற்றைப் படிக்க வேண்டும் என்ற ஆவல் பிறக்கிறதா? வீரம், விவேகம், விசுவாசம், தியாகம் இவை அனைத்தையும் ஒருங்கே பெற்ற சத்தியப் போராட்ட வரலாறே பலஸ்தீன வரலாறு.

இவ்வாறு அல்லாஹ் அடுத்த இதழில் அதனை எதிர்பாருங்கள்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதங்களும் கீதையும் இறைவேதங்களாக இருக்க முடியுமா?

மலையாள மூலம்: ஷெய்க் முஹம்மத் காரகுன்னு   தமிழில்: ஜே. இஸ்ஹாக்

கேள்வி: இந்தியாவில் உள்ள இந்துமத வேதக் கிரந்தங்களை இறைவேதங்கள் என்று அங்கீகரிக்க முடியுமா?

மறுமொழி: வேதம் என்பதன் பொருள் கருத்து விஞ்ஞானம், அறிவு என்பதாகும். ஆயினும், ஆன்மிக அறிவு என்பதே அதன் பிரதான கருத்தாகும். வேதங்கள் மனிதர்களால் உருவாக்கப்பட்டவை அல்ல என்றே நம்பப்படுகின்றது. மாறாக, அவை இறைவனால் உருவாக்கப்பட்டன என்று சில மத அறிஞர்கள் கருது கின்றனர். ஆயினும், வேதங்கள் இறைவனிடமிருந்து அருளப்பட்டவை என்பதற்கு எந்த ஆதாரமும் இந்த வேதங்களில் காணப்படவில்லை. இவ்வாறு எந்த இந்துவேதக் கிரந்தங்களும் கூறவுமில்லை.

வரலாற்றில் வாழ்ந்து சென்ற எல்லா மனித சமூகங்களுக்கும் இறைதூதர்கள் அனுப்பப்பட்டார்கள் என்றும் அவர்கள் இறைதூதை அந்த மக்களிடம் எடுத்துக் கூறினார்கள் என்றும் குர்ஆன் கூறுகிறது. எனவே, ஆரியர்களிடத்திலும் இறைதூதர்கள் அனுப்பப் பட்டிருக்க வேண்டும். அவர்கள் இறைதூதை அந்த மக்களிடத்தில் சமர்ப்பித்திருப்பார்கள். எனவே, இந்து வேதக் கிரந்தங்களில் உள்ளவை இறைதூதின் செய்தி களாக இருக்கக் கூடும் என்ற சாத்தியப்பாட்டை முழுமையாக நிராகரிப்பதோ புறக்கணிப்பதோ முறையல்ல. அவற்றின் மூல ஊற்றுக்கள் இறைதூதர்களின் செய்தி களாக இருந்திருக்க முடியும்.

ஆயினும், இன்று கிடைக்கப்பெறும் ரிக், யஜுர், சாமம், அதர்வம் ஆகிய நான்கு இந்து வேதங்களை இறைவேதங்களாகக் கருத முடியாது. இவை மனிதர் களின் இடைச்செருகல்களுக்கு உட்பட்டு இவற்றின் மூல போதனைகள் திரிபடைந்து போயுள்ளன. இதனால் மனிதர்களால் உருவாக்கப்பட்டவை அல்ல என்ற நிலையை அவை இழந்து விட்டன.

இந்து மதத்தைச் சேர்ந்த இந்து வேதங்களை விசுவாசிக்கின்ற இந்துமத அறிஞர்கள் இந்த விடயத்தை தமது நூல்களில் தெளிவாக்கியுள்ளனர். கலாநிதி ராதா கிருஷ்ணன் எழுதுகிறார்:

"ஆரியர்கள் இந்தியாவுக்கு வருகை தந்தபோது தமது பூர்வீக பூமியிலிருந்து தாம் மிகவும் பெறுமதிமிக் கவையாகக் கருதிய தெய்வீக கவனங்களைத் தம்மோடு எடுத்து வந்தனர். தாம் வந்து சேர்ந்த புதிய தேசத்தின் அதிகமான மக்கள் பல்வேறு தெய்வங்களை வழிபட்டு வந்தை அவர்கள் கண்டனர். எனவே, தமது மதக் கோட் பாடுகளைப் பாதுகாத்து வைக்க வேண்டும் என்ற உணர் வினால் இவற்றை சேகரித்து வைத்தனர். இக்கருத்தே பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

அதர்வ வேதத்திற்கு நீண்ட காலமாக வேதம் என்ற அந்தஸ்து வழங்கப்படவில்லை. ரிக் வேதத்திற்கு அடுத்ததாகவே இதன் அந்தஸ்து இருக்கிறது. ரிக் வேதத்தைப் போலவே வெவ்வேறு தனியான நிகழ்வு களின் தொகுப்பாக இது இருக்கிறது. இந்த வேதம், பின்னர் உள்ள காலப்பகுதியில் வாழ்ந்த மக்களின் சிந்தனை மனோபாவத்தைப் பிரதிபலிக்கின்றது. புதிய தேசத்தின் புதிய கடவுள்களையும் தேவதைகளையும் உள்ளடக்கி அவற்றோடு சமரசம் செய்து தாம் அடக்கி யாள முற்பட்டவர்களின் நம்பிக்கைகளையும் நம்மோடு சேர்த்துக் கொண்டனர்."

(பாரதீய தத்துவம்: மாத்ருபூமி பப்ளிகேஷன்ஸ், கோழிக்கோடு, பக்கம்: 44-46)

கடவுள் பற்றிய கோட்பாடு வேதங்களில் பலமான மாற்றங்களுக்கு உட்பட்டது என்று கலாநிதி ராதா கிருஷ்ணன் கூறுகிறார்:

"ரிக் வேதத்தில் 10,472 பாடல்களும் 1,017 சூக்தங்களும் 8 அஷ்டகங்களும் 10 மண்டலங்களும் உள்ளன. பத்தாம் மண்டலம் பிற்காலத்தில் சேர்க்கப் பட்டதாகத் தெரிகிறது. வேதப் பாடல்கள் உருவான போது அந்தக் காலப் பகுதியில் இருந்த சிந்தனையின் தாக்கம் அதில் பிரதிபலிப்பதைக் காண முடியும். ஆதியில் இருந்த பக்திபூர்வமான இயல்பு மாறி பிற்காலத்தில் ஏற்பட்ட தோஷம் கலந்த சிந்தனைகள் இவற்றில் ஊடுருவி விட்டன என்று தோன்றுகிறது. படைப்புக்களின் ஆரம்பம் பற்றிய விடயங்களில் இக்குழப்பமே தெளிவாகப் புலப்படுகிறது. இதனுடன் சூனிய விவாதங்களுடன் அதர்வ வேத காலத்தில் உருவாக்கப் பட்ட மூட மந்திரங்களும் இதில் சேர்ந்துள்ளன. வேத கால ஆரியர்களின் கைகளில் பாதுகாக்கப் பட்ட பாடல்களில் பிற்காலத்தில் நுழைந்த மூட நம்பிக்கைகள் இந்த பத்தாவது மண்டலத்தில் சேர்ந் திருப்பது அந்த சமகால மக்களின் சமய நம்பிக்கை களினால் ஆரியர்கள் ஆட்கொள்ளப்பட்டிருந்தார்கள் என்பதையே காட்டுகிறது." (மேற்படி நூல் பக்கம்: 47)

இறைவேதமென்பதற்குப் பொருத்தமில்லாத சாதி வேறுபாடு என்னும் கோட்பாடு ரிக் வேதத்திலும் நுழைந்து விட்டிருப்பதைக் காண முடியும்.

'பிராஹ்மணோஸ்ய முகமாஸீத் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாஹூ ராஜன்ய: க்ருத:
ஊரு ததஸ்ய யத்வைஸ்ய:
பத்பியாம் சூத்ரோ அஜாயத" (ரிக் வேதம் 10:90:12)

பொருள்: கடவுளின் முகத்திலிருந்து பிராமணர்களும் அவனின் கரங்களிலிருந்து சத்திரியர்களும் தொடையிலிருந்து வைசியர்களும் பாதங்களிலிருந்து சூத்திரர்களும் பிறந்தனர்.

ரிக் வேதத்தில் இரண்டாம் பாகத்திற்கான அறிமுகத்தில் எம்.வி. கிருஷ்ணஸ்வாமியர் கூறுகிறார்:

"வேதங்களின் பூரணமான பகுதிகள் இன்று கிடைக்கக் கூடியதாக இல்லை. கிடைக்கக்கூடியவற்றில் பல பிற்கால சேர்க்கைகளாக உள்ளன. மேலும் அபத்தமான கருத்துக்களும் சிக்கலான கருத்துக்களும் உள்ளடங்கியுள்ளன."

கலாநிதி எஸ். ராதா கிருஷ்ணன் தனது Indian Religions என்ற நூலில் பின்வருமாறு கூறுகிறார்:

"வேதங்கள் தவறுகளுக்குட்பட்டவையாகவோ எல்லா வற்றையும் உள்ளடக்கியதாகவோ இல்லை."

(பக்கம்: 22)

ஆச்சாரியர் நரேந்திர பூஷன் எழுதுகிறார்:

"படிப்படியாக பல்வேறுபட்ட நூல்களும் கிளைகளும் உருவாகி பின்னர் அவை ஒன்றுபட்டுக் கருங்கின. சில பிராமணங்களை வேதத்தின் உட்படுத்தின. பிராமணங்கள் வேத சூத்திரங்களுடன் ஒன்றாகக் கலந்தபோது பிராமணர் பின்னர் அமைந்த மீள வரைபுக்கு வேண்டி வந்தது. பிராமணர் வேதத்தைப் பிரித்தெழுதியதாகக் கூறப்படுவது இக்காரணத்தினாலாகும். வேத சூத்திரங்களுடன் பிராமணியக் கொள்கைகள் கலந்திருப்பதனால் தூய வேத வசனங்களை அடையாளம் காண்பது கடினமான ஒன்றாக மாறிய ஒரு காலம் இருந்தது என்பதை இதிலிருந்து நாம் புரிந்து கொள்கின்றோம்."

(வேத இலக்கிய வரலாறு பக்கம்: 51 - 53)

ரிக் வேதம் பத்தாம் மண்டலத்தின் பத்தாவது சூக்தத்தில் வருகின்ற ஒரு சம்பவம் தெய்வீக வேதம் ஒன்றுக்கு முற்றிலும் பொருத்தமற்றதாகும். இந்த சூக்தத்தில் ஒரு பெண் தனது சகோதரனைத் தன்னோடு உறவாக வாழ்ந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கிறாள். அவளின் மொழியும் ஆசை வார்த்தைகளும் ஒரு தெய்வீக நூலுக்கு முற்றிலும் ஒவ்வாதவையாக உள்ளன.

இதேபோல் சூரிய சந்திர கிரகணங்கள் குறித்து ரிக் வேதத்திலும் அதர்வ வேதத்திலும் வந்துள்ளவை முற்றிலும் பிழையானவையாகவும் அறிவுக்கு முரணானவையாகவும் உள்ளன. எனவேதான் பிரசித்திபெற்ற தலைசிறந்த இந்து மத அறிஞர்கள் பலர் இத்தகைய அபத்தமான விடயங்கள் வேதத்திலிருந்து நீக்கப்பட வேண்டும் என்று கூறுகின்றனர்.

சுவாமி நித்தியானந்த சத்யபாதி எழுதுகிறார்:

"அருவருப்பான படுகொலைகளை வேத மந்திரங்கள் அனுமதிப்பதுடன் அவை மிகவும் விரும்பப்படுபவை என்றும் குறிப்பிடுகின்றன. வேதத்தில் இவை கண்டு கொள்ளப்பட்டதனை எவரும் மறுக்க முடியாது. ஓர் இந்துமத அறிஞரைப் பொறுத்தவரை இத்தகைய அபத்தமான மந்திரங்களும் இந்துக்களின் புனித வேதத்தில் இருக்கின்றன எனக் கொள்வது மிகவும் வேதனை தரக் கூடிய ஒன்றாகும். ஆயினும் சிலர் வரலாற்று உண்மைகளைப் புறக்கணித்து இந்த மந்திரங்கள் நியாயமானவை என்று வாதிக்கிறார்கள். உண்மையில் இவை வேதங்களில் இருந்து அகற்றப்பட வேண்டியவையாகும். இவர்களின் இச்செயல் மன்னிக்கப்பட முடியாதது."

(அருவருப்பான படுகொலை, இந்திய மறுமலர்ச்சியின் வைரவரிகள் பக்கம்: 318, [illegible])

சுருங்கச் சொன்னால் இன்று வேதங்களை நம்புகின்ற இந்து பக்தர்கள்கூட இவ்வேத நூல்கள் முற்றிலும் தெய்வீகமானவை என்று வாதிப்பதில்லை. பல விடயங்கள் இவற்றோடு சேர்க்கப்பட்டுள்ளன. பல விடயங்கள் இவற்றிலிருந்து நீக்கப்பட்டுள்ளன. பல தலைமுறைகளுக்கு வேதங்கள் உட்பட்டுள்ளன. இதில் வியப்படைய ஏதுவுமில்லை. ஏனெனில், இந்த வேதங்களின் வரலாறு யாருக்கும் தெரியாது! அவை எந்தக் காலங்களில் அறிமுகமாகின என்பதில் பலத்த கருத்து வேறுபாடு உண்டு. கி.மு. 6000, கி.மு. 4500, கி.மு. 3000, கி.மு. 1500 என்று பல்வேறு அபிப்பிராயங்கள் உண்டு. ஆயினும் ஆரியர்கள் இந்தியாவுக்கு வந்த பின்னரே அவை நூலுருவாக்கப்பட்டன என்ற கருத்தில் அனைவரும் ஒன்றுபடுகிறார்கள். வேதங்கள் அருளப்பட்டதற்கும் அவை தொகுக்கப்பட்டதற்கும் இடையே உள்ள இந்த நீண்ட இடைவெளி காரணமாக அவற்றில் பல்வேறு புதிய விடயங்கள் சேர்வதற்கும் அவற்றின் கருத்துக்கள் மாற்றமடைவதற்கும் இடமுண்டாகியது.

கலாநிதி ராதா கிருஷ்ணன் எழுதுகிறார்:

"ஆரியர்கள் தம்மோடு எடுத்து வந்த நம்பிக்கைகளும் கிரியைகளும் இந்திய மண்ணில் வளர்ந்து நிலைத்து நின்றன. இந்தப் பாடல்கள் உருவாகி நூலுருப் பெறுவதற்கு ஒரு நீண்ட காலம் எடுத்திருக்க வேண்டும்."

(இந்தியத் தத்துவம் பாகம் 1 பக்கம்: 68)

வேதம் அருளப்பட்ட பண்டைய மொழி இன்று வழக்கில் இல்லை. வேதகால மொழியிலிருந்து இன்றைய சமஸ்கிருதம் வேறுபட்டதாகும். இந்த விடயத்தைப் பல்வேறு அறிஞர்கள் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். ஆச்சாரியர் நரேந்திர பூஷணும் இதில் உடன்படுகிறார்.

உலகில் வேறு எந்தக் கலப்புக்களில் இருந்தும் முற்றிலும் தூய்மையான ஒரு நூல் இருக்குமென்றால் அது புனித அல்குர்ஆன் ஒன்று மாத்திரமே ஆகும். மனிதத் தலையீட்டிலிருந்து அது முற்றிலும் பாதுகாக்கப்பட்டது. அருளப்பட்ட காலம் முதல் இன்றுவரை அதன் வரலாறு தெட்டத் தெளிவானதாகும். இந்தக் காரணத்தால் இன்று கிடைக்கக் கூடிய ஒரே ஒரு தெய்வீக நூல் அல்குர்ஆன் மாத்திரமே. ஆகும். அது முன்னைய எல்லா தெய்வீக நூற்களையும் உண்மைப்படுத்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறவழிப் போராளிகளின் சிங்கம்

## யூஸுப் பின் தஷ்பீன் (ரஹிமஹுல்லாஹ்)

(கடந்த இதழ் தொடர்)

முராபிதூன்களின் ஒருவராகத்தான் யூஸுப் பின் தஷ்பீன் தனது பயணத்தைத் துவங்குகிறார்.

சூழவிருக்கும் கோத்திரங்களை முராபிதூன்கள் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருகின்றனர். அப்துல்லாஹ் பின் யாஸீன் அக்கோத்திரங்களுக்கு தலைமைப் பொறுப்பை ஏற்கிறார். ஹி. 451இல் அப்துல்லாஹ் பின் யாஸீன் போரில் ஷஹீதானதையடுத்து தலைமைப் பதவியை ஏற்ற அபூ பக்ர் பின் உமர் தனது சிறிய தந்தையின் மகன் யூஸுப் பின் தஷ்பீனை படைத் தளபதியாகவும் மொரிதானியாவில் தனது பிரதிநிதியாகவும் நியமித்து விட்டு விக்கிரக ஆராதனையில் ஈடுபடும் கோத்திரங்கள் வாழும் சூடான் நோக்கிப் புறப்பட்டார். அபூ பக்ர் இல்லாத காலகட்டத்தில் மொரிதானியா, செனகல், டியூனீசியா, அல்ஜீரியா, மொரோக்கோ முழுவதையும் தனது ஆளுகைக்குக் கீழ் கொண்டு வந்த யூஸுப் மிகப் பெரிய மராகெச் (Marrakech) நகரத்தைக் கட்டியெழுப்பினார்.

15 வருடங்களுக்குப் பின் திரும்பி வரும் அபூ பக்ர் தனது சிறிய தந்தையின் மகன் யூஸுப் பின் தஷ்பீனின் அடைவு நிலைகளைக் கண்டு வியப்படைகிறார். பெரும் பிரதேசத்தை ஆளும் ஒரு கவர்னர்... காலாட்படைகள் இல்லாமல் ஓர் இலட்சம் குதிரை வீரர்களைக் கொண்ட ஒரு படையணி... தக்வாவின் மீது கட்டியெழுப்பப்பட்ட ஒரு பிரமாண்டமான நகரம்... மார்க்க அறிவும் இறையச்சமும் நிறைந்த, உலகைப் பற்றற்று துறவி போன்று வாழும் ஓர் ஆட்சியாளன்... இவற்றை யெல்லாம் கண்டு வியந்து திகைக்கிறார். உடனே முராபிதூன்களின் மூத்தவர்களை அழைத்து தனது ஆட்சிப் பொறுப்பை யூஸுப் பின் தஷ்பீனுக்கு கொடுப்பதாக பிரகடனப் படுத்துகிறார்.

"யூஸுபே, ஆட்சிப் பொறுப்புக்கு என்னை விட நீயே தகுதியானவன். நாடுகளைக் கைப்பற்றி அல்லாஹ்வின் தீனின் மீது மக்களை ஒன்றுபடுத்த உன்னால் முடியும். மனிதர்கள் இஸ்லாத்தில் நுழையும் இன்பம் மட்டும் எனக்குப் போதும். நான் இனிமேலும் அல்லாஹ்வின் அழைப்பாளனாக ஆபிரிக்காவின் எல்லைவரை செல்லப் போகின்றேன்" என உபதேசித்து விட்டு அல்லாஹ்வின் ஓர் அழைப்பாளனாக அபூ பக்ர் புறப்பட்டார்.

அப்துல்லாஹ் பின் யாஸீன் எனும் சாதாரண அறிஞரொருவரால் முன்னெடுக்கப்படும் ஒரு முயற்சியால் யூஸுப் பின் தஷ்பீன் மூலம் முராபிதூன்களின் பலமிக்க இராச்சியமொன்று கட்டியெழுப்பப்படுகிறது.

வட ஆபிரிக்க நாடுகளை ஒரே குடையின் கீழ் கொண்டு வந்ததன் பின் ஸ்பெய்ன் மீது கவனம் செலுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. முஸ்லிம்கள் தமக்குள் பிளவுபட்டு ஸ்பெய்ன் முழுதும் 22 சிற்றரசுகளைப் பிரிந்தமையால் கிறிஸ்தவர்களின் பலம் ஓங்கத் துவங்கியது. அவர்களின் கெடுபிடிகள் அதிகரிக்கின்றன. 6ஆம் அல்போன்ஸோ அப்போதைய கிறிஸ்தவர்களின் மன்னனாக இருந்தான். சிற்றரசுகள் வரி செலுத்த மறுத்ததனால் கோபமுற்ற அல்போன்ஸோ, அவற்றுக்கு எதிராக படை யெடுக்க ஆயத்தமானான். முஸ்லிம்களை ஸ்பெய்னிலிருந்து துடைத்தெறிந்து விட திட்டமிட்டான். இந்நிலையில் யூஸுப் பின் தஷ்பீன், ஸ்பெய்னின் சிற்றரசுகளின் நிலையைவிட்டு வெறுப்புற்றிருந்தபோதும் ஸ்பெய்னில் தமது சகோதர முஸ்லிம்களின் இருப்புக்கே அச்சுறுத்தல் வந்தபோது 6ஆம் அல்போன்ஸோவுக்கு எதிராக தனது 80ஆவது வயதில் படையெடுக்க ஆயத்தமானார்.

முஸ்லிம்களின் பலவீனத்தைப் பயன்படுத்தி அவர்களைத் துடைத்தெறிந்து கிறிஸ்தவத்தை நாடு முழுவதும் பரப்ப வேண்டும் என்று வெறி பிடித்த 6ஆம் அல்போன்ஸோ முராபிதூன்களின் வருகை பற்றி கேள்வியுற்றதும் அச்சமடைந்தான். "இஸ்லாத்தை ஏற்றுக் கொள் அல்லது தோல்வியடைந்தவனாக வரி செலுத்து அல்லது போருக்கு ஆயத்தமாகு" என்று யூஸுப் பின் தஷ்பீன் அல்போன்ஸோவுக்கு கடிதம் எழுதினார்.

அல்போன்ஸோ பெருமளவு ஆயுதபலத்தால் ஐரோப்பா முழுவதையும் படை திரட்டினான். பெருந் தொகையான சிலுவைப் போராளிகள் அவனது அழைப்பிற்கு பதிலளித்தனர். ஸஹ்லா எனும் இடத்தில் போர் வீரர்களும் இரு படைகளும் சந்தித்துக் கொண்டன. போர் துவங்குவதற்கு முன் அல்போன்ஸோ யூஸுப் பின் தஷ்பீனுக்கு தூதனுப்பினான்.

"நாளை வெள்ளிக்கிழமை, முஸ்லிம்களின் பெருநாள் தினம் என்பதனால் அத்தினத்தில் நாங்கள் போரிடுவதில்லை; சனியும் ஞாயிறும் யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்களின் பெருநாட்கள் என்பதனால் அத்தினங்களிலும் நாங்கள் போரிடுவதில்லை. எனவே, நாங்கள் திங்கட்கிழமை போர் செய்வோம்."

போர்த் தந்திரங்களை அறிந்திருந்த யூஸுப், இச்செய்தி குறித்து மிகவும் அவதானமாக இருந்தார். படையணியை பூரண தயார் நிலையில் வைத்திருந்தார். வெள்ளிக்கிழமை காத்திருந்த அல்போன்ஸோ அங்கு மோதுவதற்கு காத்திருந்தது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளிக்கிழமை அதிகாலை தனது பிரமாண்டமான படையுடன் முஸ்லிம்களைத் தாக்கத் துணிந்த அல்போன்ஸோ, யூசுபின் படையணி பூரண தயார் நிலையில் இருப்பதைக் கண்டு வியந்து போனான். யூசுப் பின் தஷ்பீன் தனது படையை மூன்று பகுதிகளாகப் பிரித்திருந்தார். ஒரு பகுதி களைப்படையும் போது மற்றுமொரு பகுதி தாக்கும் விதமாக அமைத்திருந்தார்.

கொடூரமான யுத்தமொன்றுக்குப் பின், 80,000 குதிரை வீரர்களுடனும் இரண்டு இலட்சம் காலாட்படை வீரர்களுடனும் வந்த அல்போன்ஸோ, 500 குதிரை வீரர்களுடன் மட்டும் தனது ஒரு காலை இழந்த நிலையில் தப்பியோடினான். பெருந்தொகையான கிறிஸ்தவ வீரர்கள் கொல்லப்படுகின்றனர்; ஏனையோர் கைது செய்யப்படுகின்றனர். இப்பிரமாண்டமான வெற்றியின் மூலம் கிறிஸ்தவர்களின் உள்ளங்களில் முஸ்லிம்கள் பற்றிய அச்சம் மீண்டும் விதைக்கப்படுகிறது. வீழ்ச்சியின் விளிம்பில் இருந்த ஸ்பெய்ன் இன்னும் நான்கு நூற்றாண்டுகள் வரை பாதுகாக்கப்படுகிறது.

சாதனைகளால் நிரம்பிய நூறு ஆண்டுகளுக்குப் பின் ஹி. 500ஆம் ஆண்டு முஹர்ரம் மாதம் யூசுப் பின் தஷ்பீன் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் இவ்வுலகிலிருந்து விடைபெற்றுச் சென்றார்கள். இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்.

# ஜம்இய்யதுத் தலபாவின் வருடாந்தப் பொதுக் கூட்டம் – 2011

ஜம்இய்யதுத் தலபாவின் 2011ஆம் ஆண்டுக்கான வருடாந்தப் பொதுக் கூட்டம் கடந்த டிசம்பர் 17,18ஆம் திகதிகளில் கண்டி, மடவளை ஜமாஅத்தின் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்றது. அஷ்ஷெய்க் ரிழ்வான் (இஸ்லாஹி) தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிராந்திய நாஸிம்களின் கடந்த வருட வேலைத் திட்டங்கள் பற்றிய அறிக்கைகள், பொதுச் செயலாளரின் ஆண்டறிக்கை என்பன சமர்ப்பிக்கப்பட்டன.

மற்றும் ஜம்இய்யாவிலிருந்து ஜமாஅத்தில் அங்கத்துவம் பெறும் மூன்று அங்கத்தவர்களின் பிரியாவிடை நிகழ்ச்சி, புதிய நிர்வாகத் தெரிவு மற்றும் கலை நிகழ்ச்சிகள் என்பனவும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் ஜமாஅத்தின் அங்கத்தவரும் ஜம்இய்யாவின் முன்னாள் மத்திய சபை உறுப்பினருமான சகோதரர் ஏ.எம். ஜாபிர் (B.sc) கலந்து கொண்டு தனது அனுபவங்கள் மற்றும் தமது காலப் பிரிவில் சமூக மட்டத்தில் எதிர்கொண்ட சவால்கள் என்பவற்றைப் பகிர்ந்து கொண்டதோடு பல்வேறு ஆக்கபூர்வமான கருத்துக்கள், ஆலோசனைகளையும் முன்வைத்து ஜம்இய்யாவின் எதிர்காலத் திட்டங்களுக்கு தம்மால் முடியுமான உதவிகளை நல்குவதாகவும் குறிப்பிட்டார்.

43 [illegible] அங்கத்தவர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வின்போது ஜம்இய்யதுத் தலபாவின் 2012ஆம் ஆண்டுக்கான மத்திய சபை தெரிவு செய்யப்பட்டது.

நாஸிம்: சகோதரர் எம்.என்.ஏ. முன்ஸிப்

பொதுச் செயலாளர்: அஷ்ஷெய்க் எஸ்.எம். ஸப்யான் (நளீமி)

நிதிச் செயலாளர்: சகோதரர் எப்.எம். பைஸல்

தேசிய ஒருங்கிணைப்பாளர்: அஷ்ஷெய்க் எம்.ஆர்.எம். ரிழ்வான் (இஸ்லாஹி)

ஊடகத்துறை மற்றும் பொது உறவுப் பகுதி (Media and Public Relation): அஷ்ஷெய்க் எச்.ஏ.ஏ. அப்துல் ஹலீம் (நளீமி)

துறைசார் கல்வி (Professional Education): அஷ்ஷெய்க் என்.எம். இர்பான் (இஸ்லாஹி)

பல்கலைக்கழக கல்விப் பகுதி (University Education): சகோதரர் அஹமத் இப்றாஹீம்

பாடசாலைக் கல்விப் பகுதி (School Education): சகோதரர் எம்.ஐ.எம். அஸ்ரி

ஷரீஆத்துறை: அஷ்ஷெய்க் ஏ.ஜே.எம். ஸிஹான் (நளீமி)

மத்திய பிராந்திய நாஸிம்: சகோதரர் இர்பான்

மேற்குப் பிராந்திய நாஸிம்: சகோதரர் எம்.ஆர்.எம். ரிம்ஸான்


வடமேற்குப் பிராந்திய நாஸிம்: சகோதரர் எச்.எம்.எம். ஹாரிஸ்

கிழக்குப் பிராந்திய நாஸிம்: அல்ஹாபிழ் அஷ்ஷெய்க் றஸ்லான் (நளீமி)

இறைவனே!
[illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1. கஃபாவை முதல் முதலாகக் கட்டிய நபி யார்?
இப்றாஹீம் (அலைஹிஸ்ஸலாம்)

2. கஃபதுல்லாஹ் எப்போது கிப்லாவானது?
நபியவர்கள் மதீனா சேர்ந்து இரு வருடங்களில்

3. கஃபதுல்லாஹ் எத்தனை முறை புதுப்பிக்கப்பட்டது?
10 முறை

4. எந்த ஆண்டில் கஃபா இறுதியாகப் புதுப்பிக்கப்பட்டது?
1999இல்

5. கஃபாவுக்கு முதன் முதல் திரைபோட்டவர் யார்?
துபை என்பவர்

6. கஃபாவிலுள்ள சிறப்பான கல்லின் பெயர் என்ன?
ஹஜருல் அஸ்வத்

7. கஃபாவுக்குரிய வேறு பெயர்கள் எவை?
ஹரம் ஷரீப், பைத்துல்லாஹ், மஸ்ஜிதுல் ஹரம்

8. ஹஜருல் அஸ்வத் கல்லின் அளவு என்ன?
நீளம் 20.5 செ.மீ, அகலம் 18 செ.மீ

9. கஃபாவின் (ஹரம் ஷரீபின்) தலைவாயில்கள் எத்தனை?
நாற்பத்தாறு (46)

10. கஃபதுல்லாஹ்வின் அருகிலுள்ள குன்றின் பெயர் என்ன?
அபூ குபைஸ்

11. கஃபாவின் சிறந்த தலைவாயில் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
பாபுஸ் ஸலாம்

12. கஃபதுல்லாஹ் அமைந்திருக்கும் புண்ணிய பூமியில் அத்துமீறி நுழைந்து போர் தொடுப்பவர்களுக்கு எதிராக நடைபெற்ற யுத்தம் என்ன?
ஹர்புல் பிஜார்

13. கஃபாவை விட்டு வெளியேறும் வழி எவ்வாறு அழைக்கப்படுகிறது?
பாபுல் விதாஃ

14. 'தவாபுல் விதாஃ' எப்போது நிறைவேற்றப்படும்?
கஃபாவை விட்டு ஊருக்குப் புறப்படும்போது

15. கஃபா என அப்பெயர் ஏற்பட்டதன் காரணம் என்ன?
சதுர வடிவில் அமைந்திருப்பதனால்

16. கஃபாவைப் போர்த்துவதற்கு உபயோகிக்கும் போர்வை எங்கிருந்து மக்காவுக்கு வருகின்றது?
எகிப்திலிருந்து

17. கஃபதுல்லாஹ்வுக்கு நேரே வானுலகில் உள்ள வணக்கஸ்தலத்தின் பெயர் என்ன?
பைதுல் மஃமூர்

18. கஃபாவின் போர்வை யாருடைய ஆட்சிக் காலத்தில் முதலில் கஃபாவிற்கு அனுப்பப்பட்டது?
எகிப்து அரசர் ஷஜ்ருத்தார் காலத்தில்

ஐ.எல்.எம். சப்வாதீன், பேருவளை

# பொய் ஒரு சாபம்

இத் தீய பழக்கமுடையவர்கள் சமுதாயத்தில் குழப்பத்தைத் தவிர வேறெதையும் செய்ய உதவமாட்டார்கள். மக்கள் அவர்களை 'உதவாக்கரை' என ஒதுக்கி விடுவார்கள்.

பொய் பேசுபவன் தன்னைத்தானே அழித்துக் கொள்ளும் ஒரு செயலையே செய்கிறான். மனிதனுடைய முன்னேற்றத்தைத் தடுக்கும் ஒரு முக்கிய செயலாக பொய் பேசும் பண்பு விளங்குகிறது. இது நீண்ட காலம் வைத்தியம் செய்யப்பட வேண்டிய ஒரு வியாதியாகும்.

பொய் என்பது ஒரு முஃமினிடம் இருக்கக் கூடாத பண்பு. எனவேதான் இறை தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் இப்படிக் கூறினார்கள்:

"ஒரு முஃமினிடம் எல்லாத் தீமைகளும் இருக்கலாம். ஆனால், அவனிடம் பொய்யும் நேர்மையின்மையும் இருக்கக் கூடாது." (அஹ்மத்)

பொய் சொல்கின்ற ஒருவன் அந்தப் பொய்யை எவ்வளவு தூரத்திற்குப் பரப்புகின்றானோ அந்தத் தூரத்தின் அளவிற்கு அவனது பாவத்தின் அளவை வளர்த்துக் கொள்கிறான். ஆகவே, பொய் பேசுபவர்கள் மிகக் கடுமையான தண்டனைகளை அனுபவிப்பார்கள் என்பதில் சந்தேகம் கிடையாது.

எனவே, நாம் இக்கொடிய பாவத்திலிருந்து விமோசனம் பெற்றவர்களாக வாழ்வதற்கு முயற்சிப்போம்! அதற்காக இறைவனை இறைஞ்சுவோம்!


றாஷித் பின் மன்ஹுர்தீன், ஸாஹிறா கல்லூரி, மாவனெல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகம் உயிரற்றுக் கிடக்குதடா

மனிதம் விழிக்கவே
மறுமை நெருங்குது
மனங்களை தூய்மைப்படுத்திடவே
முஹர்றமும் வந்தது



மனிதனே!
இன்னும் உறக்கமா?
விழிக்க மாட்டாயா?
உன் உறைவிடம் தேடி
உலகம்
உயிரற்றுக் கிடக்குதடா!

மிப்ரா மஹீன். தரம்- 12, களுத்துறை மு.ம.ம.வி.

## ஸதகதுல் ஜாரியா

"ஒரு மனிதன் மரணத்திற்குப் பின் அவனது அமல்களில் ஸதகதுல் ஜாரியா, பயன் தரும் கல்வி, பெற்றோருக்காகப் பிரார்த்திக்கும் நேர்மையான (ஸாலிஹான) பிள்ளைகள் ஆகிய மூன்றையும் தவிர மற்றவை எல்லாம் செயலற்றவை ஆகி விடுகின்றன." (முஸ்லிம்)

ஒரு முஸ்லிமின் மரணத்தோடு அவரது செயல்கள் முற்றுப் பெறுகின்றன. நற்செயல்கள் செய்து நன்மையைத் தேடிக் கொள்வதும் இயலாமல் ஆகிவிடுகின்றது. எனினும், அவர் உயிரோடு இருந்த காலத்தில் செய்த நற்செயல்களில் சில மரணத்திற்குப் பின்பும் தொடர்பாக, எந்நோக்கத்துடன் அச்செயல் நிறைவேற்றப் பட்டதோ அந்நோக்கங்கள் நிறைவேறிக் கொண்டு இருக்கும் காலமெல்லாம் அவர் மரணமடைந்த பின்னரும் நன்மைகள் சேர்ந்து கொண்டிருக்கும்.

உதாரணமாக பள்ளிவாசல்கள், மத்ரஸாக்கள், மக்கள் குடிநீர் பெற தோண்டப்பட்ட கிணறுகள், மருத்துவ மனைகள், அநாதை இல்லங்கள், தர்ம ஸ்தாபனங்கள், பயன் தரும் விஞ்ஞான கண்டுபிடிப்புகள்... போன்றவை யாவும் இவற்றுள் அடங்கும் என இஸ்லாமிய அறிஞர் கள் குறிப்பிடுகின்றனர்.

-ஷரீப், ரஹ்மத்புரம்-

## வினா-விடைப் போட்டி-44

வினாக்கள்

01. 'மிஃதாஹ் தாருஸ் ஸஆதா' எனும் நூலின் ஆசிரியர் யார்?
02. அல்குர்ஆனில் முதலாவது இறக்கப்பட்ட வசனம் எதன் அவசியத்தை வலியுறுத்துகிறது?
03. மூத்தவர்களை மதிக்காதவர் மற்றும் சிறியோருக்கு இரக்கம் காட்டாதவர் பற்றி நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் சொன்னது யாது?
04. முபஸ்ஸிரீன்களின் (குர்ஆன் விரிவுரையாளர்களின்) முன்னோடி எனும் சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்ட நபித்தோழர் யார்?
05. யூதன் ஒருவனால் அநீதியிழைக்கப்பட்ட ஒரு முஸ்லிம் பெண்மணி 'வா முஃதஸிமா' என அபயக் குரல் எழுப்பியபோது அப்பெண்மணியை அக்கால கலீபா பாதுகாத்தார். அந்தக் கலீபா யார்?
06. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மரணிக்கும் தறுவாயில் இடம்பெற்ற யுத்தத்திற்கு தலைமை தாங்குவதற்கு யாரை நியமித்தார்கள்?
07. ஆரம்ப காலத்திலிருந்தே இஸ்லாத்தின் எழுச்சிக்காக துணைநின்ற உத்தமர்களை அல்குர்ஆன் எவ்வாறு அழைக்கிறது?
08. இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் (றஹிமஹுல்லாஹ்) எப்போது பிறந்தார்கள்?
09. [illegible] என்போர் யார்?
10. மாலைதீவின் ஜனாதிபதி யார்?

(நடந்த இதழ் போட்டியில் வெற்றிபெற்றவர்களின் விபரம் பக்கம் 58ல் பார்க்கவும்)

உங்கள் விடைகளை ஜனவரி 24ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வையுங்கள்.

**சிறுவர் பூங்கா**
அல்ஹஸனாத்
77, தெமட்டகொட வீதி,
கொழும்பு-09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் இமாம் இப்னு தைமியா

## வாழ்வும் பணியும் ஓர் ஆய்வுக் குறிப்பு (பகுதி 3)

அஷ்ஷெய்க் ஏ.ஸி. அகார் முஹம்மத் (நளீமி)
பிரதிப் பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா

### ஹதீஸ் துறை

இமாம் அவர்களுக்கு இஸ்லாமிய நீதியியல் எனும் ஹதீஸ் அறிவிப்புக் கலையில் அற்புதமான அறிவு இருந்தது. அது போலவே ஸஹாபாக்களின் தீர்ப்புகளையும் அவர் அறிந்து வைத்திருந்தார். மேலும் தாபிஈன்களின் கருத்துக்களையும் நன்கு தெரிந்து வைத்திருந்தார். எனவே, சட்டத் தீர்ப்புகளின்போது சட்ட வசனங்களையும் ஸஹாபாக்களின் தீர்ப்புகளையும் துணையாகக் கொள்வது அவருக்கு இலகுவானதாக இருந்தது. பொதுவாக இமாம் அஹ்மத் தனது தீர்ப்புகளுக்கு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் வார்த்தைகளையே முதலில் நாடுவார். அடுத்த நிலையில் ஸஹாபாக்களின் தீர்ப்புகளை அணுகுவார். இறுதி அடுத்த நிலையில் தாபிஈன்களின் கருத்துக்களைக் கவனத்திற் கொள்வார். மேலோட்டப் பிரபல்யமான மாலிக், அவ்ஸாஈ போன்ற பிரபல புகஹாக்களின் கருத்துக்களையும் நோக்குவதுண்டு.

சட்டப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் இமாம் அவர்கள் கைக்கொண்ட இந்த அணுகுமுறையானது, அவர் தான் சுயமாக முடிவுகளை சொல்வதைத் தவிர்த்து தமக்கு முந்திய இஸ்லாமிய அறிஞர்களின் வழியில் நிற்பதில் எவ்வளவு தூரம் கவனமாக இருந்தார் என்பதைக் காட்டுகின்றது.

தனது பிக்ஹானது சமுதாயத்தில் பித்அத்கள் தோன்றுவதற்கு எள்ளளவேனும் துணை நிற்கக் கூடாது என்பதனை உத்தரவாதப்படுத்துவதற்காக 'அல்பிக்ஹுத் தக்தீரி' எனும் சட்டப் பிரச்சினைகளை அனுமானித்து கற்பனை செய்து அவற்றுக்குச் சன்மார்க்கத் தீர்ப்புகளைக் கூறும் அமைப்பைத் (Speculation) தவிர்த்தார். இதனால் அதுவரை நடக்காத ஒரு பிரச்சினைக்கோ நடைமுறையில் இல்லாத பிரச்சினைக்கோ தீர்ப்புச் சொல்ல இமாம் அஹ்மத் தயாராக இருக்கவில்லை.

இமாம் அஹ்மத் தனது பிக்ஹை சட்ட வசனங்களுடனும் தூய இஸ்லாமிய அறிஞர்களின் கருத்துக்களுடனும் கருத்திற் கொண்டமையை வைத்து அவரது பிக்ஹு தேக்கமுற்ற ஒன்றாகவும் அன்றாட வாழ்க்கையுடன் தொடர்பற்ற ஒன்றாகவும் கருதுவது பிழையானதாகும். ஏனெனில், அவர் இபாதத்துகளிலேயே (வணக்க வழிபாடுகள்) 'நஸ்' எனும் சட்ட வசனங்களிலும் ஸஹாபாக்களின் முன்மாதிரிகளிலும் சார்ந்து நிற்கின்றார். இவ்விடயங்களில் சொந்த ஆய்வுகளுக்கோ ஒப்புமைகளுக்கோ இடமில்லை என்பதும் கவனிக்கத்தக்கதாகும்.

ஆயினும், முஆமலாத் எனும் கொடுக்கல்-வாங்கல் முதலான லௌகீக விவகாரங்களில் இமாம் அஹ்மதின் நிலைப்பாடு மிகவும் பரந்ததாகவும் நெகிழ்வு கொண்டதாகவும் அமைந்தது. அடிப்படையில் அவை அனைத்தும் அனுமதிக்கப்பட்டவை அல்லது செல்லுபடியானவையாகும். ஒன்றை விலக்குவதற்கு அதற்கு உறுதியான 'நஸ்' ஆதாரம் தேவை என்பது அவரின் பொதுவான அணுகுமுறை. இந்த வகையில் 'நஸ்' எனும் சட்ட ஆதாரத்தையும் 'கியாஸ்' எனும் ஒப்புவமை காரணத்தையும் அடிப்படையாகக் கொண்டு ஏனைய பிற மத்ஹபுகளை விட முன்னோர் வழிமுறையில், முஆமலாத் அமைப்பில் ஹன்பலி மத்ஹப் மிகவும் விரிந்ததாகவும் தாராளத்தன்மை கொண்டதாகவும் விளங்கியது.

'நஸ்'ஸோ, 'அஸரோ' கிடைக்காதபோது 'மஸ்லஹா' எனும் பொதுநலனை அடிப்படையாகக் கொண்டு இமாம் அஹ்மத் தீர்ப்புகள் வழங்கிய சந்தர்ப்பங்களும் உண்டு என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். 'மஸ்லஹா'வை சட்டத் தீர்ப்புகளின்போது கவனத்திற் கொள்ள முடியும் என்பதற்கு ஷரீஆ ஆதாரங்கள் இருப்பதை இமாம் அஹ்மத் நன்கு புரிந்து வைத்திருந்தார். ஆயினும், இமாம் மாலிக் மஸ்லஹாவுக்குக் கொடுத்த அழுத்தத்தை இவர் அதற்கு வழங்கவில்லை. நஸ்ஸுகளையும் அவற்றுக்குச் சரிசமமாக மஸ்லஹாவைக் கருதுவதை இமாம் அஹ்மத் சரிகாணவில்லை.

ஹன்பலி பிக்ஹானது அக்ஷராஜிக் காலம் முதல் தாராளத்தன்மையும் பொதுநலனை கவனத்திற் கொண்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது. அவ்வாறு இலக்குகள், முஸ்லிம்களுக்கு வழங்கும் தீர்ப்புகள் அவர்களை அவர் தம் கால வழிகள், முறைகள், காரணிகள் ஆகியவற்றுக்குள் வழங்கும் திறமையை ஹன்பலி மத்ஹப் கொண்டுள்ளது. இது இம்மத்ஹபை காலத்தோடு உயிரோட்டமுள்ளதாகவும் விளங்க பெரிதும் துணை புரிந்துள்ளது.

எனவே, ஹன்பலி பிக்ஹு என்பது பொதுவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹன்பலிகளின் வழிமுறை சார்புடைய ஒரு சிந்தனை மரபாக இருப்பினும் அதற்கு அடிப்படையாக அமைந்த வேறுபட்ட மூலாதாரங்களின் காரணமாக ஒரு பக்கத்தில் தன்னுடைய தனித்துவம் வாய்ந்ததாக அமைந்தாலும் மறுபக்கத்தில் உடன்பாட்டுத் தன்மையுடையதாகவும் விளங்குகின்றது என்ற முடிவு பெறப்படுகின்றது.

## ஹன்பலி பிக்ஹின் சட்ட மூலாதாரங்கள்

ஹன்பலி பிக்ஹின் பொதுக் கண்ணோட்டம் மற்றும் சட்ட அணுகுமுறைகள் மேலே விளக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட விளக்கத்தின் ஒளியில் இமாம் அஹ்மத் சட்ட மூலாதாரங்களாகக் கொண்டவை எவை என்பது இங்கு நோக்கப்படுகின்றது.

இமாம் அஹ்மத் தனது சன்மார்க்கத் தீர்ப்புகளுக்கு ஐந்து மூலாதாரங்களை அடிப்படையாகக் கொண்டார் என இமாம் இப்னுல் கையிம் குறிப்பிடுகின்றார். அவையாவன:

01. நுஸூஸ்கள்: இவை குர்ஆன், ஸுன்னா சட்ட வசனங்களைக் குறிக்கும். 'நஸ்' இருக்கும்போது அதனை அடிப்படையாகக் கொண்டே இமாம் அஹ்மத் தீர்ப்புகளை வழங்குவார். நுஸூஸுக்கு முரணான முன்னைய அறிஞர்களின் (நபித் தோழர்கள்) தீர்ப்புகளை அவர் பொருட்படுத்துவதில்லை.

02. ஸஹாபாக்கள் (நபித் தோழர்களது) தீர்ப்புகள்: ஒரு விடயத்தில் ஸஹாபாக்களில் ஒருவருடைய தீர்ப்பு காணப்படும்போது அதற்கு முரணான மற்றொருவரின் ஏற்பையோ, விளக்கத்தையோ இமாம் அஹ்மத் அலட்டிக் கொள்வதில்லை.

03. ஒரு சட்டப் பிரச்சினை தொடர்பாக ஸஹாபாக்கள் மத்தியில் கருத்து வேறுபாடு நிலவி முரண்பட்ட கருத்துக்கள் காணப்பட்டால் அவற்றுள் குர்ஆன், ஸுன்னாவுக்கு மிக நெருக்கமான கருத்தை இமாம் அஹ்மத் தெரிவு செய்வார்.

04. மேற்குறித்த சட்ட மூலாதாரங்களில் ஒரு பிரச்சினைக்கான தீர்வு காணப்படாதபோது முர்ஸல், ழஈப் வகை ஹதீஸ்களை நாடுவது இமாம் அஹ்மதின் நிலைப்பாடாகும். இத்தகைய பலவீனமான ஹதீஸ்களை கியாஸைவிட பலமானதாக அவர் கருதினார். பலவீனமான (ழஈப்) ஹதீஸ்கள் எனும்போது நிராகரிக்கத்தக்க கடும் பலவீனமான ஹதீஸ்களையும் அவர் ஆதாரமாகக் கொண்டார் என்று கொள்ளலாகாது. ஏனெனில், அவர் ழஈப் ஆன ஹதீஸ்களில் கடும் பலவீனத்தைக் கொண்ட ஹதீஸ்களை நிராகரித்தார் என்பதே உண்மையாகும்.

05. கியாஸ்: நுஸூஸ், ஸஹாபாக்களின் தீர்ப்பு, முர்ஸல், ழஈப் ஆகிய எதுவுமே காணப்படாத வேளையில் இமாம் அஹ்மத் கியாஸை (ஒப்புவமை காணல்) அணுகி ஒரு பிரச்சினைக்கான சட்டத் தீர்ப்பைக் காண்பதற்கு முயல்வார். இது பற்றி அவர் பின்வருமாறு கூறுகின்றார்:

"நான் கியாஸைப் பற்றி இமாம் ஷாபிஈயிடம் வினவினேன். அதற்கு அவர் தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களிலேயே அது நாடப்படும்" என்றார்.

இவ்வாறு செல்வாக்குக் கூடிய பிக்ஹ் மரபொன்றை இவர் வழங்கியமைக்கு இரு பிரதான காரணங்கள் கூறப்படுகின்றன:

- இவர் இறுதிவரையில் தூய இஸ்லாமிய வழிமுறையைப் பேணுபவராக இருந்தமை. இதனால் முஃதஸிலாக்களுடன் முரண்பட்ட இவர் மூலக் காரணங்களிலேயே பெரிய சோதனையை அடைந்தார்.

- இவரிடம் போதுமானளவு நல்லாசான்கள் இருந்தமை. ஹதீஸ் துறையில் புலமை பெற்றவராக இவர் இருந்ததனால் பெருந்தொகையான ஹதீஸ்களை இவர் அறிந்து வைத்திருந்தார்.

இவற்றுடன் மேலே விளக்கப்பட்ட வாறு மஸ்லஹா (நலன்), ஸத்துத் தரீஆ (இலக்குகளுக்கு இட்டுச் செல்லும் வழிகள்) ஆகியவற்றையும் இமாம் அஹ்மத் தேவை கருதும்போது தனது சட்ட ஆய்வுகளுக்குத் துணையாகக் கொண்டுள்ளார்.

இஜ்மாஃ (ஏகோபித்த முடிவு)வைப் பொறுத்த வரை இமாம் அஹ்மத் ஸஹாபிகளின் இஜ்மாவை மட்டுமே ஏற்றுக்கொண்டமை அவதானிக்கப்படுகின்றது. ஸஹாபாக்களை அடுத்து வந்த காலங்களில் இஜ்மாஃ அடிப்படையிலான முடிவுகள் பெறப்படுவது சாத்தியமில்லை என்று அவர் கண்டமையே இந்நிலைப்பாட்டிற்குக் காரணமாகும். இஜ்மாஃ என்பது ஒரு குறிப்பிட்ட காலத்து உலமாக்கள் ஒரு மார்க்க விடயத்தில் ஏகோபித்த நிலைப்பாட்டைக் கொள்வதாகும். இந்த வகையில் ஒரு காலத்து உலமாக்கள் அனைவரையும் இனங்காண்பதும் குறித்த விடயம் தொடர்பாக அவர்கள் அனைவரது கருத்துக்களையும் அறிவதும் சாத்தியமற்றது என அவர் கருதினார்.

பொதுவாக இமாம் அஹ்மத் தனது பிக்ஹுக்கு அடிப்படையாகக் கொண்ட சட்ட மூலாதாரங்களை நோக்கும்போது அவை அனைத்தும் பெயரளவில் வேறுபட்ட போதும் இறுதியில் ஸுன்னாவில் போய் நிற்பதைக் காண முடியும். நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நபியின் ஆதிக்கமே இவரது பிக்ஹில் காணப்படுகின்றது. இந்த வகையில் இவரது பிக்ஹானது தூய இஸ்லாமிய அறிஞர்களின் வழிமுறையை அடிப்படையாகக் கொண்டு அமைந்ததாகும் என்ற முடிவுக்கு வரமுடிகின்றது. தொடர்ந்து இஜ்திஹாதில் ஈடுபட்ட விடயத்திலும் சரி, பிறரிடமிருந்து பெற்றுக் கூறிய தீர்ப்புகளிலும் சரி தூய இஸ்லாமிய அறிஞர்களின் விளக்கில் ஒளிரிய அவை அனைத்திலும் பளிச்சிட்டன. அவரின் இவ்வணுகுமுறை அவரது பிக்ஹை தேக்கமடைந்ததாக ஆக்கவில்லை. மாறாக, அதனை வளர்ச்சிக்குரியதாகவும் ஒளிமிக்கதாகவுமே அமைந்தது.

முடிவாக, இமாம் அஹ்மதின் அகீதா வழிமுறையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிக்ஹு சிந்தனையும் தொடர்ந்து வந்த தூய இஸ்லாமிய சிந்தனையாளர்களுக்கும் இஸ்லாமிய எழுச்சியாளர்களுக்கும் வழிகாட்டியாகவும் அமைந்தன என்பது ஒரு பேருண்மையாகும்.

## இமாம் அஹ்மத்- வாழ்க்கைச் சுருக்கம்

அபூ அப்தில்லாஹ் அஹ்மத் இப்னு முஹம்மத் இப்னு ஹன்பல் இப்னு ஹிலால் அஷ்ஷைபானி என்பது இமாமவர்களின் முழுப் பெயராகும். இவர் ஹிஜ்ரி 164இல் (கி.பி.780) பக்தாதில் பிறந்தார். இவர் அத்னான் அரபுப் பரம்பரையைச் சேர்ந்தவர். இவரது கோத்திரமான ஷைபானி வீரத்திற்கும் தியாகத்திற்கும் பேர்போன கோத்திரமாகும். பிரபல இஸ்லாமியத் தளபதி அல்முஸன்னா இப்னு ஹாரிதா இக்கோத்திரத்தைச் சேர்ந்தவராவார். இவரது குடும்பம் ஆரம்பத்தில் பஸராவிலும் பின்னர் குராஸானிலும் குடியேறி வாழ்ந்தபோதிலும் அஹ்மத் இப்னு ஹன்பல் பிறக்கும்போது பக்தாதில் வந்து குடியேறியிருந்தது. இமாம் அவர்கள் இளமையிலேயே தந்தையை இழந்தமையால் தாயின் பராமரிப்பிலேயே வளர்ந்தார்.

அன்று பக்தாத் உலகின் அறிவுத்துறை கேந்திரமாக விளங்கியது. அங்கு இக்காலத்தில் பல்துறை சார்ந்த மேதைகள் இருந்தார்கள். இமாம் அவர்களுக்கு ஹதீஸ் துறையிலேயே நாட்டம் ஏற்பட்டது. அன்று ஈராக்கில் ஷரீஆ சார்ந்த கலைகளைக் கற்பதில் இரு வழிமுறைகள் இருந்தன. ஹதீஸ் அறிவிப்பை விட சட்டத் தீர்ப்புகளைக் கண்டறிவதில் காரணகாரியத்தை அல்லது அல்ரஃயி முறையைக் கையாண்ட சட்ட அறிஞர்களின் (புகஹாக்கள்) வழிமுறை. சட்டத் தீர்ப்புகளைக் கண்டறிவதில் காட்டிய ஆர்வத்தை விட ஹதீஸ் அறிவிப்பு, மனனம் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்த முஹத்திஸீன்களின் (அஹ்லுல் ஹதீஸ்) வழிமுறை ஆகிய இரண்டுமே அவையாகும். இமாம் அஹ்மத் இரண்டாம் வழிமுறையைத் தெரிவுசெய்து கொண்டார். ஆரம்பத்தில் பக்தாத் வாழ் உலமாக்களிடம் ஹதீஸ் கலைகளைக் கற்றுக் கொண்ட அவர் பின்னர் மக்கா, கூபா, பஸரா, மதீனா, ஷாம், யமன் முதலான பிரதேசங்களுக்கும் சென்று அங்கிருந்த உலமாக்களிடம் கல்வி கற்றார். இமாம் ஷாபிஈ ஹிஜாஸிலிருந்து பக்தாதுக்குச் சென்றபோது அவரும் அங்கு சென்று அன்னாரின் அறிவினால் பயன் பெற்றார்.

இமாம் அஹ்மத் தனது நாற்பதாவது வயதில் ஹதீஸ், பிக்ஹு கலைகளைப் போதிப்பதில் ஈடுபடலானார். இக்காலத்தில் ஹதீஸ் கலையின் தலைமைத்துவம் இவரது கரங்களில் இருந்தது என்பர். இவரது புகழ் பக்தாதில் மட்டுமன்றி உலகின் ஏனைய பாகங்களுக்கும் பரவியது. உலகின் பல பிரதேசங்களிலிருந்தும் இவரிடம் கல்வி கற்பதற்காக மாணவர்கள் பெருந் தொகையில் வந்தனர். இவரது வகுப்புகளுக்கு சமுகமளிக்கும் மாணவர்களது தொகை சுமார் ஐயாயிரமாக இருந்தது என வரலாற்றாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இமாம் அஹ்மதை முன்னோடியாகக் கொண்டு உருவான ஹன்பலி மத்ஹப் ஈராக், பலஸ்தீன், பாரசீகக் குடாப் பிரதேசங்கள் முதலான இடங்களில் ஆரம்பத்தில் செல்வாக்குப் பெற்றிருந்தது. ஆயினும், நாளடைவில் அதன் செல்வாக்கு குன்றிவிட்டது. இந்நிலையில் 18ஆம் நூற்றாண்டில் தோன்றிய முஹம்மத் இப்னு அப்தில் வஹ்ஹாபின் இயக்கம் பரவியதைத் தொடர்ந்து அரேபியத் தீபகற்ப மக்கள் கூடுதலாக ஹன்பலி மத்ஹபைப் பின்பற்றத் தொடங்கினர்.

இப்னு தைமியா, அப்துல் காதிர் ஜீலானி முதலான மேதைகளும் ஹன்பலி மத்ஹபைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இமாம் அஹ்மத் முஃதஸிலாக் கொள்கையை ஏற்க மறுத்தமையாலும் அதற்கெதிராக தீவிரப் பிரசாரத்தில் ஈடுபட்டதாலும் கலீபா மஃமூனின் காலத்தில் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டார். கலீபா முதவக்கில் பதவியேற்கும் வரை சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். குறிப்பாக, கலீபா முஃதஸிமின் ஆட்சியின்போது கடுமையாக இம்சிக்கப்பட்டார். இருபத்தெட்டு மாதங்கள் இவ்வாறு சிறையில் அடைக்கப்பட்டு கசையடியும் கொடுக்கப்பட்டார். கலீபா முதவக்கிலின் காலத்தில் இமாம் அவர்களை கலீபா கண்ணியப் படுத்தியதோடு அவரது வகுப்புக்களை நடத்துவதற்கும் அனுமதி வழங்கினார். முஃதஸிலாக்களுக்கு மறுப்பளிப்பதற்கு கலீபாவினால் தெரிவு செய்யப்பட்ட உலமா குழுவிலும் அவர் இருந்தார்.

ஹிஜ்ரி 241ஆம் ஆண்டு (கி.பி. 855) இமாம் அஹ்மத் வபாத்தானார். இவரது ஜனாஸா தொழுகையில் எட்டு இலட்சம் ஆண்களும் அறுபதாயிரம் பெண்களும் கலந்து கொண்டதாக வரலாற்று நூல்களில் வருகிறது. ஜாஹிலிய்யாக் காலத்திலோ அல்லது இஸ்லாத்தின் பின்போ இத்தனை பெருந்தொகையினர் பங்குபற்றிய ஜனாஸா நடைபெற்றதாக நாம் அறிந்ததில்லை என இமாமவர்களின் ஜனாஸா பற்றி அப்துல் வஹ்ஹாப் அல்வர்ராக் கூறுகின்றார்.

இவர் எழுதிய நூல்களுள் பின்வருவன குறிப்பிடத்தக்கவையாகும்:

01. அல்முஸ்னத்

02. கிதாப் அஸ்ஸலாத்

03. கிதாப் அஸ்ஸுஹ்த்

04. கிதாப் அல்மனாஸிக் அல்கபீர்

05. கிதாப் அல்மனாஸிக் அஸ்ஸகீர்

06. அத்தாரீக்

07. அந்நாஸிக் வல்மன்ஸூக்

(57ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# STUDY IN UK

Handled by UK qualified Consultant

"Visit & Family Visa to UK and Newzealand can be arranged

- IELTS score only 4.0 required
- Financial sponsorship can be arranged
- Part time job opportunities
- Cheap course fees
- Admissions from A rated colleges
- Minimumum Qualification-GCE (O/L)



# SPOKEN ENGLISH WITH GRMMAR

UK VISA → A1 Level (Spouse/Partner) B2 Level (Student visa)

IELTS/KET

| | |
|---|---|
| Certificate in Ms Office 2007 | 1750/- |
| Diploma in Computer Studies | 2250/- |
| Diploma in Graphic Designing | 4250/- |
| Diploma in Web Designing | 6250/- |
| Internet & E-mail | 750/- |
| Diploma in computerize Accounting | 2750/- |
| Diploma in AutoCAD 2011 | 6150/- |
| Diploma in Computer Hardware | 2250/- |
| Diploma in Electronic Repairing | 7750/- |
| Diploma in Air Conditioning Repairing | 11750/- |

SDC Call : 011-76 380 79, 071- 42 41 879

No: 1, Perera Lane, Wellawatte.

# SPECIAL OFFER

Diploma in Mobile Phone Repairing

9000/- 6500/-

Free!

Hardware

Software Setup Installation, Unlocking, Flashing

Nti Box, Mx Key, SE tool, Ns Pro, Infinity GPG Dragon, Spiderman, Octopus

FULL TIME MON - FRI | PART TIME SUNDAY ONLY

M. R. M. Rizvi

SDC No :1, Perera Lane, Wellawatte. 0714 24 18 73

KANDY European College No: 344, Gampola Rd. Kandy. 0723 40 22 43




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூஹ் ஊதப்படுவது 4 மாதங்களிலல்ல; 42ம் நாளில்

ஆஷிர் அலி (இஸ்லாஹி)

ஆணின் விந்து பெண்ணில் செலுத்தப்பட்டு 24 மணி நேரங்களுக்குள், பலோப்பியன் குழாயினூடாக கருவறையை நோக்கி வந்துகொண்டிருக்கும் பெண்ணின் சினை முட்டையுடன் இணைந்து கருக்கட்டல் ஆரம்பிக்கின்றது. பின்னர் விந்தினதும் சினை முட்டையினதும் சேர்க்கையான அக்கலப்புத் துளி பலோப்பியன் குழாயினூடாக 6ஆம் நாளில் கருவறையை வந்தடைகிறது. இக்கலப்புத் துளியையே அல்குர்ஆன் 'நுத்பதுன் அம்ஷாஜ்' எனக் குறிப்பிடுகின்றது.

நுத்பதுன் அம்ஷாஜ் (نطفة أمشاج): "நிச்சயமாக நாம் மனிதனை (ஆண், பெண் இருவரின்) கலப்பான ஓர் இந்திரியத் துளியிலிருந்து படைத்தோம்." (76:2)

விந்துத்துளியைக் கலப்புத் துளியை Zygote என்கின்றது. கருவறையை நோக்கி வரும் வழியில் 4ஆம் நாளில் Zygote - Blastocyst என்ற ரூபமாக விருத்தியடைய ஆரம்பித்து 6ஆம் நாள் கருவறையை வந்தடைகின்றது. பின்பு அங்கு சுமார் 10 நாட்கள் 'நுத்பதுன் அம்ஷாஜ்' என்ற நிலையில் தங்கியிருக்கும். இந்தக் கரு நிலையையே அல்குர்ஆன், "குறிப்பிட்டதொரு (கால) அளவுவரை அதனைப் பாதுகாப்பான இடத்தில் அமைத்தோம்" (77: 21-22). "பின்னர் ஒரு பாதுகாப்பான இடத்தில் (கருவறையில்) நாம் அவனை இந்திரியத் துளியாக்கினோம்" (23: 13) என்கின்றது.

கருவறையை வந்தடைந்த 6ஆம் நாளில் இருந்து 16ஆம் நாள் வரை முறையே (சுமார் 10 நாட்கள்) Blastocyst 'நுத்பதுன் அம்ஷாஜ்' என்ற நிலையிலேயே இருக்கும். பின்பு 16ஆம் நாளிலிருந்து 23 அல்லது 24ஆம் நாள் வரை (சுமார் 8 அல்லது 9 நாட்கள்) கரு "அலகா" (علقة) Placenta என்ற நிலையில் வளர்ச்சியடையும். 23 அல்லது 24 ஆம் நாளுடன் அலகா என்ற நிலை பூர்த்திப் பெறுகின்றது. அதிலிருந்து இரண்டு நாட்களில் (24ஆம் நாள் முதல் 26ஆம் நாள் வரை) "அலகா" அவதானமாகத்தொரு மாற்றமடைந்து 'முழ்கா' (مضغة) என்ற கட்டத்தை அடைகின்றது.

முழ்கா அமைப்பைத் தொடர்ந்து கருவில் என்பு வளர்ச்சி ஆரம்பிக்கின்றது. 'இழாம்' (عظام) என்பது எலும்பைக் குறிக்கின்றது. இதனை அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

"பின்னர் அச்சதைத் துண்டை எலும்புகளாகப் படைத்தோம்." (23: 11)

என்பு வளர்ச்சி குறிப்பிட்டதொரு காலத்துக்குள் முற்றாகப் பூர்த்தியடைகின்றது என்று கூற முடியாது. ஏனெனில், ஒரு மனிதனின் என்பு வளர்ச்சியானது அவனது 20-25 வயது வரைக்கும் நீடித்துச் செல்கின்றது. கருவறையில் முளையத்தின் ஆரம்ப நிலைப்பாடான என்பு வளர்ச்சிக்கே நடைபெறுகின்றன. என்பு வளர்ச்சியினைத் தொடர்ந்து அவற்றைச் சூழ தசைகள் உருவாகின்றன. முளையத்தில் என்பு மற்றும் தசை உருவாக்கங்கள் சுமார் 15 நாட்களில் நடைபெறுகின்றன. இச்செயற்பாட்டினை அல்குர்ஆன் இவ்வாறு பிரஸ்தாபிக்கின்றது:

"பின்னர் அவ்வெலும்புகளுக்கு மாமிசத்தை அணிவித்தோம்." (23: 14)

இவ்வாறு பின்பு முளையமானது ஸூரா அல்முஃமினூனின் 14ஆம் வசனத்தில் குறிப்பிடப்படுவது போன்று புதிய வித்தியாசமானதோர் அமைப்புக்கு மாற்றப்படுகின்றது. இதனை அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான்:

"பின்னர் நாம் அதனை வேறு படைப்பாக (முழு மனிதனாக) உருவாக்கினோம். ஆகவே, படைக்கின்றவர்களில் மிக அழகானவனான அல்லாஹ் உயர்ந்தவன்." (23: 14)


உண்மையில், இக்கட்டத்தை அடையும்போது தான் முளையம் மனிதனை ஒத்த முக அமைப்பினைப் பெறுகின்றது. அதேபோன்று மேலே வேறு இடங்களில் உருவாக்கப்பட்டிருந்த மனித அமைப்பிலான முக உறுப்புகள் அவ்விடங்களை விட்டும் சரியான, பொருத்தமான இடங்களுக்கு மாற்றப்படுகின்றன. காதுகள் கழுத்துப் பகுதியிலிருந்து அதன் சரியான இடத்திற்கும், கண்கள் இருபக்க ஓரங்களிலிருந்து முன்னோக்கியும், அவ்வாறே மூக்கு, வாய் என்பனவும் அவற்றுக்குரிய இடங்களுக்கும் நகர்த்தப்பட்டு அவ்வவையான மனித முகத் தோற்றத்தைப் பெறுகின்றன. அடையாளம் காண முடியாத ஒரு தோற்றத்திலிருந்து அடையாளம் காண முடியுமான மனித முகத் தோற்றத்திற்கு மாற்றப்படுவதையும் இந்த 'அன்ஷஃனா' (أنشأنا) என்ற பதம் குறிப்பதாகக் கொள்ளலாம்.

மற்றுமொரு விடயம் இங்கு நோக்கத்தக்கது. ஆரம்ப வசனங்களில் பிரயோகிக்கப்பட்டு வந்த 'கலக்னா' (خلقنا) என்ற பிரயோகத்தை விட்டு இங்கு 'அன்ஷஃனா' என்ற பதம் பிரயோகிக்கப்பட்டுள்ளது. தப்ஸீர் அறிஞர்களினதும் ஹதீஸ் துறை அறிஞர்களினதும் கருத்துப்படி, அன்ஷஃனா என்பது ஜடமாக, சதைப் பிண்டமாக இருந்த அம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் அவதானித்த விஞ்ஞான ஆய்வுகளின்படி, 42ஆம் நாளில்தான் உடல் அவயங்களும் பாலுறுப்புகளும் ஒன்று சேர்க்கப்படுகின்றன என்பது தெளிவாகி விட்டது. இந்த நவீன கண்டுபிடிப்பையே மேற்படி ஹதீஸ் தெளிவுபடுத்துகின்றது. 42ஆம் நாளில் சிசுவின் உடல் அவயங்கள் ஒன்றுசேர்க்கப்பட்டு அச்சிசு மனிதத் தோற்றத்தைப் பெறும் அதேசமயம்தான் குறித்த வானவர் அச்சிசுவில் ரூஹை ஊதி இணைத்துவிடுகிறார். இதனை ஸூரதுல் முஃமினூனில் வருகின்ற 12 முதல் 14 வரையிலான வசனங்கள் தெளிவுபடுத்துகின்றன.



முளையத்தினுள் ஆன்மா (ரூஹ்) ஊதப்படுவதைக் குறிக்கிறது. அம் முளையம் ஏற்கனவே அசைவுறும் நிலையில் இருந்தாலும் ரூஹ் ஊதப்பட்ட பிறகுதான் அது சுயமாக அசையவும் செவியுறவும் பார்க்கவும் பேசவும் சிரிக்கவும் அழவுமான ஆற்றல்களைப் பெறுகிறது.

## வளர்ச்சிக் கட்டங்களின் கால அளவுகள்

இதுவரை நாம் அவதானித்த, தாயின் கருவறையில் நிகழும் சிசு வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்தினதும் கால அளவை சுருக்கமாகப் பார்ப்போம்.

- விந்தணுவும் சினை முட்டையும் பலோப்பியன் குழாயில் இணைந்து 6ஆம் நாளில் கருவறையை வந்தடைகிறது. (6 நாட்கள்)
- கருவறையை வந்தடைந்ததிலிருந்து 16ஆம் நாள் வரை கருப்பையின் உட்சுவரில் 'நுத்ஃபா' என்ற நிலையில் தங்கியிருக்கும். (10 நாட்கள்)
- 16ஆம் நாளிலிருந்து 24ஆம் நாள் வரை அலகா ஆக விருத்தியடைகிறது. (8 நாட்கள்)
- 24ஆம் நாளில் இருந்து 26ஆம் நாளுக்குள் அதிக மாற்றத்துடன் 'முழ்கா' ஆக மாறும். (2 நாட்கள்)
- என்புகளின் உருவாக்கமும் அவற்றுக்குத் தசை அணிவிக்கப்படுதலும் 16 நாட்களில் நடைபெறும். (16 நாட்கள்)

இந்த நாட்களைக் கூட்டிப் பார்ப்போம்.

6+10+8+2+16=42 நாட்கள்.

அப்படியாயின், தாயின் கருவறையில் ஒரு சிசு அதன் அடிப்படை அங்க உருவாக்கம் யாவும் பூரணமடைய 42 நாட்கள் எடுக்கிறது. இதனை இன்றைய நவீன மருத்துவ விஞ்ஞானம் ஆச்சரியமூட்டும் துல்லியமாகப் படம்பிடித்துக் காட்டுகிறது. ஆனால், அற்புதம் அதுவல்ல. இக்கண்டுபிடிப்பு இற்றைக்கு 14 நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே, எழுத வாசிக்கத் தெரியாத 'உம்மி' நபியால் கூறப்பட்டமைதான் அற்புதம். மேலும், நுணுக்குக்காட்டி போன்ற வேறு சாதனங்களோ கண்டுபிடிக்கப்பட்டிராத அக்காலத்தில் 42 நாள் என்ற கால அளவு நபியவர்களால் துல்லியமாகக் கூறப்பட்டுள்ளது.

## நவீன விஞ்ஞானத்தை உண்மைப்படுத்தும் நபிகளாரது பொன்மொழி

முஸ்தபா அப்துல் பாஸித் அஹ்மத், அப்துல் மஜீத் அஸ்ஸின்தானி, அமெரிக்காவின் முளையவியல் மற்றும் DNA துறைப் பேராசிரியரான மார்ஷல் ஜோன்ஸன் (Prof. E. Marshall Johnson) என்போரது ஆய்வுகளின் பின்பு ரியாத், கெய்ரோ, இஸ்லாமாபாத் போன்ற இடங்களில் அறிவியல் அற்புதங்கள் தொடர்பாக விரிவுரையாற்றிய மாநாடுகளில் அவர்கள் கூறியதாவது:

"ஆறாம் வாரத்தின் இறுதியில், 42ஆம் நாளுக்கு முன்பு முளையம் தெளிவான முகத் தோற்றத்திலோ அல்லது மனித முகத்தை ஒத்த தோற்றத்திலோ காணப்படுவதில்லை. 40ஆம் நாளுக்கு முன்பு கண்களும் காதுகளும் பாலுறுப்புகளும் அவற்றின் ஆரம்ப வளர்ச்சிக் கட்டத்திலேயே இருக்கும். ஆனால் அவை இயல்பான மனித உறுப்புகளை ஒத்த தோற்றத்திலோ இருக்காது."

பேராசிரியர் T.V.N. பெர்ஸாட் (T.V.N. Persaud) 42ஆம் நாளின் பின்புள்ள சில வளர்ச்சி நிலையின் முக்கிய கட்டங்களைப் பற்றி இவ்வாறு கூறுகின்றார்:

"7ஆம் வாரத்தின் ஆரம்ப வளர்ச்சிக் கட்டத்தில், அதாவது சுமார் 42ஆம் நாள் அளவில் உறுதியும் மென்மையுமான என்புகள்தாம் சிசுவிற்கு மனிதத் தோற்றத்தை வழங்குகின்றன. அத்தோடு வளர்ந்திருந்த அச்சிசுவை நேராகவும் தலைப்பகுதியை வளைந்த வடிவிலும் உருவாக்குகின்றன. மேலும் கழுத்தில் இரு பக்கப் பகுதிகளிலிருந்தும் கண்களிரண்டும் முன்னால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகர்கின்றன. சுருக்கு பண்டிதர் நூக்கின் வாதத்தைப் பெறுகிறது.

4ஆம் வார இறுதியில் பிரிய வேண்டிய காணப்பட்ட வைவிரண்டிலும் முன்பாகத் 42ஆம் நாளின் பின்பு முன்னேற்றம் நின்று வளர்கிறது. இதற்கு முன்பு காணப்படாத விரல்கள் இதன்போது கருப் பெற்று தெளிவாகத் தோற்றம் பெறுகின்றன. 42ஆம் நாளின் பின்பு தலைப்பகுதி முதுகுக்குமிடையே இடைவெளியேற்பட்டு கழுத்து சீரான தோற்றத்தைப் பெறுகின்றது. சிசுவின் என்புகள் 12ஆம் நாளுக்கு முன்பு, அதாவது 4ஆம் வாரத்தில் வளர்ச்சியுற ஆரம்பித்திருக்கும். எனினும், இவற்றை 6ஆம் வாரத்தில் (அதாவது 42ஆம் நாளின் பின்பு) தான் தெளிவாக இனங்காண முடியும். எனினும், வெளிப்படையாக ஆணின் பாலுறுப்பையும் பெண்ணின் பாலுறுப்பையும் 12ஆம் வாரத்திலேதான் இனங்கண்டு பிரித்தறிய முடியும்."

பேராசிரியர் தொடர்ந்தும் இவ்வாறு கூறுகிறார்:

"இங்கு நாம் குறிப்பிட்ட அத்தனை பருவங்களும் அவற்றின் கால அளவுகளும் முஸ்லிம் கிரந்தத்தில் பதிவாகியுள்ள ஹுதைபா (ரழியல்லாஹு அன்ஹு) அறிவிக்கின்ற நபிமொழியில் தெளிவாகவே கூறப்பட்டுள்ளன. இந்த ஹதீஸ் கர்ப்பப்பையிலுள்ள ஒரு சிசுவின் வாழ்க்கையில் 42ஆம் நாள் எத்தனை முக்கியத்துவம் பெறுகின்றது என்பதை விளக்குகின்றது."

இதனை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் இப்படி விஞ்ஞான அறிவுபெற்று 14 நூற்றாண்டுகளுக்கு முன்பே பின்வருமாறு கூறி விட்டார்கள்;

"(கருவறையில்) 42 இரவுகள் கடந்ததும் பின்னர் அதனிடம் அல்லாஹ் ஒரு வானவரை அனுப்புகிறான். அவர் அதனை வடிவமைக்கிறார். மேலும் காதுகள், கண்கள், தோல், தசைகள், எலும்புகள் ஆகியவற்றையும் உருவமைக்கிறார். பின்பு "என் இறைவனே! இது ஆணா அல்லது பெண்ணா?" என்று வினவுகிறார். பின் உங்கள் இறைவன், தான் விரும்பியதைத் தீர்மானிக்கிறான். வானவர் அதனைப் பதிவு செய்கிறார்." (முஸ்லிம்)

எனவே நாம் அவதானித்த விஞ்ஞான ஆய்வுகளின் படி, 42ஆம் நாளின்தான் உடல் அவயவங்களும் பாலுறுப்புகளும் ஒன்று சேர்க்கப்படுகின்றன என்பது தெளிவாகிவிட்டது. இந்த நவீன கண்டுபிடிப்பையே மேற்படி ஹதீஸ் தெளிவுபடுத்துகின்றது. 42ஆம் நாளின் சிசுவின் உடல் அவயவங்கள் ஒன்றுசேர்க்கப்பட்டு அதிக மனிதத் தோற்றத்தைப் பெறும் அதேசமயம்தான் குறித்த வானவர் அச்சிசுவின் நலனையும் பார்த்து இணைக்கிறார். இதனை மேற்கூறும் ஹதீஸுவின் வாக்கியம் 13 முதல் 14 வரையிலான வசனங்கள் தெளிவுபடுத்துகின்றன. அது மாத்திரமன்றி, ரூஹ் 42ஆம் நாளில்தான் ஊதப்படுகின்றது என்பதைத் தெளிவாகவே எடுத்துக்கூறும் பின்வரும் ஹதீஸையும் விளக்கத்திற்காக எடுத்துக் கொள்ள முடியும்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்:

"உங்களை நீங்கள் வளர்வதனை நாம் பிறப்பு வரை அவனின் கருவறையில் 40 நாட்களில் ஒன்று சேர்க்கப்படும். பின்னர் அதேபோன்று அதில் அலக்காகவும் அதே போன்று முழ்காவாகவும் இருக்கும். பின்னர் அதனிடம் ஒரு வானவர் அனுப்பப்படுகிறார். அவர் அதில் ரூஹை ஊதுவார். மேலும் அவ்வானவர் நான்கு விடயங்களைப் பதிவுசெய்யப் பணிக்கப்படுகிறார். அச்சிசுவின் வாழ்வாதாரம், அதன் ஆயுட்காலம், செயல்பாடு மற்றும் அது சீதேவியானதா அல்லது அதற்கு மாற்றமானதா என்பன பற்றியதாகும்."

42ஆம் நாளின்தான் ரூஹ் ஊதப்படுகிறது என்ற நிறுவனமான முடிவு காணப்பட்டாலும் 120ஆம் நாளில், அதாவது 4 மாதங்களின்பின்தான் ரூஹ் ஊதப்படுகிறது என்ற மற்றுமொரு கருத்தும் பரவலாகவே நிலவி வருகிறது. உண்மையில் இந்த விளக்கம் எவ்வாறு தோன்றியது? அதற்கான ஆதாரம் என்ன?

## ஹதீஸுக்கு வழங்கப்பட்ட பிழையான விளக்கம்:

ரூஹ் 4 மாதங்களின்பின்தான் ஊதப்படுகின்றது என்ற வாதத்திற்கு முன்வைக்கும் ஆதாரம் இப்னு மஸ்ஊத் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கும் பின்வரும் நபிமொழியாகும். இந்த ஹதீஸுக்கு வழங்கப்பட்ட பிழையான விளக்கத்தினாலேயே ரூஹ் 4ஆம் மாதத்தில் ஊதப்படுகிறது என்ற கருத்து தோன்றியது.

عن عبد الله قال حدثنا رسول الله صلى الله عليه وسلم

وهو الصادق المصدوق إن أحدكم يجمع خلقه في بطن أمه أربعين يوما ثم يكون في ذلك علقة مثل ذلك ثم يكون في ذلك مضغة مثل ذلك ثم يرسل الملك فينفخ فيه الروح ويؤمر بأربع كلمات بكتب رزقه وأجله وعمله وشقي أو سعيد (صحيح مسلم 6893)

இந்த ஹதீஸில் வருகின்ற مثل ذلك என்ற பிரயோகத்திற்கு வழங்கப்பட்ட பிழையான விளக்கமே ரூஹ் 4 மாதங்களில் ஊதப்படுகிறது என்று கருதக் காரணமாகும். مثل ذلك என்பதன் 'அதேபோன்று' என்று பொருள். இங்கு مثل ذلك என்பது நாற்பது நாட்கள் (அர்பஈன யவ்மன்) என்று கால அளவை விளக்கும் வகையில் அதன்பால் மீட்டப்பட்டு அதேபோன்று நாற்பது நாட்கள் என்று மூன்று முறை விளக்கமளிக்கப்படுகிறது. இதனாலேயே 120 நாட்கள் அதாவது 4 மாதங்கள் என்று கருத்து காணப்படுகிறது. அதாவது நுத்ஃபா ஆக 40 நாட்கள், அலக் ஆக 40 நாட்கள், முழ்கா ஆக 40 நாட்கள் என்று கணிக்கப்பட்டு 120 நாட்கள் என்ற கருத்து கொள்ளப்படுகிறது.

இது பிழையானதொரு விளக்கமாகும். சரியான நோக்கினால் مثل ذلك என்ற பதம் 'அதேபோன்று' என்ற அர்த்தமுடைய يجمع خلقه என்ற வாக்கியத்திற்கு விளக்கமாக மீட்டப்பட வேண்டும். يجمع خلقه என்பதன் 'உங்கள் சிருஷ்டி ஒன்று சேர்க்கப்படுகின்றது' என்று பொருள். அவ்வாறு விளக்கப்படும்போதுதான் அதே போன்று நாற்பது நாட்களில் நுத்ஃபாவாகவும் அலக்காகவும் முழ்காவாகவும் (உங்கள் சிருஷ்டி) ஒன்றுசேர்க்கப்படுகின்றது என்ற சரியான கருத்தைப் பெற முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு பெறப்பட்டுள்ளதால் இந்த ஹதீஸ் ஹுதைபா (றழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கும் ஹதீஸுடன் முரண்படாது வருகிறது.

ஆனால், அல்குர்ஆன் விரிவுரையாளர்கள் பலரும் மருத்துவ அறிஞர்களும்கூட இந்த ஹதீஸின் அடிப்படையில் கொண்டுள்ள நிலைப்பாடு நான்கு மாதங்களில் அல்லது மூன்றாவது நாற்பதுகளில் அல்லது 120 நாட்களில்தான் என்று இதற்கு விளக்கம் கொடுக்கின்றனர். அவர்களது கால மருத்துவ அறிவுடன் ஒப்பிடுகையில் இது நியாயமானதுதான். ஆனால், இன்று வளர்ச்சியடைந்து வரும் மருத்துவத்தின் இம்முடிவை அல்குர்ஆன் மற்றும் ஹதீஸுடன் ஒப்பிட்டுப் பார்த்து அப்துல் மஜீத் ஸிந்தானி, முஸ்தபா அஹ்மத் போன்ற சில மார்க்க இஸ்லாமிய அறிஞர்கள் 42 நாட்களின் பின் ரூஹ் ஊதப்படுவதையே ஏற்றுக் கொள்கின்றனர்.

நுத்ஃபா, அலகா, முழ்கா என்ற படித்தரங்கள் ஒவ்வொன்றும் தனித்தனியே நாற்பது நாற்பது நாற்பது என்று 120 நாட்களில் நிகழ்கிறது என்பது பிழையான கருத்தாகும். அவ்வாறு அவைகள் யாவும் முதல் 42 நாட்களிலேயே நிகழ்ந்து விடுகின்றன என்பதுதான் நிதர்சனமான உண்மை. ஒரு வாதத்திற்காக 120 நாட்களில்தான் நுத்ஃபா, அலகா, முழ்கா என்ற படித்தரங்கள் நடைபெற்று ரூஹ் ஊதப்படுகிறது என்று எடுத்தால், ஹுதைபா (றழியல்லாஹு அன்ஹு) அவர்களின் அறிவிப்பான 42 நாட்களில் சிசுவின் அங்கங்கள் ஒன்று சேர்க்கப்படுகின்றன என்ற தெளிவான ஹதீஸுடன் இந்த ஹதீஸ் முரண்படும். அப்படியல்ல, ஹதீஸுக்கு வழங்கப்பட்ட விளக்கம்தான் பிழையாக இருக்க வேண்டும். நான்கு மாதம் என்றோ அல்லது 120 நாட்கள் என்றோ நேரடியான ஹதீஸ் ஆதாரம் இருப்பதாக எங்கும் காணவில்லை. ஆனால், 42 நாட்கள்தான் என்பது பல அறிவிப்பாளர்களூடாக ஊர்ஜிதமாகவே வந்துள்ளது. அதில் ஒன்றுதான் மேற்கூறிய ஹுதைபா (றழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கும் ஹதீஸ்.

அதேபோன்று அல்குர்ஆனில் கரு வளர்ச்சி பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ள வசனங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள ثم மற்றும் ف என்ற எழுத்துக்கள் குறிக்கும் கால அளவுகளை மேற்கூறிய அறிஞர்களின் மருத்துவ ஆய்வுகளுடனும் ஒப்பிடுகையில் 42 நாட்களைக் குறிப்பதாகவே அமைகின்றன. எனவே, ஒரு கருவின் அங்கங்கள் ஒன்று சேர்க்கப்படுவதும் அதன் அழகு, பின் ஏனையவை எழுதப்படுவதும் ரூஹ் ஊதப்படுவதும் 42ஆம் நாளில்தான் என்பது தெளிவாகின்றது. இன்னும் சில அறிஞர்கள், இப்னு மஸ்ஊத் (றழியல்லாஹு அன்ஹு) அவர்களது அறிவிப்பையும் ஹுதைபா (றழியல்லாஹு அன்ஹு) அவர்களது அறிவிப்பையும் இணைத்து வேறு விதமான விளக்கம் தருகின்றனர்.

ஹுதைபா (றழியல்லாஹு அன்ஹு) அறிவிக்கும் ஹதீஸின்படி ஒரு வானவர் 42 நாட்களிலேயே அந்த சிசுவிடம் வந்துவிடுவதாகவும் அப்போதே அவர் அச்சிசுவை உருவமைத்துவிட்டுச் செல்வதாகவும் பின்பு மீண்டும் 120 நாட்களில் வந்து ரூஹை ஊதுவதாகவும் இன்னும் அழகு, தோல், சதை போன்றவைகளை இணைத்து விடுவதாகவும் கூறுகின்றனர்.

ஆனால், ஹுதைபா (றழியல்லாஹு அன்ஹு) அறிவிக்கும் ஹதீஸில் அதாவது, 42 நாட்கள் என்று வருகின்ற அனைத்து ஹதீஸ்களிலும் அழகு, தோல், சதை, எலும்பு அல்லது ஆண், பெண் என்பன குறிப்பிடப்பட்டுள்ளன. அவ்வாறே இப்னு மஸ்ஊத் (றழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கும் (120 நாட்கள் என்று கருதிக்கொள்ளப்படும்) ஹதீஸிலும் இவை குறிப்பிடப்பட்டுள்ளன. அப்படியாயின் 42 நாளிலும் 120 நாளிலுமாக இரண்டு முறை ஒரே விடயம் பதியப்படுகின்றதா? அது அசாத்தியமானது என்பதே ஏற்கக் கூடிய கருத்தாகும்.

வானவர் இருமுறை வருகிறார் என்பதற்கு எடுத்துவைக்கப்படும் மற்றுமோர் ஆதாரத்தையும் இங்கு நோக்க வேண்டும். இப்னு மஸ்ஊத் (றழியல்லாஹு அன்ஹு) அவர்களின் அறிவிப்பின்படி நுத்ஃபா ஆக, அலகா ஆக, முழ்கா ஆக 42 நாட்களில் கரு வளர்ச்சியுற்றதன் பின்னர் வானவர் அனுப்பப்படுவதனை அல்லாஹ் ثم என்ற பதத்தினைப் பிரயோகித்து (ثم يرسل الملك) சற்றுத் தாமதித்து அவர் அனுப்பப்படுவதைக் குறிப்பிடுகின்றான். ஹுதைபா அறிவிப்பிலும் இதேபோன்று [illegible] என்று பயன்படுத்தப்பட்டுள்ளது.

எனவே இந்த இரண்டு விடயங்கள் தெளிவாகின்றன. ஒன்று 42ஆம் நாளில் பின் உருவமைப்பதற்காக வந்த வானவர் மீண்டும் ஒரு முறை 120ஆம் நாளிலும் ரூஹ் ஊதுவதற்காக வருகின்றார் என்பதாகும்.

இதுகூட இவ்விரு ஹதீஸ்களும் விளக்கப்பட்டதில் பிழையானதாகும். வானவர் 42ஆம் நாளிலும் 120ஆம் நாளிலுமாக இருமுறை அனுப்பப்படுகிறார் என்று கருத்துக் கொள்ள முடியாது. அவ்வாறு இந்த ஹதீஸ்களில் குறிப்பிடப்படவும் இல்லை. இங்கு கவனிக்க வேண்டிய விடயம், முன்னையதை நுத்ஃபா ஆக, அலகா ஆக, முழ்கா ஆக மாற்றுவதற்கு வானவர் அனுப்பப்படுவதில்லை. அது இயற்கையாகவே இறைவன் நியதிப்படி நடந்து செல்கின்றது. இறுதியில் 42ஆம் நாள் ஆகும்போதுதான் அல்லாஹ் வானவரை அனுப்புகிறான். இதனைத்தான் [illegible] 'ثم يرسل الملك' என்று நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள். [illegible] என்று அல்குர்ஆன் குறிப்பிடுவதும் இதனையே.

ஆக, 42ஆம் நாளின் இறுதியில் அல்லாஹ் வானவரை அனுப்பி அக்குழவியின் அங்க அவயவங்களை ஒன்று சேர்த்து செவ்வைப்படுத்தி அழகு, அமல், ரிஸ்க் என்பவற்றையெல்லாம் பதிந்த பின்னர் ரூஹையும் ஊதிவிடுகிறான். நாம் ஆரம்பம் முதல்கொண்டு அல்குர்ஆனிலும் ஹதீஸ்களிலும் ஆதாரங்களுடனும் நவீன மருத்துவ விஞ்ஞானத்தின் துணையுடனும் கட்டம் கட்டமாக அவதானித்ததற்கமைய 42 நாட்களின் இறுதியில்தான் ரூஹ் ஊதப்படுகிறது என்று தெளிவாகின்றது. அல்லாஹ்வே யாவற்றையும் அறிந்தவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# What's your plan after O/L & A/L?

Affiliated with:

Start a Foundation Degree Programme...

- Information Technology
- Marketing
- Hospitality Management
- Tourisam and Business Studies

Foundation Degrees are higher education qualifications that combine academic study with work-based learning. Designed jointly by universities, colleges and employers, they are available in a range of work-related subjects.

Interviews and Spot Admissions open from

09th Jan 2012

Certificate Level (6 months) → Diploma Level (6 months) → Advanced Diploma / Graduate Diploma (6 months) → Post Graduate Diploma (12 months)

Spoken English, Diploma in English, Advanced Diploma in English

## IELTS, ESOL & TOFEL

Affiliated with City & Guilds

English is a necessity in the modern world.

Why Choose IBT:
- Unique teaching methods
- Qualified and experienced lecturer
- Up-to-date course material
- Aptitude tests to ensure standards
- Tips on exam structure and methods

## Computer Courses

| | |
|---|---|
| Microsoft Office | Rs.7,900 |
| HTML/CSS | Rs.9,900 |
| C# & ASP.NET | Rs.34,900 |
| PHP & MySQL | Rs.18,900 |
| JAVASCRIPT & AJAX | Rs.24,900 |
| J2EE | Rs.19,900 |

# Study Abroad..

## UK, New Zealand, Australia, Malaysia & Cyprus

- Admission from Colleges and Universities
- Affordable course fee
- Minimum time of processing
- Experienced documentation
- Sponsor guidance
- Minimum qualification is G.C.E O/L

IBt CAMPUS

Hotline : 0777113777

No.536-3/1, Galle Road, Colombo-03 / Tel: 0114 366334 / E-mail: info@ibtedu.lk / Web: www.ibtedu.lk


"We raise the limits to your success"




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மாவின் தாய்

பேராசிரியர் எம்.எல்.ஏ. காதர்
ஸ்தாபக உபவேந்தர்,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்



இஸ்லாமிய கலாசாரம், பண்பாடு, பாரம்பரியம் என வெளிவரும் பல்வேறு நூல்களுள் இறைதூதர் முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் வாழ்வின் சிறப்பு பற்றி எழுதப்படுபவை தனி வகையாகக் கருதப்படுவதுண்டு. இவற்றுக்கு தனியான ஒரு மதிப்பும் கௌரவமும் முஸ்லிம்களால் வழங்கப்பட்டு வந்திருக்கின்றது. உதாரணத்துக்கு ஆரம்பகாலத்தில் 'நபிகள் நாயகம்' என்ற அப்துல் மஜீத் அவர்கள் தமிழில் எழுதிய நூல் பெரிதும் பேசப்பட்டது. இதுபோல் இஸ்லாமிய இலக்கியப் பரப்பில் பல நூல்கள் அவ்வப்போது வெளியாகி இறைதூதர் முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் பரிமாணங்களைக் காட்சிப்படுத்தி சிறப்பித்துள்ளன.

இந்த வகையில் அம்மாவின் தாய் (உம்மு அய்மன்) என்ற ஒரு சிறிய நூல் புதிய கவனத்தை ஈர்ப்பதாக அமைந்துள்ளது. இந்நூல் வழியே வெளிவரும் இஸ்லாமியக் கருத்துக்கள் அற்புதமானவையாக இருக்கின்றன. சமகால சமூகத் தேவையைக் கருத்திற்கொண்டு நபியவர்களின் வரலாறு எழுதப்பட்டுள்ளது. அதிகமான கருத்துக்களையும் பிரசாரங்களையும் விட்டு விலகி இஸ்லாத்தின் அடிப்படைக் கருத்துக்களை உடன் அறியும் வண்ணம் இது கோர்வை செய்யப்பட்டுள்ளது.

உண்மையில் பெருமானார் அவர்களின் அற்புதமான வாழ்வை வரலாறு கூறும் நோக்கில் எழுதப்பட்ட நூல்களில் இது புதுமையானது என்பதால் அது விசேடமானது. ஏனெனில், இந்நூலில் கையாளப்பட்டுள்ள புதுமையான அணுகுமுறையானது இந்நூலை மகிழ்ச்சியளிக்கும் படைப்பாக ஆக்கியிருக்கிறது. பெருமானார் குடும்பத்தின் சேவகப் பெண்மணியொருவர் பெருமானாரின் வாழ்வு பற்றிப் பேசுவதாக உருவகம் செய்து எழுதப்பட்டுள்ளது.

ஒரு பணிப்பெண் தான் பணிபுரியும் குடும்பத்தில் இடம்பெறும் நிகழ்வுகள் குறித்து அவரே மனம் திறந்து சொல்லும்போது வெளிவரும் வெளிவரும் தொடர்பும் இந்நூலுக்கு அழகு சேர்க்கின்றது. இப்பணிப் பெண்ணின் இயற்பெயர் பரகா. ஒரு பணிப்பெண் தான் பணிபுரியும் குடும்ப சூழ்நிலை, குடும்ப உறவுமுறைகள், கொடுக்கல் வாங்கல்கள், திருமண பந்தங்கள் மனம் விட்டுப் பேசும்போது வெளிவரும் உணர்வு வெளிப்பாடு இந்நூலில் தெரிகின்றது.

பெருமானார் பிறந்து வளர்ந்த காலம் முதல் அவர் மரணிக்கும் வரையிலான காலம் வரைக்கும் பெருமானார் வாழ்வில் இடம்பெற்ற சம்பவங்களை ஒரு குடும்பப் பெண்ணாகச் சொல்கிறார். இந்நூல் நமக்குத் தெரிந்த பல விடயங்களை இலகுவாக விளக்குவதோடு சொல்லவும் மனதில் பதிய வைத்துக் கொள்ளவும் முடிகிறது. அரேபிய பாலைவன மக்களின் வாழ்க்கை, மக்கள் வணக்க முறை, அவர்களது குலம், கோத்திரங்களுக்கிடையிலான பகைமை என்பனவற்றை பற்றிய கருத்துக்களை பல முறை சொல்லக் கேட்டிருக்கிறோம்.

ஆனால் அம்மாவின் தாய் இந்நூலில் அடுத்த வீட்டுக் கதை போல எமக்குப் புலப்படுகிறது. தந்தையும் மகனும் (அப்துல்லாஹ்வும் அப்துல் முத்தலிபும்) ஒரே நாளில் திருமணம் செய்து கொண்டார்கள். இது சுவாரஸ்யமான விடயம் போலத் தெரிகிறது. அதேபோல் பெருமானார் அவர்களும் கதீஜா நாயகி மரணத்தின் பின்பு பல திருமணங்களைச் செய்து கொள்கிறார்கள். பல திருமணங்களுக்கு மறுப்புச் சொல்கிறார்கள். இவை யாவும் கதைப் போக்கில் சுவாரஸ்யமாகவே சொல்லப்படுகின்றன.

இறைதூது வந்தபோது பெருமானார் குடும்பத்தில் ஏற்பட்ட அச்சம், சஞ்சலம், அவரை எதிர்த்தவர்கள், எத்தகையவர்கள் என்ற வகையில் அனைவரது பாதையை ஊர் முழுவதும் பரவிய போது அதனால் ஏற்பட்ட குழப்பம், கொந்தளிப்பு பற்றி பெயர்பெற்ற இந்நூல் வருந்தும்படியாக சம்பவங்களை வர்ணிக்கின்றார். முஹம்மதைத் தவிர வேறு யாரும் இல்லை; அப்துல்லாஹ்வின் புதல்வர்; அப்துல் முத்தலிபின் பேரன்; ஆமினாவின் மகன்; உண்மையை எப்போதும் சத்தியமாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருணையாளர்; யாருக்கும் அநீதி இழைக்காதவர்; எளிமையும் தங்கி வாழ்பவர்; எவருக்கும் உதவி செய்பவராக மக்களால் காணப்படுபவர்.

ஆனால், அவர் சொல்லுகின்ற செய்தி இருக்கின்றதே அதுதான் எங்கள் உள்ளங்களைத் துளைத்துச் செல்கின்றது. மூன்றாம் இரண்டு நாங்கள் நூற்றுக்கும் அதிகமான கடவுள்களை கஃபாவில் வைத்தே வணங்குகிறோம். ஆனால், இவற்றை அவர் வீணே என்கிறார். அவற்றுக்கு சக்தி ஏதும் இடமில்லை என்கிறார். நாங்கள் நேசித்த, அனுபவித்த எல்லா பழக்கவழக்கங்களையும் பிழை என்கிறார். எங்கள் கண்களுக்குப் புலப்படாத மறைபொருளை கடவுளாக ஏற்றுக் கொள்ளச் சொல்கின்றார். இவரை எப்படி நம்புவது?

இவ்விபரங்களை பல முறை கேட்டிருக்கிறோம். ஆனால், இப்போது அது பற்றிப் பேசுவதும் எம்மை வந்தடைகின்ற வேகமும் அற்புதமானது. இவற்றையெல்லாம் சொல்கின்ற முறையும் உண்மை நீதியான வசனங்களும் பரகாவை நடுங்க வைக்கிறது. பரகா பெருமானார் அவர்களின் தந்தை அப்துல்லாஹ்வுக்கு வழங்கப்பட்ட ஒரு கறுப்பு அடிமை; ஹபஷி குலத்தைச் சேர்ந்தவள். அப்துல்லாஹ்வுக்கு திருமணமாகும் முன்னரே குடும்பத்தில் அங்கத்தவராக வந்துவிட்டவள்.

அப்துல்லாஹ்வுக்கும் ஆமினாவுக்கும் பணிவிடை செய்யும் தொழில் இவளுக்குக் கிடைக்கிறது. பெருமானார் அவர்கள் பிறந்தபோது அப்துல்லாஹ் இருக்கவில்லை. இக்காலம் முதல் ஆமினாவுடன் இருந்து பெருமானாரைக் கவனித்து வந்தார். ஆமினாவுக்கிருந்த குடும்ப நெருக்கடி பற்றி இப்படிச் சொல்கிறார்.

"அப்துல்லாஹ் மரணிக்கும்போது எங்களுக்கு அவர் விட்டுச் சென்றது எல்லாம் ஐந்து ஒட்டகங்களும் ஒரு சில ஆடுகளும் மற்றும் சில பொருட்களும்தான். இவை தவிர நானும் அங்கிருந்தேன்.

ஆமினா நாயகி பயணம் செய்யும்போதெல்லாம் ஹபஷி குலத்துப் பெண்ணும் கூடவே செல்வாள். அவளிடமே பிள்ளையிருக்கும். தூர இடங்களுக்குச் செல்லும்போது ஓர் ஒட்டகத்திலும் அவர்கள் இருவரும் பிறிதோர் ஒட்டகத்திலும் சேர்ந்து சென்றார்கள். ஆமினா மறைந்தபோது குழந்தைக்கு வயது ஆறு. அப்துல் முத்தலிபின் கண்காணிப்பின் கீழ் குழந்தை. ஆனால், பிள்ளை பரகாவுடன்தான் வாழ்ந்தது. அப்துல் முத்தலிப் மறைந்தபோது அபூ தாலிபின் கண்காணிப்பின் கீழ் குழந்தை. ஆனால், பரகாவுடன்தான் அவர் இருந்தார்.

இவ்வாறு பெருமானாரோடு நெருங்கியிருக்கின்ற பாக்கியம் பரகாவுக்கே கிடைத்தது. பெருமானார் உயிர்நீத்தபோதும் அவர் அங்கேயே இருந்தார். பெருமானாருக்கு நபித்துவம் கிடைத்தபோதும் அவர் அங்கேதான் இருந்திருக்கிறார். மிக நீண்ட உறவில் ஒரு சில காலம் மாத்திரமே பரகா இணைந்திருக்கவில்லை.

அதுவும் பெருமானாரின் கட்டளைப்படி பரகா திருமணம் செய்து கணவருடன் சென்று அய்மன் என்ற பிள்ளையைப் பெற்றுக் கொள்ளும் வரை. அய்மன் பிறந்த பின் அவரது கணவர் இறந்து விடுகிறார். இதனால் அவர் மீண்டும் பெருமானாருடன் வந்து இணைந்து கொள்கிறார். இதன் பின்பே உம்மு அய்மன் என்ற பெயருக்குச் சொந்தக்காரியானார் பரகா.

உம்மு அய்மன் திரும்பி வந்தபோது பெருமானாரின் முழு வேலைகளையும் கவனிக்கும் பொறுப்பாளராக ஸைத் காணப்பட்டார். யார் இந்த ஸைத்? கதீஜா நாயகிக்கு திருமணப் பரிசாக வந்தவரே ஸைத் ஆவார். கதீஜா நாயகியின் மருமகன் அவரின் திருமண அன்பளிப்பாக தன்னிடம் இருந்த ஓர் அடிமையை தேர்ந்து கொள்ளும்படி கதீஜா நாயகியிடம் வேண்டிக் கொண்டார். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட அடிமையே ஸைத் ஆவார். இவரையே தன் கணவருக்கு உதவியாளராக வெகுமதியாக்கினார் கதீஜா நாயகி.

ஸைதின் வரவும் பரகாவின் விடுதலையும் ஒரே நேரத்தில் ஏற்பட்டது. ஸைதை சாதாரண ஒரு பணியாளராக பெருமானார் வைத்துக் கொள்ளவில்லை. அவரது பிள்ளையாகவே பிரகடனப்படுத்தினார். பெருமானாரின் பொறுப்புக்கள் யாவற்றுக்கும் முகம் கொடுக்கும் ஒரு திறமைசாலியாக ஸைத் காணப்பட்டார்.

நல்ல குணத்தையும் கொண்டவர் ஸைத். பரகாவை விட வயதில் குறைந்தவர். இவ்வாறு இருந்தபோதும் இவர்கள் இருவருக்கும் நபியவர்கள் திருமணம் செய்து வைக்கிறார்கள். "சுவர்க்கத்தில் உள்ள ஒரு பெண்ணை ஒருவர் விரும்பினால் அவர் பரகாவை மணமுடிக்கட்டும்" என நபியவர்கள் சொன்னபோது, அதைக் கேட்டுக் கொண்டிருந்த ஸைத் "அப்படியானால் எனக்கே முடித்துத் தாருங்கள்" என்று சொல்ல அவர்களது திருமணம் நடந்தேறியது. இவர்களுக்குப் பிறந்த பிள்ளையே உஸாமாவாகும்.

உஸாமா பெருமானார் குடும்பத்தில் அதிக முக்கிய பொறுப்பாளராவார். பெருமானார் மரணிக்கும் தறுவாயில் இடம்பெற்ற யுத்தத்துக்கு தலைமையாக இவரையே நியமித்து அனுப்பினார். அந்தளவு மதிப்பும் கௌரவமும் நம்பிக்கையுமுள்ள ஒருவராக அவர் விளங்கினார். உஸாமாவின் தந்தை பெருமானாரின் கட்டளையை ஏற்று போர் புரிந்து, உயிர்நீத்த இடத்திற்கே உஸாமா அனுப்பப்படுகிறார். ஸைதைக் கொலை செய்தவர்களைப் பிடித்து வருமாறு பணிக்கப்பட்டார். இதில் உஸாமா வெற்றி பெற்றுத் திரும்பினார்.

ஆனால், பெருமானாரின் ஆணையை மனம் குளிர உஸாமா யுத்த களம் சென்றாலும் அவரது உள்ளமும் உயிரும் பெருமானாரைச் சுற்றியே வந்து கொண்டிருந்தது. ஏனெனில், யுத்தத்திற்குப் பெருமானார் ஆணையிட்ட போது பெருமானார் மரணப் படுக்கையில் வீழ்ந்து விட்டார்கள். ஆயினும், இறுதிச் சடங்கு செய்யும் பொறுப்புகளுக்கு உஸாமா வந்துவிடுகிறார். ஸைத் இல்லாத குறையை உஸாமா நிரப்பி விடுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமானார் அவர்களின் வாழ்வில் பக்கபலமாக நின்று உழைத்த இம்மூவரும் பெருமானார் வாழ்வை தம் உயிரைவிட நேசித்தவர்கள் போல் அறிந்தவர்களாகும்.

இவர்கள் கூறும் வரலாறாகவே 'அம்மாவின் தாய்' என்ற நூல் எழுதப்பட்டுள்ளது. இஸ்லாமிய வரலாறு, பாரம்பரியம், வழிபாடு, வாழ்க்கை முறை, இஸ்லாமிய சிந்தனைகள், தெளிவுரைகள், விளக்கவுரைகள், சமூகவிய சிந்தனைகள் என பற்பல ஆக்கங்கள், சமகால இஸ்லாமியத் தமிழ் இலக்கியப் பூங்காவை அலங்கரித்து நிற்கும் இவ்வேளையில் அம்மாவின் தாய் என்றதொரு குறுங்காவியம் போன்றதொரு நூலின் வெளியீடு பேசப்பட வேண்டிய நூலாக அமைந்து காணப்படுகின்றது.

இது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் மகோன்னத வாழ்வின் சிறப்பம்சங்களை சமகால மக்களுக்கு அறிமுகம் செய்யும் வகையில் எழுதப்பட்டுள்ளது. இதன் கருப்பொருள், உள்ளடக்கம், மொழி அமைப்பு என்பன யாவும் சிறப்புற்று விளங்குகின்றன. இதன்வழி வரும் இஸ்லாமியப் போதனைகள் எம்மனதில் ஆழமாகப் பதிந்து விடுகின்றன. அதிகமான கருத்துக்களையும் பிரசாரங்களையும் விட்டு விலகி மிக முக்கியமான சம்பவங்களுக்கு முதலிடம் கொடுத்த இஸ்லாத்தின் தூய சிந்தனையைக் காண வழியமைத்துள்ளது இந்நூல்.

இந்நூல் பல்வேறு சிறப்புக்களை உள்வாங்கி திகழ்வதற்கு நூலாசிரியர் அப்துல் ஜப்பார் முஹம்மத் ஸனீர் அவர்கள் இந்நூலை நுட்பமான முறையில் ஒழுங்குபடுத்தியிருப்பதும் கையாண்டுள்ள அணுகு முறையுமே காரணமாகும்.

பெருமானார் பற்றிப் பேசும்போது வெளியாகும் சம்பவங்களும் சாதனைகளும் இந்நூலை உயிர்ப்பித்து உயர்த்துகின்றன. பெருமானாரின் அக அசைவுகளையும் உணர்வுக் கோலங்களையும் உறவு முறைகளையும் உள்ளிட்டு சம்பவங்களையும் நிறைய அறிந்திருந்த ஒரு பெண்மணி இருந்தாள் என வரலாறு கூறுகின்றது. இதுதான் இந்நூலின் அடித்தளம்; மகிமை; மகோன்னதம்; அவளோடு நாம் ஐக்கியப்பட்டு அவள் கூறும் ஒவ்வொன்றையும் உருக்கமாகவும் உண்மையாகவுமே தரிசித்து விடுகின்றோம். யார் இந்த அடிமை? வேறு யாருமில்லை. ஹபஷி குலத்தைச் சேர்ந்த பரகாவே இவர். இவரையே பெருமானார் உம்மு ஐமன் என்றழைத்தார்கள்.

பெருமானார் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை எழுதுவது என்பது இலகுவான காரியமல்ல. அவ்வாறு எழுதும்போது குற்றம் குறையில்லாது எழுத வேண்டும் என்பதுடன் அது ஆதாரபூர்வமானதாகவும் அமைய வேண்டும். இதனை அப்துல் ஜப்பார் முஹம்மத் ஸனீர் கச்சிதமாக நிறைவேற்றியிருக்கிறார்.

**நீங்களும் 6 மாதத்தில் ஒரு தொழிநுட்பதுறை தொழிநுட்பவியலாளராக ஆகலாம்**

எமது நிறுவனம் கடந்த 11 வருடகாலமாக நூற்றுக்கணக்கான தொழில் நுட்பவியலாளர்களை பல்வேறு துறைகளில் உருவாக்கி வெற்றி கண்டுள்ளது.

எமது நிறுவனம் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவில் (TERTIARY AND VOCATIONAL EDUCATION COMMISSION - P03/0075) பதிவு செய்யப்பட்ட அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனமாகும்.

| | பாடநெறிகள் | Course Fee |
|---|---|---|
| 01. | Ref & A.C - குளிரூட்டல் பெட்டியும் வளிச்சீராக்கியும் | 12,000/- |
| 02. | Electrical Power - மின்னியல் | 8,500/- |
| 03. | Auto Mobile - வாகன திருத்தல் | 10,000/- |
| 04. | Auto Electrical - வாகன மின்னியல் | 10,000/- |

எமது பாடநெறிகள் சம்பந்தமான விபரம்

- [illegible]
- [illegible] (NVQ) [illegible]
- [illegible]
- [illegible]

* ADHALA TECHNICAL INSTITUTE
91B, JAMIAH NALEEMIAH ROAD, CHINA FORT BERUWALA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Make Your Child a Proud Student of a Unique Institution

What is the secret of our success?

**Highly Qualified, Professionally Trained, experienced staff. Reputed Globally approved partner and 10 years of experience in the field**

1. **Grow In Fun English Medium Pre-School**
   **Play School** for 3 – 4 years old and **Pre School** for 4 – 5 years old.
2. **Week-end Primary School for Tamil Medium & and Sinhala Medium Students** (Grade – 1 to Grade – 5 English Medium)
3. **Cambridge ESOL Courses (Grade 1 to A/L)**
   **Levels:** Starters, Movers, Flyers, KET, PET and FCE

Examinations in Sri Lanka are conducted by Internationally Reputed Cambridge University with the cooperation of British Council in Sri Lanka

**Director & Instructor**
Reeza Lathief B.Ed. (English Education)
Professionally Trained Teacher in English

**Unique School of English**
**51/2 A, Zahira Road, Mawanella.**

**Phone: 0352243751**
**mobile: 0777844408**

BRITISH COUNCIL

UNIVERSITY OF CAMBRIDGE


## வாசகர் கவனத்திற்கு!

கடந்த அல்ஹஸனாத் (டிசம்பர் 2011) இதழில் வெளியான 'லிபி கொள்ளைச் செய்யும் கிலாபத்' கட்டுரையில் CNN என்பதற்குப் பதிலாக CBN என திருத்தி வாசிக்குமாறு வேண்டுகிறோம்.

மேற்படி கட்டுரையின் மூலச் செய்தி விவரண வீடியோவை தமிழ் கட்டுரையுடன் www.puttalamonline.com இணையதளத்தில் சிறப்புக் கட்டுரைகள் எனும் பகுதியில் பார்வையிடலாம். (ஆ-ர்)


**மாதம்பையில்**
**வீடு விற்பனைக்கு**

[illegible]

**தொடர்புகளுக்கு:**
**0776 542 542**

# தபால் மூலக் கல்வி

பின்வரும் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. Diploma in Social Science – சமூக விஞ்ஞானம்.
2. Diploma in Disaster Management – அனர்த்த முகாமைத்துவம்
3. Diploma in Psychology – உளவியல்
4. Diploma in Library Management – நூலக முகாமைத்துவம்
5. Diploma in Human Recourse Management – மனித வள முகாமைத்துவம்
6. Diploma in Educational Management – கல்வி முகாமைத்துவம்
7. Diploma in Montessori – ஆரம்ப பாடசாலை
8. Diploma in Marketing – சந்தைப்படுத்தல்

அனைத்து பாடநெறிகளும் தபால் மூலம் கற்பிக்கப்படும். இறுதியில் Certificate வழங்கப்படும். காலம் 6 மாதம். கட்டணம் 8000.00 (மாதாந்தம் 200.00 ரூபாய்) தபால் செலவு [illegible] தமிழ் மொழி மூலம் Application form, மேலதிக விபரங்களை பெற [illegible] தொலைபேசிக்கு [illegible]. முகவரியை SMS செய்யுங்கள் அல்லது [illegible] பெறலாம். 0713144536

INSTITUTE OF SOCIAL & TECHNICAL STUDIES
[illegible], Main Street, Maruthamunai 3, Kalmunai
மின்னஞ்சல்: [illegible]@gmail.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முந்திக் கொண்டவர்கள்... (35ஆம் பக்கத் தொடர்)

"தங்க இழைகளால் நெய்யப்பட்ட இருக்கைகளில் எதிரெதிரே சாய்ந்திருப்பார்கள். அவர்களின் அருகாமையில் நிரந்தரச் சிறுவர்கள் ஓடுகின்ற ஊற்றிலிருந்து நிரப்பப்பட்ட கோப்பைகளையும் கெண்டிகளையும் பானங்களின் கிண்ணங்களையும் ஏந்தியவாறு சுற்றிக் கொண்டிருப்பார்கள். அவற்றை அருந்துவதனால் அவர்களுக்குத் தலைக்குத்தல் ஏற்படாது. அவர்களின் அறிவு பேதலிக்கவும் செய்யாது. அவர்கள் விரும்பியதைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்காக அச்சிறுவர்கள் அவர்களுக்கு விதவிதமான கனிவர்க்கங்களைப் பரிமாறுவார்கள். மேலும் அவர்கள் விரும்புகின்ற பறவை இறைச்சியையும் உண்பதற்காக அளிப்பார்கள். மேலும், அழகிய கண்களையுடைய 'ஹூர்' எனும் மங்கையரும் அவர்களுக்காக இருப்பர். அவர்கள் மறைத்து வைக்கப்பட்ட முத்துக்களைப் போன்று அழகாக இருப்பார்கள். இவை அனைத்தும் உலகில் அவர்கள் செய்து கொண்டிருந்த செயல்களுக்குக் கூலியாக அவர்களுக்குக் கிடைக்கும்." (56: 15-24)

முந்திக் கொண்டவர்களுக்கு சுவனத்தில் கிடைக்கும் அந்தஸ்து நடுத்தர நிலையில் நற்செயல் புரிந்தவர்களுக்கு (வலதுசாரிகளுக்கு) இருக்கும் அந்தஸ்தில் இருந்து எவ்வாறு வித்தியாசப்பட்டு சிறப்புப் பெறுகிறது என்பதை சில வசனங்கள் விவரிக்கின்றன.

"முத்திரையிடப்பட்ட மிகச் சிறந்த மதுபானம் (அர்ரஹீக் அல்மக்தூம்) அவர்களுக்குப் புகட்டப்படும். அதன் மீது கஸ்தூரி முத்திரை பதிந்திருக்கும். போட்டியிட்டு முந்திக் கொள்ள முயல்பவர்கள் இதனை அடைந்து கொள்வதில் முந்திக் கொள்ள முயலட்டும். மேலும் அந்தப் பானத்தில் 'தஸ்னீம்' கலந்திருக்கும். அது ஒரு நீரூற்று. (அல்லாஹ்வுக்கு) நெருக்கமானவர்கள் அதன் நீருடன் மது அருந்துவார்கள்." (83: 25-28)

"முந்திக் கொண்டவர்கள் நேரடியாக தஸ்னீம் என்ற ஊற்றிலிருந்து மது அருந்துவார்கள். ஆனால், நடுத்தர நிலையில் செயல்பட்ட வலதுசாரிகளுக்கு அந்த நீரூற்றில் இருந்து கொஞ்சம் மதுபானம் எடுத்து அதனைச் சிறிது கலந்து வேறு ஒரு பானம் தயார் செய்து கொடுக்கப்படும். முந்திக் கொண்டவர்களைப் போல இவர்கள் நேரடியாக நீரூற்றிலிருந்து தூய தஸ்னீமை அருந்த முடியாது" என இவ்வசனங்களுக்கு இமாம் இப்னு தைமிய்யா (றஹிமஹுல்லாஹ்) விளக்கமளித்துள்ளார்கள். தஸ்னீம் என்பதை அல்லாஹுத் தஆலா ஸூறா அத்தஹ்ரில் 'காபூர்' என்று கூறுகின்றான்:

"நல்லவர்கள் (சுவனத்தில்) கிண்ணங்களில் இருந்து கற்பூரம் கலந்திருக்கும் மதுவை அருந்துவார்கள். அது ஓடிக் கொண்டிருக்கும் ஊற்றின் நீராகும். இதன் நீரைக் கலந்தே அல்லாஹ்வின் அடியார்கள் (வலதுசாரிகள்) மது அருந்துவார்கள்." (76: 5-6)

இவ்வசனத்தில் 'நல்லவர்கள்' என மொழிபெயர்க்கப்பட்டுள்ள அப்ரார் எனும் பதம் முந்திக் கொண்டவர்களையே சுட்டிக்காட்டுவதாக முபஸ்ஸிர்கள் குறிப்பிடுகின்றனர்.

இத்தகைய பாக்கியங்களை அடைந்து கொள்ள இன்றைய சூழலில் வாழ்பவர்களும் போட்டி போட்டு முந்திக் கொள்ள முடியும். ஆம், இஸ்லாம் கவனிப்பாரற்று செத்து மடிந்து கொண்டிருக்கின்ற இந்தக் காலத்தில் அதற்குப் புத்துயிரூட்டி அதனை ஓர் அந்தஸ்தில் உயர்த்தி வைக்கின்ற அரண்களாக நாங்கள் மாற முடியுமானால்... அதன் எழுச்சிக்கு நமது நேரம், ஆயுள், உழைப்பு, ஆற்றல்கள், திறமைகள், சொத்து செல்வங்கள், இறுதிக் கட்டமாக தேவைப்படின் இன்னுயிரையும் அர்ப்பணிக்க நாங்கள் தயாரென்றால்... இன்ஷா அல்லாஹ் முந்திக் கொண்டவர்களின் பட்டியலில் நாமும் இடம்பெற முடியும். ■

## இமாம் அஹ்மத் (றஹ்)... (16ஆம் பக்கத் தொடர்)

08. அல்முகத்தம் வல்முஅக்கர் பீ கிதாபில்லாஹ்
09. பழாஇலுஸ் ஸஹாபா
10. அர்ரத்து அலா ஸனாதிகா வல்ஜஹமிய்யா பீமா ஷக்கத் பீஹி மின் முதஷாபிஹில் குர்ஆன்

பொதுவாக இமாம் அஹ்மத் எழுத்தை விரும்பவில்லை. தனது பத்வாக்கள்கூட தொகுக்கப்படுவதையோ பரவலாக நகர்த்தப்படுவதையோ விரும்பவில்லை. ஆயினும், ஹதீஸ்களை எழுதிக் கொள்வதை மட்டும் அவர் விரும்பவே செய்தார். அவரின் இந்நிலைப்பாட்டின் காரணமாக அவர் எழுதிய நூல்கள் மிகவும் குறைவானவையாகும். எழுதப்பட்டுள்ள நூல்களும் ஹதீஸ்களுடன் தொடர்பானவையாகவே பெரும்பாலும் அமைந்துள்ளன.

பிக்ஹுத் துறையில் இவர் எழுதிய நூல்கள் எதுவும் இல்லை என்றே கூற வேண்டும். இவரது சட்டத் தீர்ப்புகளும் சன்மார்க்க நிலைப்பாடுகளும் பிற்பட்ட காலத்தில் இவரது பிள்ளைகளான ஸாலிஹ், அப்துல்லாஹ் உட்பட மற்றும் பல மாணவர்களால் தொகுக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டன. அதனாலேயே ஹன்பலி பிக்ஹை தொகுத்தவர்களின் பட்டியல் நீண்டதாக உள்ளது. இவர்களுள் அபூ பக்ர் அல்கல்லால் என்பவர் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர். (தொடரும்)

அல்ஹஸனாத்
உங்கள் குடும்ப இதழ்
நீங்கள் வாசியுங்கள்
பிறரை வாசிக்கச் செய்யுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகாஹ் சேவை

## மணமகன் தேவை

குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்த 1989ஆம் ஆண்டு பிறந்த உ.பொ.த. உயர் தரம் வரை கற்ற சிறந்த குடும்பப் பின்னணியைக் கொண்ட (தந்தை அரச உயர் பதவி வகித்தவர்) மார்க்கப்பற்றுள்ள மணமகளுக்கு மார்க்கப்பற்றுள்ள மணமகன் தேவை. **தொடர்புகளுக்கு: 0777874982**

நுவரெலியா மாவட்டத்தைச் சேர்ந்த திருமணம் முடித்து தகுந்த காரணங்களுக்காக இரண்டே மாதங்களில் விவாகரத்துப் பெற்ற மார்க்கப் பற்றுள்ள மணமகளுக்கு (வயது 21, ஒரு வயது குழந்தை ஒன்று உள்ளது) மார்க்கப்பற்றுள்ள மணமகனை அவரது குடும்பத்தினர் எதிர்பார்க்கின்றனர். மணமகன் தாரம் இழந்தவராக அல்லது தகுந்த காரணத்துக்காக விவாகரத்துப் பெற்றவராக இருந்தாலும் ஏற்றுக் கொள்ளப்படும். 32 வயதுக்குக் கீழ்ப் பட்டவர்கள் விரும்பத்தக்கது. **தொடர்புகளுக்கு: 0778649484**

புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்த தகுந்த காரணங்களுக்காக விவாகரத்துப் பெற்ற மார்க்கப்பற்றுள்ள மணமகளுக்கு (வயது 32, குழந்தைகள் இல்லை) மார்க்கப்பற்றும் நற்குணமுமுள்ள மணமகனை அவரது பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். மணமகனுக்கு குழந்தைகள் இல்லாதிருப்பது விரும்பத்தக்கது. விவாகரத்துப் பெற்றவர்களது விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்படும். **தொடர்புகளுக்கு: 0772694301**

கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த மார்க்கப்பற்றுள்ள பட்டதாரி மணமகளுக்கு (வயது 27, உயரம் 5' 2") அவரது பெற்றோர் தகுந்த மணமகனை எதிர்பார்க்கின்றனர். மணமகன் சொந்த தொழில் புரிபவராகவோ அல்லது தனியார் துறையில் தொழில் புரிபவராகவோ இருப்பது விரும்பத்தக்கது. **தொடர்புகளுக்கு: 0777436366**

அநுராதபுர மாவட்டத்தைச் சேர்ந்த சமூகவியல் பட்டப் படிப்பை மேற்கொள்ளும் (சர்வதேச இஸ்லாமிய பல்கலைக்கழகம்- மலேசியாவில்) முஸ்லிமாவும் பாட நெறியைப் பூர்த்தி செய்த) மார்க்கப்பற்றும் நல்லொழுக்கமுமுள்ள மணமகளுக்கு (வயது 36) 37-40 வயதுக்குட்பட்ட மார்க்கப்பற்றுள்ள மணமகனை அவரது பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். மணமகன் அரச அல்லது தனியார் துறையில் தொழில் புரிபவராக இருப்பது விரும்பத்தக்கது. தகுந்த காரணங்களுக்காக இஸ்லாமிய ஷரீஆ அடிப்படையில் விவாகரத்துப் பெற்றவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

**தொடர்புகளுக்கு: 0758395319, 0255733656**

நீர்கொழும்பைச் சேர்ந்த பெற்றோரை இழந்த மார்க்கப்பற்றும் நல்லொழுக்கமுமுள்ள மணமகளுக்கு (வயது 29) மார்க்கப்பற்றுள்ள மணமகனை அவரது குடும்பத்தினர் எதிர்பார்க்கின்றனர்.

**தொடர்புகளுக்கு: 0778921925**

நீர்கொழும்பைச் சேர்ந்த, மார்க்கப்பற்றும் நல்லொழுக்கமுமுள்ள, தகுந்த காரணங்களுக்காக விவாகரத்துப் பெற்ற மணமகளுக்கு (வயது 35, ஒரு மகன் உள்ளார்) மார்க்கப்பற்றுள்ள மணமகனை அவரது பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். **தொடர்புகளுக்கு: 0778921925**

## சிறுவர் பூங்கா

முதல் பரிசுக்குரியவர்:

**எம்.ஆர். பஹீமா**
ஹபுகஸ்தலாவ

ஜனவரி மாத அல்ஹஸனாத் இதழைப் பரிசாகப் பெறுவோர்

எம்.ஐ.எம். மஹ்பூபா
ஏறாவூர்

ஜே. பாதிமா ஸப்ரா
அக்கரைப்பற்று

பாரூக் ஸஹ்னாஸ்
கிண்ணியா

எம்.யூ.எப். நும்ரா
மாதம்பை

பஸ்னா உவைஸ்
உடைப்பனை

எம்.ஆர்.எம். நஸான்
குருணாகல்

ஸம்ஹா மின்ஸா
பேருவளை

ஹஸன் ஏ. அப்ரா
மாவனெல்லை

பாஹானா அமீர்
களுத்துறை

எம்.ஆர்.எம். நாஸிக்
அக்குறணை

குறிப்பு:
விடைகளை தபால் அட்டையில் (Post Card) எழுதி அனுப்புவது வரவேற்கத்தக்கது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# V CITY HOTEL

இஸ்லாமிய சூழலில் பாதுகாப்பான தங்குமிட வசதி

SPACIOUS A/C & NON A/C
ROOMS WITH HOT WATER,
CABLE TV,
MINI FRIDGE,
INTERNET,
TELEPHONE,
AIRLINES RESERVATION,
AMPLE CAR PARKING FACILITIES



குடும்பத்துடன் தங்குவோருக்கு பெரிய அறைகளும் உண்டு

**Tel:- 0094-11-5748720, 0094-11-5748721, 0094-11-2372240**

ABDUL HASAN - 0094-77-3507663

No:-286, 1st Floor, R.A. De Mel Mawatha, Colombo - 03, Sri Lanka. www.vcityhotel.com

STUDY IN **LONDON / USA**

*CANADA, POLAND, GERMANY, CYPRUS, NEW ZEALAND, MALAYSIA, SINGAPORE, INDIA*



- UK UNIVERSITIES SCHOLARSHIP AVAILABLE.
- NEW ZEALAND OFFER LETTER WITHIN 2 DAYS.
- CYPRUS (UNDER EUROPE UNION AND GUARANTEED VISA)
- AWARD WINNING AGENT FOR LAST 13 YEARS.....

35 நாட்களில் - VISA

BE A DOCTOR: STUDY YOUR MEDICAL DEGREE IN UKRAINE OR PHILIPHINE (ENGLISH MEDIUM) - LOW COST

Courses:

BUSINESS MGT., IT., ENGINEEERING, LAW, NURSING, HOTEL MGT., TREVEL & TOURISM, BEUTY CULTURE, ELECTRONICS, AND OVER 100 OTHER COURSES

## MILLENNIUM BUSINESS ACADEMY(MBA)

MBA CITY CAMPUS


#286, R.A. De Mel Mawatha, Colombo 03. (Near the Liberty Plaza, Next to DonKarolis)

E-mail: hasan-abdul10@yahoo.com, Web: www.millmba.com

**HOTLINE:** Abdul Hasan **077 3507663**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




PUBLIC LIBRARY JAFFNA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


edexcel
advancing learning, changing lives

UNIVERSITY OF WOLVERHAMPTON

AWARDED AS FASTEST GROWING BTEC CENTRE BY edexcel

# O/L அல்லது A/L இன் பின்னர்...
# சவால்களை வெல்லும் சர்வதேசக் கல்வித் தகைமைகள்!

**இலங்கையிலேயே UK Degree இனைப் பூர்த்தி செய்வதற்கான புதிய வாய்ப்புகள்**



# BTEC HND IN

- COMPUTING
- ICT SYSTEM
- SOFTWARE DEVELOPMENT
- BUSINESS MANAGEMENT
- QUANTITY SURVEYING
- TELECOMMUNICATION ENGINEERING
- LAW
- BIOMEDICAL SCIENCE

Leading to BSc (Hons) / BA (Hons) / BEng (Hons) & LLB(Hons)
From more than 105 Universities in UK, USA, Australia & Canada etc...

**BSc (Hons) / BA(Hons) / BEng(Hons) / LLB (Hons)**
From more than 105 Universities in UK, USA, Australia & Canada etc...

↑

**BTEC HND**
Full Time / Part Time

↑

**Foundation Courses** ← **O/L**

**After A/L** → BTEC HND

HOTLINE
**011 2559255**
www.bcas.lk

For Details
**077 266 0129**
**077 283 4595**




**ISO** சர்வதேச தரச் சான்றிதழும் உயர் கல்வித்துறையில் 12 வருடம் சிறப்பும் அனுபவமும் கொண்ட BCAS Campus வழங்கும் **BTEC HND** பாட நெறிகள் குறைந்த செலவிலும், குறுகிய காலத்திலும் சர்வதேச அங்கீகாரம் கொண்ட **BSc (Hons) / BEng (Hons) / LLB (Hons)** தகைமைகளைப் பெறுவதற்கான பெறுமதிமிக்க வாய்ப்புக்களை வழங்குகின்றது.

இலங்கையில் வேகமாக வளர்ச்சிபெற்றுவரும் முதல்தர உயர்கல்விக் கல்லூரியாக **Edexcel UK** நிறுவனத்தினால் விருது வழங்கப்பட்டுள்ள **BCAS** நிறுவனம் **BTEC HND** கற்கை நெறிகளின் பின்னர் பட்டப்படிப்பின் இறுதி ஆண்டினை **UK, Australia, Canada, USA** ஆகிய நாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்களில் தொடர்வதற்கான வாய்ப்புக்களையும் **Student Visa** க்களுக்கான சகல உதவிகளையும் முற்றிலும் இலவசமாக வழங்குகின்றது.

**HND** பாடநெறிகளின் பின் பட்டப்படிப்பின் இறுதி ஆண்டினை **(Top Up Degree)** இலங்கையிலேயே பூர்த்தி செய்வதற்கான வாய்ப்புகளை **BCAS Campus** தற்போது வழங்குவதோடு சர்வதேச பல்கலைக்கழகங்கள் வழங்கும் பெறுமதி மிக்க புலமைப் பரிசில்களையும் பெற்றுத் தருகிறது. அனுபமிக்க முழுநேர விரிவுரையாளர்கள், மிகச்சிறந்த கற்கைச் சூழல், வசதியான கட்டண முறைகள் என்பன **BCAS Campus** இன் சிறப்பம்சங்களாகும்.

**British College of Applied Studies**

**32, Dharmarama Road, Colombo 6**
**Tel: 011 250 1145, 077 311 4105**

**344, Peradeniya Road, Kandy**
**Tel: 081 222 4731, 077 763 4508**

**BCAS CAMPUS**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a News Paper in GPO/QD/27/NEWS/2012

Printed by AJ Prints (Pvt) Ltd 44, Station Road, Dehiwala


புதுப் பொலிவுடன்...

புதிய முகாமைத்துவத்தின் கீழ்...

2012.01.01 ஆம் திகதி திறந்து வைக்கப்படுகிறது...

# பிஸ்மி ஹோட்டல் அன்ட் பேக் ஹவுஸ்




- சுவையான, சுத்தமான உணவு வகைகள்
- பகல் - இரவு சேவை
- நீண்ட தூரப் பயணிகளுக்கான சேவை
- பஸ் மற்றும் வாகனத் தரிப்பிட வசதிகளுடன்



# BISMI HOTEL & BAKE HOUSE

பிஸ்மி ஹோட்டல் அன்ட் பேக் ஹவுஸ்

437, தம்புள்ளை வீதி, முத்தெட்டுகல, குருணாகல்

தொலைபேசி: 0772985955


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org